T20

சக்தி

மாத வெளியீடு

*

பொருள் அடக்கம்

2852

முடிவின் தொடக்கம்	தலையங்கம்	1
காலச் சுழல்	குறிப்புகள்	3
சாம்ராஜ்யாமா சுதந்தரமா?	லின் யூட்டாங்	5
ஒரு தோற்றம்	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	9
ஒரே தேசம்	ராஜேந்திர பிரசாத்	14
எகிப்து	ஆர். ராமநாதன்	18
பாதிரியின் மகள்	உர்ஸுலா புளும்	21
மனம் மாறுவது ஏன்?	மிரான் ஸ்டெர்ன்ஸ்	25
அச்சுப் பேய்	நாரா	29
கடவுளைக் கண்டேன்	சுவாமி விவேகானந்தர்	30
கடவுள் சுத்தப் பொய்	ராபர்ட் ஜி. இங்கர்சால்	31
காதல் விவகாரம்	ரிச்சர்ட் ஹூப்ளர்	32
படங்கள்		37-44
உணவு நெருக்கடி	மகாத்மா காந்தி	45
கலை வாழும் தில்லை	பி. எஸ். நாயுடு	47
இன்பத்தின் எல்லையை …	ஆர்தர் பிரியன்ட்	52
காப்பி குடிக்கலாமா?	ஜான் ஹார்வி கெல்லக்	57
பாட்டாளி மக்கள்	மா. கோலப்ப பிள்ளை	61
மதிப்பிழந்த நோட்டு	தி. ஜ. ர.	62
பஞ்சப் பிணி	கிருஷ்ணன்	65
வாழ்வது எப்படி?	அலெக்ஸிஸ் காரெல்	71
கவியரசி சரோஜினி	'பாகோ'	76
புத்தக உலகம்		78

*

பார்த்திப ௵ மாசி ௴

மலர்: 12 இதழ்: 11

அணா 8

இன்றும்
என்றும் போல்
மணத்துக்கும்
குணத்துக்கும்
பேர் போன
தயாரிப்பு
குமரன் காபி
உயர்தரமானது
தயாரிப்போர்: குமரன் காபி வர்க்ஸ், சேலம்
P.S.M.Co. 2.

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

2532

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

எ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

சோனல் | பயோ-சரசா

படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு.

IODISED SARASAPARILLA

ரத்த சுத்தி திராவகம்

துர்நீர் சம்மந்தமான சொ
சிரங்கு, கட்டி, மேகப்பத்
கரப்பான் முதலியவைகளு
கும், வெட்டை சம்மந்தத்தா
ஏற்படும் கை, கால், இடுப்பு வ
கள், பிடிப்பு, பக்ஷவாதம், மொ
சூலை முதலிய சகல வியா
களுக்கும் சிறந்த மருந்து.

ட்டில் 1-க்கு விலை 2-8-

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜண்டுகள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்

மருந்து ஷாப் : : மதுரை

கும்பகோணம்

டி. எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை

கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்

சந்தனாதி, அரைக்கீரை விதைத் தைலங்களையும்

உபயோகியுங்கள்

மதருஸ் விட்டி ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதருஸ்

ஸ்டாக்கிஸ்ட்:
B. பால பட்டா
வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
நான் களைப்படையாமல் இருக்கிறேன்!
வினோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.
உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!
"VINOLIA" WHITE ROSE SOAP
வினோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு
VWR. 16-50 TM
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

இண்டோ - கமர்ஷியல்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாயவரம்

1945ளூ டிசம்பர்மீ 31-ந் தேதிய

பொறுப்புகள்

				ரூ.	அ.	பை.
கோரப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம்				18,75,000	0	0
ரிஸர்வ் நிதி				5,00,000	0	0
அவசர நிதி				16,662	2	6
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது				1,50,000	0	0
டிபாஸிட்டுகள் : பிக்ஸட், கரண்ட், சேவிங்க்ஸ் பாங்க், மாதவாரி டிபாசிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், மற்றும் இதர பொறுப்புகள்				3,21,96,894	8	8
பாங்குகளுக்குக் கொடுக்க வேண்டியவை (சர்க்கார் கடன் பத்திரங்களின் ஈட்டின் பேரில்)				15,00,000	0	0
பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள்				4,701	0	0
வசூல் பில்கள்				16,60,823	11	6
கமர்ஷியல் கிரெடிட்கள்				37,000	0	0
பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள்				8,89,009	8	10
வழங்கப்பட வேண்டிய டிராப்டுகள் தந்திகள்				3,33,385	6	4
சில்லரை இனங்கள்				53,124	15	3
31-12-44 கணக்கு விவரப்படி பாக்கி	3,606	1	2			
இவ்வருஷத்திய நிகர லாபம் :	5,37,266	2	11			
	5,40,872	4	1			
30.6-45 கணக்கு விவரப்படி பங்கிடு செய்தது	2,56,658	13	0			
				2,84,213	7	1
ஆக மொத்தம் ரூ.				3,95,00,814	12	2

P. S. சுப்ரமணிய ஐயர் அன்ட் கம்பெனி
ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட்
அன்ட் ஆடிட்டர்ஸ்

K. லக்ஷ்மணன்
அக்கௌன்டன்ட்

மதராஸ், ஜனவரி 25, 1946

பாங்க் லிமிடெட்

சென்ட்ரல் ஆபீஸ் : சென்னை

சுருக்கமான கணக்கு விபரம்

ஆஸ்திகள்

	ரூ.	அ.	பை.
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோநோட்டுகள், இதர அட்வான்சுகள் முதலியன	1,86,18,478	1	1
தற்சமயமாவது, எப்பொழுதாவது, டைரக்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள்	Nil		
பாங்கிக் கட்டிடங்கள்	2,08,179	6	0
ஸேப்கள், மரதளவாடங்கள்	69,776	13	10
கைவசமுள்ள புத்தகம் ஸ்டேஷனரி	41,787	10	2
வசூல் பில்கள்	16,60,823	11	6
கஸ்டமர்களின் பொறுப்புகள்	37,000	0	0
சில்லரை இனங்கள்	4,35,718	10	11
முதலீடுகள் :			
கவர்ன்மெண்ட் புரோநோட்டுகள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பங்குகள், ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள சிப்பந்திகள் ஜாமீன்	1,15,90,252	13	3
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி	1,70,173	11	9
கைவசமுள்ள ரொக்கமும், பாங்கிகளிடம் இருப்பும்	66,68,623	13	8
ஆக மொத்தம் ரூ.	3,95,00,814	12	2

டைரக்டர்கள்

R. விஸ்வநாதன் K. சிவஸ்வாமி
R. S. A. சங்கர ஐயர் V. வெங்கடராமன்
T. R. வெங்கடராம சாஸ்திரி, சேர்மன்

S. N. N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்றகோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிருர்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பார்த்திப
மலர் 12

சக்தி

மாசி
இதழ் 11

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே !**

முடிவின் தொடக்கம்

சென்ற முன்னூற்று நாற்பத்தைந்து வருஷ காலமாக, நம்முடன் வேண்டா விருந்தாக இருந்து வந்த பிரிட்டிஷார் பயணஞ் சொல்லிக் கொண்டு வீடு திரும்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. கடந்த இருநூறு வருஷங்களாக நம் நாட்டை அக்கிரமமாக அடக்கி ஆண்டு வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் "இந்தியாவை விட்டு வெளியேற" வேண்டிய வேளை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவு தொடங்கி விட்டது.

நம்மை அரசியல் அறிவுச் சூனியர்கள் என்றும், ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழத் தெரியாதவர்கள் என்றும் சமீப காலம் வரை திருப்பித் திருப்பிச் சொல்லி வந்த பிரிட்டிஷ் சர்க்கார் சமீபத்தில் இந்தியாவுக்கு அனுப்பி வைத்த பார்லிமெண்டரி தூதுக் கோஷ்டியார், நாடெங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு, சீமைக்குப் புறப்படுமுன், சில அரிய உண்மைகளை வெளியிட்டார்கள் :

> இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்கப் போவதாகப் பிரிட்டன் கூறுவது மனப்பூர்வமான பேச்சுத்தான் என்று மக்கள் நம்ப மாட்டேன் என்கிறார்கள், இப்படி அவநம்பிக்கை கொள்வதைப் போன்ற தவறு வேறு எதுவும் இருக்க முடியாது

என்று மேஜர் வையாட் வருத்தப்பட்டுக் கொண்டார்.

> உங்களுக்குள்ளே ஆழமான பிளவுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், ஐக்கியம் ஏற்படும்போது, இந்தப் பிளவுகள் மறைந்து விடும்

என்று, தூதுக் கோஷ்டியின் தலைவரான புரபசர் ரிச்சர்ட்ஸ் ஒப்புக்கொண்டார்.

> அரசியல் துறையில் பரிபூரண வளர்ச்சி அடைந்துவிட்ட ஒரு மகத்தான, பெருமிதம் வாய்ந்த, தேசிய இனத்தைக் குறித்த செய்திகளை நாங்கள் எங்களுடன் எடுத்துச் செல்வோம்

என்று, பழமை விரும்பும் கோஷ்டியாகிய கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த மிஸ்டர் காட்பிரே நிக்கல்சன் உறுதி கூறினர்.

இந்த மார்ச் மாத முடிவில், இந்தியா மந்திரி லார்டு பெதிக்-லாரன்ஸ், கடற்படை மந்திரி சர் அலெக்சாண்டர், பிரிட்டிஷ் வர்த்தக இலாக்காத் தலைவர் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஆகிய

மூவரையும், முழு அதிகாரத்துடன் இங்கேயே காரியங்களை முடித்து விடும்பொருட்டு, அனுப்பி வைக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

கடந்த அறுபது வருஷ காலமாகக் காங்கிரஸ் அடையப் பாடுபட்டு வந்த லட்சியம், இன்னும் ஒரு சில மாதங்களில் கைகூடிவிடும் என்ற நம்பிக்கை நாற்பத்து நாலுகோடி மக்கள் உள்ளத்திலும் உதிக்கத் தொடங்கிவிட்டது. லட்சியத்தை நெருங்க நெருங்க, அவசரமும், துடிதுடிப்பும் ஏற்படுவது இயல்புதான். அதனாலேயே நாடெங்கும் கலகமும், குழப்பமும், மறியலும் நிர்த்தூளி படுகின்றன.

தேர்தல்களில், தேச மக்களின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ்தான் வெற்றி பெறும்என்பது ஒரு சிறு குழந்தைக்குக் கூடத் தெரிந்த விஷயம். ஜின்னா சாகேப்பின் பாகிஸ்தான் முட்டுக் கட்டையைப் பிரிட்டிஷார் முன்போலப் பொருட்படுத்த மாட்டார்களென்பது, சமீபத்தில் இந்தியாவுக்கு வரப்போகிற பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதின் நோக்கத்தைப் பற்றி வெளிவந்துள்ள அறிக்கையிலிருந்து தெளிவாகிவிட்டது.

சுதந்தர தேவதை வரு முன்பே பஞ்சப் பேய் வந்து, நம்மை அழித்து விடுவேனென்று பயமுறுத்திக் கொண்டு நிற்கிறது' சுதந்தரத்தின் மதுர ரசத்தைப் பருகப் போகிற நாம், பட்டினித் தீயில் குளித் தெழுந்துதான் ஆகவேண்டுமென்று விதித்திருக்கிறது போலும். பஞ்சம் வந்தால், என்ன பயங்கரமான அராஜகமும் அவதியும் நிகழும் என்று சொல்வதற்கில்லை. நாட்டு மக்களின் சொந்த ஆட்சி எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக ஏற்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நிலைமையைச் சமாளித்து, வங்கத்தில் நடந்த துயரக் காட்சி நாடெங்கும் நிகழாமல் தடுக்க மார்க்கம் உண்டாகும்.

✵

சுதந்தரம் நிச்சயம்: சுதந்தரம் சமீபித்துவிட்டது என்பது பட்டப் பகல்போல் தெரிகிறது. இதைப் பற்றி மறைமுகமாகச் சுட்டிக் காட்டிப் பேசவேண்டிய அவசியமே இல்லை. —ராஷ்டிரபதி மௌலானா ஆஜாத்

நாஸ்திகன் கடமை

பொய் சொல்லுவதை விட உண்மை பேசுவது சுலபம். அதுவும், உண்மை பேசுதலை ஒரு பழக்கமாகக் கொண்டுவிடுவோமானால் மிகவும் நல்லது. திருடுவதும், வஞ்சிப்பதும் சமூகத் தீங்குகள். அவற்றால் நாம் அகப்பட்டுக்கொள்ள நேரிடலாம். தன் தவறுகளுக்காகப் பச்சாதாபப்படுவதன் மூலம் ஒரு நாஸ்திகன் அயோக்கியத் தனத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. வாய்மை, நேர்மை இவற்றைத் தன் சொந்த வாழ்விலே கடைப் பிடிப்பதன் மூலம், பிறரிடமும் அந்தக் குணங்களைப் பரப்புவது அவனுக்கு சௌகர்யமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

— சார்ல்ஸ் பிராட்லா (அவநம்பிக்கையால் மனித குலத்திற்கு லாபம்)

காலச்சுழல்

உணவுப் பஞ்சம்: பருவமழை பொய்த்துவிட்டதாலும், கடும் புயல் அடித்ததாலும், இந்தியா பூராவுமே ஏராளமான உணவுப் பொருள் தட்டு ஏற்பட்டு விட்டது. முக்கியமாகச் சென்னை மாகாணத்தின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக ஆய்விட்டது. யுத்த காலத்தில், நம்முடைய சொந்தத் தேவை போக மிஞ்சிய அரிசியை இலங்கைக்கு அனுப்பி வந்தோம். இப்போது நமக்குப் பத்து லட்சம் டன் அரிசி பற்றாமல் போய்விடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஐக்கிய தேச சபையில் இந்தியாவுக்கு உணவு தேடித் தருகிற விஷயமாக சர் ஏ. ராமசாமி முதலியாரவர்கள் வெகு உருக்கமாகப் பேசியிருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் அன்னிய நாட்டு மந்திரி சர் எர்னஸ்ட் பெவின் இவ்விஷயத்தில் இந்தியாவுக்கு உதவி புரிவதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், உடனடியாக ஏதாவது உதவி நமக்குக் கிடைக்குமா என்பதுதான் தெரியவில்லை. உலகம் பூராவுமே உணவு நெருக்கடி இருப்பதால், சுலபத்தில் உதவியை எதிர்பார்ப்பதற்கில்லை. சயாமில் மட்டும், தேவை போகக் கொஞ்சம் அரிசி இருக்கிறது. அதை உடனே இந்தியாவுக்குக் கிடைக்கச் செய்வது சர்க்கார் கடமையாகும். அரிசிப் பங்கீட்டை ஒன்றுக்கு முக்காலாகக் குறைப்பதால் மட்டும் நிலைமையைச் சமாளித்துக் கொண்டுவிட முடியாது. உணவு விஷயத்தில், காங்கிரஸ், லீக் முதலிய அரசியல் ஸ்தாபனங்கள் சர்க்காருடன் சேர்ந்து ஒத்துழைப்பது, நிலைமையின் நெருக்கடியை நன்கு உணர்த்துவதாகும். பொதுமக்களும் இவ்விஷயத்தில் சேர்ந்து ஒத்துழைப்பது மிக்க அவசியம்.

இந்திய மாலுமிகள் கலகம்: ராயல் இந்தியன் கடற்படையில், ஒரே மாதிரி அந்தஸ்துள்ள பதவிகளை வகிக்கிற இந்தியர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே சம்பளம், உத்தியோக உயர்வு, உணவு, வாழ்க்கை வசதி முதலிய முக்கியமான விஷயங்களில் அக்கிரமமான தாரதம்மியம் காட்டி வந்ததைப் பொறாத பம்பாயிலுள்ள இந்திய மாலுமிகள், தங்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்படும்வரை வேலைசெய்வதில்லையென்று கொதித்தெழுந்து, 19-2-46 அன்று மறியல் செய்தார்கள். வெள்ளைக்கார அதிகாரியான கமாண்டர் கிங், மாலுமிகளை மிகவும் இழிவாகப் பேசினார். மறியல் முற்றிக் கலகமாய் விட்டது. சர்க்கார், ராணுவத்தைக் கொண்டு கலகக்காரர்களை அடக்க முயன்றார்கள். இரு தரப்பிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பலர் மடிந்தார்கள். ஆயிரக் கணக்கானவர் படுகாய முற்றனர். கடைசியில், சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் தலையிட்டதன் மேல், கலகக்காரர்கள் 22-2-46—ல் சர்க்காரிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்தார்கள். காராச்சியிலும், கல்கத்தாவிலும், சென்னையிலும் அனுதாபமறியல்கள் நடந்தன. சென்னை தவிர, மற்ற இரண்டிடங்களிலும் மறியல்கள் கட்டு மீறிப்போய்க் கோரக் கலகமாக முற்றி விட்டன. பின்னால், பம்பாய்க் கடற்

படையினர் மறியல் செய்வதை நிறுத்தி, வேலைக்குப்போய்விட்ட போதிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலும், கராச்சியிலும் சமீபத்தில் இதற்கு முன் அந்த இடங்களில் நடந்த கலகங்களை விட மகா கோரமாய்க் கொள்ளை, கொலை, சூறையாடல் எல்லாம் கட்டுக் கடங்காத அளவில் இரவு பகலாக நடந்த வண்ண மிருந்தன. 25-2-46-ல் மீண்டும் பெரிய அளவில் சென்னை நகர் பூராவிலும் அனுதாப மறியில் பரிபூரண வெற்றியுடன் நடந்தது. கட்சி பேதமின்றித் தொழிலாளர், மாணவர், பொதுமக்கள் எல்லாரும் கலந்து கொண்டார்கள். நாடெங்கும் நிலை கொள்ளாமல் மக்கள் உணர்ச்சி பொங்கி நிற்கிற இந்தச் சமயத்தில் சர்க்கார் அனுதாபத்துடன் நடந்து கொண்டால் ஒழிய நிலைமை மகா மோசமாய் விடும்.

ராஜாஜி விலகுகிறார்: தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில் ராஜாஜிக்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்கிற ஒரு தனிக் குழு இருக்கிறது என்று காந்திஜி ஹரிஜன் பத்திரிகையில் எழுதியதற்காகத் த. நா. கா. பார்லிமெண்டரி போர்டில் தாம்வகித்து வந்த தலைவர் பதவியை த. நா. கா.கமிட்டித் தலைவர் ஸ்ரீகாமராஜ் நாடார் ராஜினாமாச் செய்துவிட்டார். போர்டாரால் சென்னைச் சர்வகலாசாலைத் தொகுதிக்குரிய ஸ்தானத்துக்குத் தேர்தலில் நிற்குமாறு நியமிக்கப்பெற்ற ராஜாஜி, தம்மால் இத்தனை சங்கடங்கள் ஏன் வர வேண்டுமென்று எண்ணி மனம் நொந்து, தேர்தலில் நிற்கப் போவதில்லையென்றும், அரசியலிலிருந்து விலகிக் கொண்டு தாம் ஒதுங்கி வாழ முடிவு செய்து விட்டதாகவும் காந்திஜிக்குக் கடிதம் எழுதிவிட்டார்.மாகாணத்தில் இன்று இருக்கும் நெருக்கடியான நிலைமையில், கொந்தளிப்பான நிலைமையில், ராஜாஜி போன்றவர்கள் ஒதுங்கி நிற்க எண்ணுவது நம்முடைய துரதிர்ஷ்டமே. யார் கண்டார்? மீண்டும் ஏதாவது நடந்து, ராஜாஜியின் சேவை தமிழர்க்குக் கிட்டாமலா போய்விடும்? பொறுத்திருந்து பார்ப்போம்.

✲

பிரிட்டிஷாரின் வெளியேற்றம்

இந்திய ஆட்சி ஏற்படுவதன் பொருட்டுத் தாங்கள் வெளியேறிவிடத் தீர்மானித்துவிட்டதாக ஆட்சி செலுத்துவோர் கூறிவிட்டார்கள். உள்ளத்திலே மறைந்து கிடந்த சங்கடமான அமைதியின்மை வெளிக் கிளம்புகிறது என்பதற்காக, செய்ய வேண்டியதைச் செய்யாமல் கண நேரங் கூடத் தாமதிக்க வேண்டாம்.

— மகாத்மா காந்தி

காதல்......!

ஓர் இளைஞனும் ஒரு யுவதியும் கங்குகரையின்றி ஒருவரையொருவர் காதலித்தார்கள். இளைஞன் வேறொரு நகரத்துக்குச் சென்று வாழ நேர்ந்தது. போன பிறகும், காதல் தொடர்பு விட வில்லை. ஒவ்வொரு நாளும், காலையில் எழுந்தவுடன் காதலிக்குத் தந்தி மூலமாகத் தன் அன்பைத் தெரிவிப்பான். இப்படி மூன்று வருஷங்கள் தந்திப் போக்குவரத்திலே காதல் வளர்ந்தது. கடைசியில் திருமணம் நடந்தேறியது. ஆனால்... பாவம், தந்தி அடித்த இளைஞனுக் கல்ல! மூன்று வருஷமாகத் தினந்தோறும் தந்தி கொண்டுவந்தானே, அந்தத் தபால் பையனுக்கும் யுவதிக்கும் திருமணம் நடந்தேறியது!

— மைஸிந்தியா

அழகின்

இரு தலைமுறை

இருபது வருஷ வித்தியாசம்! இருந்தும், தாய் தன் பதினறு வயது மகளைப்போல் யௌவனத்தோடும், சரும அழகுடனும் விளங்குகிருள். காரணம் இந்த தாய் தன் தாயின் சொற்படி பியர்ஸ் சோப்பையும், சுத்த ஜலத்தையும் உபயோகித்து சரும அழகைக் காப்பாற்றிக் கொண்டதுதான். இந்த முறையைப் பின்பற்றி அழகான அவள் மகளும் தன் சருமத்தைக் காப்பாற்றுவதால், இருபது வருஷத்திற்குப் பின் தன் தாயின் சருமம் இன்று இருப்பதுபோல்,அவள் சருமமும் அழகுடன் விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 38-50 TM A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்,

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம், வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

சக்தி

சந்தா விபரம்

தனிப்பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்ப வேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10
ஆறு மாதம்	4	4
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM
ROYAPETTAH, :: MADRAS

என்ற விலாசத்திற்கு சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

சாம்ராஜ்யமா சுதந்தரமா?

லின் யூட்டாங்

இந்தியப் பிரச்னை இந்தியாவைப் பற்றியது மட்டுமல்ல. அது, சுதந்தரத்தின் பிரச்னை. அதை என்ன செய்ய நினைக்கிறோம் என்னும் பிரச்னையும் தான். சாம்ராஜ்யமா? சுதந்திரமா? என்ற பிரச்னையை நேரடியாகத் தீர்க்க முயலவில்லை. அது நம்மை ஒரு அசம்பாவிதமான நிலையில் கொண்டு விட்டிருக்கிறது. ஆங்கிலேயனைத் தவிர, எல்லோரையும் இந்நிலை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. இதன் இன்னொரு விளைவு என்னவென்றால், தங்கள் சுதந்தரத்திற்காகப் போராடிய குற்றத்திற்காக, இந்திய சுதந்தர வீரர்கள் சிறையில் வாடுகின்றனர்.

சுதந்தரம்—அந்தச் சொல்லிற்குத தான் எவ்வளவு மந்திரசக்தி இருக்கிறது! சுதந்தரம் முழங்கட்டும்! ஆனால், முதலில் சுதந்தர தேவி தன்னுடைய புடைவையை நீக்கிவிட்டு, ஐரோப்பியக் கவுனை அணிந்து கொள்ள வேண்டும்; அப்போது தான் நாம் அவளை நேசிக்க முடியும். ஆங்கிலேயர்களுடைய சுதந்தரம் என்றதும், வசதி நிரம்பிய ஆங்கில விடுதிகளையும், அழகிய புல் தரைகளையும், 'ஏரி ஜில்லாவையும்' பற்றி நினைக்கிறோம். இந்தியச் சுதந்தரமோ, இந்தியக் காட்டில் யானைமீது செல்லுகிறது. நாம் யாரை நேசிக்கிறோமோ அவள் ஒரு மெல்லிய வெள்ளை மஸ்லினால் மட்டுமே தன்னை மூடியிருக்கிறாள். பிரிட்டிஷ் கொடியினாலோ லங்கோட்டினாலோ அவள் தன்னை மறைத்துக் கொண்டிருக்கவில்லை. மக்கள் மனம் குறுகி யிருப்பதால், இதை அறிந்து கொள்வதில்லை. அவள் மனிதன் இதயத்தில் வாழ்கிறாள். நம்முடைய மனக் கண் கொண்டே அவளைக் காண முடியும்.

டாக்டர் லின் யூட்டாங் அமெரிக்க வாசி; பேரறிஞர்; கீழ் நாடு, மேல் நாடு இரண்டையும் நடு நிலைமையோடு பன்னெடுங் காலம் ஆழமாக, பூராவாக, தனி ஈடுபாட்டுடன் ஆராய்ந்தவர்; பிரபல நூலாசிரியர். சீனமும், ஆங்கிலமும படித்த சீனர்களில் இவரே முதன்மை ஸ்தானம் வகிக்கக் கூடியவர் என்று பிரபல அமெரிக்க ஆசிரியை பேர்ல் பக் அம்மையார் கூறியுள்ளார். இந்திய நிலைமையைப் பற்றி இவர் கூறுவன உலக மக்கள் செவியில் ஏற்கெனவே பட்டு விட்டன. **கண்ணீரும் சிரிப்பும்** என்ற இவரது நூலின் ஒரு பகுதி இங்கே சுருக்கித் தரப்பெற்றுள்ளது.

நான் இங்கிலீஷ்காரரை வெறுப்பவன் என்று கூறுகிறார்கள். இப்படிச் சொல்வதற்கு நான் ஒரு குற்றமும் இழைக்க வில்லை. நியூயார்க் சீமாட்டிகள் சிலர் அப்படித்தான் நினைக்கிறார்கள். இந்தியாவின் சுதந்தரத்தை நான் என்னவோ மனப் பூர்வமாகவே ஆதரித்துப் பேசி விட்டதாக அவர்கள் நினைத்து விட்டார்கள். அதுதான் விஷயம். என்னைப் பற்றிக் கூறுவதற்கும் என் பேச்சிற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியுமென்று எனக்குப் புரியவே யில்லை! என் நிலை தெளிவானது. நான் ஆங்கிலேயரை வெறுப்பவன் அல்ல. முட்டாள்களை வெறுப்பவன் நான்; அவர்கள் எந்த நாட்டினரானாலும் சரி,

என்னுடைய நாட்டவரானலும் சரிதான்.

சுதந்தரம் சம்பந்தப் பட்ட வரை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஏனென்ருல், அது என் மனத்தில் நிலைத்து விட்டது. நான் அதில் நம்பிக்கை கொண்டுள்ளேன். சாம்ராஜ்யமா? சுதந்தரமா? இரண்டினுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர இன்று நமக்கு வேறு வழி கிடையாது.

"இன்றே நாளையோ, நீங்கள், காந்தியையும், இந்தியக் காங்கிரசையும், அவர்கள் குறிக்கும் எல்லாவற்றையும் நசுக்கியாக வேண்டும்" என்று 1930, ஜனவரியில் வின்ஸ்டன் சர்ச்சில் கூறினர். இந்தியா சம்பந்தப்பட்ட வரை அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகள் இதுவே. சைமன் கமிஷன் வந்தபோதும், அதன் பின்னரும், பிரிட்டன் இந்தியத் தலைவர்களோடு சமரசம் பேசுவதைச் சர்ச்சில் மிகவும் வன்மையாக ஆக்ஷேபித்தார். அவ்வாறு செய்வது சாம்ராஜ்யத்தினுடையவும் அதன் உத்தியோகஸ்தர்களுடையவும் கவுரவத்தைக் குலைப்பதாக ஆகும் என்றும் அவர் கூறினர்.

"இந்தியாவி லிருக்கும் தனிப்பட்டவர்களுக்கு நாம் அளவு மீறிய முக்கியத்துவம் கொடுக்கிறேம். அவர்களோடு நாம் ஒத்துப் போகவே முடியாது. இத்தகைய பிரச்னைகளைத் தீர்ப்பதில் இந்தியாவி லிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கவுரவத்தையும், பலத்தையும் இச் செய்கை பாதிக்கும்," என்று 1931, மார்ச் மாதத்தில், அவர் கூறினர்.

பதினும் நூற்ருண்டில் அவர் ஒரு வீரராக விளங்கி யிருக்கலாம். பதினேழாம், பதினெட்டாம் நூற்ருண்டுகளில் அவர் மிகத் திறமை யுடையவராகத் திகழ்ந்திருக்கக் கூடும்.பத்தொன்பதாம் நூற்ருண்டில் அவர் பெருமை மிகப் பெற்றிருக்க முடியும். ஆனல், இருபதாம் நூற்ருண்டிலோ, அவர் கிப்ளிங் பண்புகொண்ட 'பழைய பசலி' யாகவே காட்சி யளிக்கிருர்.

பிராட்டஸ்டண்டுகளும், கத்தோலிக்கரும், 'நியூ டீல்' கொள்கையினரும், அதை எதிர்ப்பவரும், குடியரசுக்காரரும், ஜனநாயக வாதிகளும், பொது உடைமையினரும், சமதர்மிகளும், 'யாங்கீ' களும் தெற்கத்தியினரும், நீக்ரோக்களும், பேப்டிஸ்டுகளும், மெத்தாடிஸ்டுகளும், ஏழாம் நாள் அட்வென்டிஸ்டுகளும், எபிஸ்கொபேலியரும், மொர்மானியரும்,—அமெரிக்காவில் வசிக்கின்றனர். ஜெர்சி நகரின் ஒரே வீதிகளிலே யூதரும், இத்தாலியரும், கிரேக்கரும், ஐரிஷ்காரரும் வசிக்கின்றனர். அமெரிக்காவில் சுமார் 250 கிறிஸ்தவ வகுப்புக்கள் இருக்கின்றன. இதையெல்லாம், இந்தியர்கள் அறிந்தால், அமெரிக்காவின் ஜாதிய மதச் சிக்கல்களை எப்படித் தீர்ப்பது என்று கட்டாயம் கலங்கவே செய்வர். இந்தியாவில், ஒரே தெருக்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வசிக்கின்றனர். புரூக்லின் நகரில் வாழும் இத்தாலியரையும் ஐரிஷ்காரரையும் போலவே—அவர்களை விடச் சிறந்த முறையில் இல்லாவிட்டாலும்,—ஹிந்து முஸ்லிம்கள் வாழ்கிருர்கள். இதைவிட அதி முக்கியமான விஷய மொன்றிருக்கிறது. இந்தியாவின் சுதந்தரம் சம்பந்தப்பட்ட வரையில், அனைவரும் ஒன்றுபட்டே இருக்

கின்றனர். சுதந்தரம் கேட்பது போலவே, ஆங்கிலேயரை வெறுப்பதிலும் அனைவரும் ஒன்று பட்டிருக்கின்றனர். யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த குரோஷியர், சர்பியர், யூதர், கத்தோலிக்கர், இவர்களுக்கும் இதே உண்மை பொருந்தும். ஆனாலும், நமக்கு அவசியமாகும் போது மேற்கூறிய அனைவரையும் ஒரே நாட்டினரென்று பேசத் தயங்குவதில்லை. உண்மை இதுதான். முஸ்லிம்களே இல்லாவிட்டாலும், ஆங்கிலேயர் அவர்களை உண்டுபண்ணி விடுவார்கள். மதம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஒரு தெய்விக அநுகூலமாக அமைந்தது. அதற்காக அவர்கள் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். "ஒரே கடவுள்" கொள்கைக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் ஒத்து வராது. நீங்கள் நினைப்பதைவிடப் "பல கடவுள்கள்" தத்துவம் மிகவும் உபயோகமானது. இந்திய சுதந்தரப் பிரச்னையை எல்லா மக்களின் சுதந்தரப் பிரச்னையாகவும் நான் எடுத்துக்கொள்கிறேன். நான் அப்படித்தான் செய்யவேண்டும்.

இந்தப் போக்கைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகவிருக்கிறது. பதின்மூன்று குடியேற்ற நாடுகள் இங்கிலாந்திடமிருந்து சுதந்தரம் அடைந்ததற்கும், இந்தியா இங்கிலாந்திடமிருந்து சுதந்தரம் அடைவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சில அமெரிக்கர் சொல்லலாம். டாம் பெயின் பேசிய சொற்கள் ஜனநாயகத்தின் வேத வாக்காகக் கருதப் படுகின்றன. ஆனல், அதே வார்த்தைகளைக் காந்தியோ, நேருவோ சொன்னல், அது புரட்சியாகவும், யுத்த முயற்சியைக் குலைக்கும் ராஜத் துரோகமாகவும் ஆகி விடுகிறது. நான் அமெரிக்கன் அல்ல ஆதலால், என்னல் இந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னைப் பற்றிய வரையில், ஜார்ஜ் வாஷிங்டனும், காந்தியையும் நேருவையும் போல், ஆங்கிலேயரை எதிர்த்தவர்தான். இவர்களைப் போலவே அவரும் பிடிவாதக்காரர் தான். தூர திருஷ்டி எப்போதும் சங்கடமானது. நியூயார்க்கில் சர்ச்சிலுக்கு அபார ஆதரவு இருக்கிறதென்பதை நான் அறிவேன். டன்கெர்க் நாட்களில் நான் போற்றிய வீரரைச் சிறிது புகழ்ந்து பேசியிருக்கலாம். ஆனல், என்னுடைய தூர திருஷ்டிக் கண்ணடியையோ, என்னுடைய வெறும் கண்களையோ தான் நான் விரும்புகிறேன்.

இந்தியர் தம்முடைய சுதந்தரத்திற்காகப் போராடுவதற்கும், பிரான்சுப் பயங்கர இயக்கத்தினரின் விடுதலைப் போராட்டத்திற்கும் வேற்றுமை காண முடியாத முட்டாள் நான்!

இந்தியத் தலைவர்களை முதலில் கலந்தாலோசியாமல், இந்தியாவின் சார்பில் பிரிட்டன் யுத்தத்தை ஆரம்பித்த பிறகு, இரண்டரை ஆண்டுகள் காங்கிரஸ் தலைவர்கள் ஒதுங்கி நின்றனர். ஆங்கிலேயரும் நிலைமையைச் சீர்திருத்த எதும் முயற்சி செய்யவில்லை. சுதந்தரத்திற்காகப் பலத்த கிளர்ச்சி செய்ததற்குப் பிறகு, ஜப்பானிய ஆபத்து இந்தியாவை நெருங்கிவிடவும், அவர்கள் பர்மாவைப் பிடித்தவுடன், கிரிப்ஸ் தூது வந்தது. நாட்டின் தற்காப்பு விஷயத்தில் உண்மை அதிகாரம் வேண்டு

மென இந்தியர் கோரினர். ஆனல், பிரிட்டன் அதற்குத் தயாரா யில்லே. கிரிப்ஸ் தூதினல் ஏற்பட்ட உருவான பலன், பாகிஸ்தான் கோரிக்கைக்குப் பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தின் ஆதரவு கிடைத்ததும், நாட்டில் பின் விளேயக் கூடிய பிளவுகளுக்கு ஆதாரமாக அக் கோரிக்கை அமைந்ததும் ஆகும்.

இந்தியர் செய்யக் கூடியது என்ன இருக்கிறது? கல்லிடம் பிரார்த்தித்துக் கொண்டே இருக்க வேண்டுமா?

இந்தியர்களால் தங்களுக்குள்ளேயே ஒத்துப் போக முடியவில்லே என்ற வாதம் பொய்யானது. தனித் தனி அறைகளில் அடைத்து விடுவதால் மனத்தை அறிவது முடியாது. யோகிகளுக்கும் இது சாத்தியமல்ல. காந்தி ஒரு யோகி யல்ல. "சிறைச் சுவர்களேத் தகர்த்த சிந்தனேகள்" என்பதெல்லாம் வெறும் இலக்கியப் பூச்சே ஆகும். ராஜகோபாலாச்சாரியார், சப்ரு, நேரு போன்ற மனிதர்களுக்கு அது சாத்திய மல்ல.

இந்தியப் பிரச்னேயைக் கையாளும் முறை பல முக்கியமான பிரச்னேகளேப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டதன் ஓர் அறிகுறியே யாகும். சாம்ராஜ்யமா? சுதந்தரமா? என்ற பிரச்னேயை— ஆத்மார்த்திகத் துறையில் இன்னும் மக்கள் தயாராக வில்லே என்பதை — அறிந்து கொள்ளவில்லே. நிலேமை நம்முடைய கைக்குள் அடங்கி யிருக்கும் வரை, கோபம், ஆத்திரம், பயம், துவேஷம்—எல்லாம் பயனற்றவைகளே என்று நினேப்பது மிகத் தவருகும். கலகக்காரரைத் தடியடியால் அடக்கிவிடலாம் என்ற நம்பிக்கையையே இது காட்டுகிறது. இதை ஹிட்லரின் மனப்போக்கு என்றுதான் சொல்ல வேண்டும். யுத்தத்தின் பிறகு நிலேமை பூரணமாக நம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கும். அப்போது, இந்தியாவுக்குச் சுதந்தரம் மறுக்கும் காரணங்கள் இருந்து கொண்டே இருக்கும். மேல் நாடுகளும் கீழ் நாடுகளும் அரசியல் தத்துவத்தில் மாறுபடுகின்றன. ஆயுத பலம் மூலம் பெறும் தற்காலிக வெற்றியினல் ஏற்படக் கூடிய பலன் விஷயமாக, கீழ் நாட்டினராகிய நாம் மேல் நாட்டினரினின்றும் மாறுபடுகிறேம். காலப் போக்கில், நல்லெண்ணமா, விரோதமா என்பது முக்கிய பிரச்னேயாகி விடுகின்றது; ஆயுத பலம் பயனற்றது; மனித இதயத்தில் சமாதானம் நிலவும் வரை உலகில் சமாதானம் நிலேக்காது—என்று ஆசிய மக்கள் நம்புகின்றனர்.

✱

அரிசி உற்பத்தி



வைஷ்ணவம் வந்த விதம்: புத்த சமயமும் வைஷ்ணவ சமயமும் இரண்டல்ல. இந்தியாவிலே புத்த மதம் தளர்வடைந்த காலத்திலே அதனுடைய ஒழுக்க நெறிகள் சிலவற்றை ஹிந்து சமயம் தன்னதாக்கிக் கொண்டது. இதுவே பின்னளில் வைஷ்ணவமென வழங்கப்பட்டது.

— சுவாமி விவேகானந்தர்

ஒரு தோற்றம்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

கிணறுபோல் இருண்டு கிடந்த இரவில், குண்டு குண்டாக நழுவி விழுந்தன மூன்று நாத பிந்துக்கள். மணிக் கூண்டில் நகரத்துக் கடிகாரம் காலை மூன்று மணி அடித்தது. மூன்று வது அடியின் கார்வை, உறங்கிக் கொண்டிருக்கும் ராஜாராமின் நாடிகளைச் சற்றுத் தொட்டெழுப்பியது. புரண்டு விலகும் தலையணையை ஒருதரம் இழுத்துக் கொண்டான். தன்னை விட்டு விலகினாற்போல் தோன்றிய கால் கைகளைச் சுருக்கிச் சேர்த்துக் கொண்டான்; தன்னைச் சுற்றி யிருக்கும் உலகையும் சுருக்கிக் கொள்ளப் பக்கத்திலிருந்த பெரிய கம்பளியொன்றை இழுத்துத் தன் உடல் முழுவதையும் மூடி, சமாதி நிலையில் இருப்பது போல் செய்து கொண்டான். அகில உலகமும், ஹிரண்ய கர்ப்பம்போல், தன் கம்பளிக்குள்ளே அடங்கியது என்று அவன் எண்ணினான்.

இப்படி ராஜம் படுத்துக் கொண்டிருந்த இடம் பம்பாயில் கிர்காமில் ஓர் அறை. ஆனாலும், சற்று நேரத்திற் கெல்லாம் கம்பளிக்குள் தன்னையே சுருட்டிக் கொண்டு அண்டம் போல் கிடக்கும் ராஜம், ஏதோ இன்ப வெள்ளம் ஒன்று அலையெழுந்து மோதி அல்லோல கல்லோலப் படுவதாகவும், தான் அலைகொடிகளின் சிகரத்தில் குதித்துக் குதித்து, நுரைப் பூக்களை நாற்புறமும் அள்ளி வீசிக்கொண்டும், அக்கரையிலும் இக்கரையிலும் பாடும் பறவைகளுக்குத் தவழும் கிளைகளிலிருந்து கனிகளைப் பறித்துக்கொண்டும்......ஆஹா! எங்கேயோ மாயமாய், மயக்கமாய்ப் போய்க்கொண்டிருப்பதாக அவன் காண ஆரம்பித்தான். கல்லைப்போல் கடினமாய் கிடந்த அவன் உள்ளம் இளகி விரிந்தது; கயிற்றுக் கட்டிலைப் போல் தொய்ந்து போயிருந்த அவனது நரம்புகள் "விண்" என்று இறுகி, "நியான்" ஒளிக் கம்பிகள் போல், ஓர் அபூர்வ மின்சார சக்தியேறி ஜ்வலிக்க ஆரம்பித்தன. அவனுக்கெதிரில் அறையிலிருந்த மின்சார "பல்பு" நட்சத்திரம்போல் விளங்கிற்று; அது சுக்கிரோதயம் ஆனாற்போலிருந்தது. ஷெல்புகளும், புத்தகங்களுமாக நாற்புறமும் கிடந்தன? —இல்லை, எல்லாம் பசுஞ் செடிகளாயும் செம்மலர்களாயும் தோன்றின. துணிக்கொடியில் தொங்கிக்கொண்டிருந்தவையோ, தோரணங்கள் போன்றன.

"நாம் எங்கே இருக்கிறோம்? நாம் எதுவாக மாறிக் கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?...சரி, இன்னிக்கு மாமியின் அகத்துக்குப் போகணும்.

பழைய நினைவுகள் எல்லாம் இன்பகரமானவையல்ல. இவைகளில் சிலவற்றை நாம் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், நம் உள்ளத்தில் ஆறாத் துயரம் பொங்கிவிடும். சோக நினைவுகளை ஒரு சுமையாகக் கொள்ளாமல், அவைகளையே வாழ்க்கையின் உறு துணையாகக் கொண்டு வாழ்ந்து வந்த ஒருவனைப் பற்றிய உருக்கமான கதை இது.

மங்களத்தை அழைத்துக் கொண்டு பீப்பிள்ஸ் பார்க்குக்குப் போய், மிருகசாலேயில் மிருகங்கள் எல்லாத்தையும் காண்பிக்கிறேன்னு சொல்லிருந்தேனே; செவ்வாய்க்கிழமை இன்னிக்குத்தான்;— பாத்தியா, மறந்து போகத் திரிஞ்சேனே. இதோ கிளம்பறேன், நாழியாச்சு—'' என்று ராஜம் உடுப்புகளை மாட்டிக்கொண்டு தன் மாமி வீட்டை நோக்கி நடந்தான்.

பதக்கத்தின் முகப்பில் இழைத்த மணி போலும், நெற்றியிலிட்ட திலகம் போலும், ராஜத்தை எதிர்பார்த்தவளாய் வாசற்படியிலேயே மங்களம் நின்றுகொண்டிருந்தாள்.

"அத்தான் வந்துட்டான்! அத்தான் வந்துட்டான்!" என்று அவள் கைகளை வீசிக் கொண்டு குதிக்க ஆரம்பித்ததும், பறந்துவிடப் போகும் பட்சி மாதிரி காணப்பட்டது அவளுடைய சின்னஞ் சிறு உருவம்.

மங்களத்துக்கு வயது பதின்மூன்று ஆய்விட்டது. அவள் குழந்தையாய்த் தவழும் பருவத்திலிருந்து, அவளை ராஜம் பார்த்தவன்; ஆயினும் அன்று அவளுடைய தோற்றம் திடீரென்று பிரசன்னமான தேவமங்கை போல அவன் கண்களுக்குத் தோன்றியது. பளபளவென்று சாட்டையாய்க் கிடந்த பின்னல்; அளந்து வைத்த மூக்கு; ஜீவன் துடிக்கும் உதடு; பளிங்கு மனத்தைப் போல் தெளிந்து பரந்த கண்கள்.

"அத்தான்! நீ மறந்துட்டேன்னு நினைச்சேன்... இல்லேன்னா இன்னொரு நாளைக்கு ஆகட்டம்னு இருக்கயோன்னமோன்னு நினைச்சேன்... அம்மா! யாரோ வந்திருக்கா'' என்று சொல்லி விட்டு, ராஜத்தைப் பார்த்து, தன் உதடுகளில் விரலை வைத்து "உஸ்'' என்று சமிக்ஞை செய்தாள் மங்களம்.

உள்ளேயிருந்து விரைந்து வந்த தாயார் வந்திருப்பவரைப் பார்த்ததும், மங்களத்தை நோக்கி, "மங்களம்! யாரோ தெரியாதவா வந்திருக்கா. நீ உள்ளே போ'' என்ருள்.

"சரி, 'ஸூ'வுக்குப் போக, நாழியாச்சு மாமி; சட்டுனு கிளம்பணும்'' என்று புன்னகை பூத்த வண்ணம் அத்தான் ராஜம் சொன்னான்.

உலகத்துக்குள் ஒரு சின்னஞ் சிறு உலகமாக விளங்கியது மிருகக் கண் காட்சி சாலை. மரியாதைக்குக் கட்டுப் பட்ட மனிதன் போல், கூண்டுக்குள் கிடந்து, ஒன்றும் செய்ய இயலாதவையாய்த் தவித்தன சிங்கங்களும் புலிகளும். தரையை அறைந்து, எலும்புகளை விருந்துண்டு கொண்டிருக்கும் சிங்கங்களின் இடி முழக்கம் மங்களத்தைத் தூக்கி வாரிப் போட்டது. புலிக் கூண்டுகளின் நாற்றத்தைத் தாங்க முடியாமல், அப்பால் நகர்ந்தாள் மங்களம். "வளைந்த வடிவத்தில் எவ்வளவு அற்புதங்கள் இருக்க முடியும். விகார ரூபத்தில் எவ்வளவு விஷயங்கள் இருக்க முடியும் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், இதோ, என்னைப் பார்!'' என்றது போல், ஒரு பக்கத்தில் ஒட்டகம் நின்று கொண்டிருந்தது. கரடிகள் மூக்கைச் சிணுக்கிக் கொண்டு, நிலை கொள்ளாமல் கூண்டுக்குள்ளே இப்படியும் அப்படியுமாய்ப் பிரதட்சணம் வந்து கொண்டிருந்தன. ஒன்றை ஒன்று கோபித்துக் கொண்டன

போல், பிரிந்து பிரிந்து தத்தம் வழியே விரைந்து சென்று கொண்டிருந்த கோவேறு கழுதைகளைப் பார்த்த ராஜத்துக்கு அரசியல் வாதிகளின் நினைவு வந்தது.

"அத்தான், அத்தான்! இதோ பார்'' என்றாள் மங்களம்.

"இது ஒட்டகச் சிவிங்கி. ஒட்டகத்தை விட மிக்க அழகானது! எவ்வளவு அழகான கால்கள், எவ்வளவு ஜோரான கழுத்து! இது நிற்கும்போதிருப்பதைவிட ஓடும் போது தான் மிக விகாரமாயிருக்கும்'' என்றான் ராஜம்.

"ஏன், அத்தான், இது இப்படித் தனியா நிக்கறது?'' "இதற்கு அவ்வளவு கர்வமாக்கும்!''

அவ்விடத்தை விட்டுக் குரங்குகள் இருந்த பக்கமாய்வந்தார்கள். சிறு குரங்குகள், மனிதக் குரங்குகளான கொரில்லாக்கள், ஓராங் ஊத்தாங் என்ற காட்டுக் குரங்குகள் முதலியன அங்கே இருந்தன. ஓர் ஆண் குரங்கு, மங்களத்தைப் பார்த்து கண்ணடித்தது! அதை அவள் தெரிந்து கொள்ளாமல், கையில் வைத்திருந்த பட்டாணிக் கடலையைச் சின்னக்குரங்குக் குட்டிகளிடம் போட்டாள். மௌனி போல் தவஞ்செய்து கொண்டு ஒரு பக்கமாயிருந்த கொரில்லாவைப் பார்த்து விட்டு, இருவரும் அப்பால் நகர்ந்தார்கள்.

பட்சிகள் இருக்கும் இடத்துக்கு வந்தார்கள். மங்களம், மயில்களிருக்கும் திசையை நெருங்கியதும், மயில்கள் கூக்குர லிட்டுத் தோகையை விரித்து ஆட ஆரம்பித்தன. "என்ன இது?'' என்று ராஜத்தை மங்களம் கேட்டாள்.

"மங்களம்! மயில்களுக்குப் பாம்புகள் ஆகாரம். நீண்டு கருத்த உன்னுடைய பின்னலைக் கண்டு, அது ஒரு கரு நாகமென்று மயங்கி, மயில்கள் இப்படிக் கூவிக் கூத்தாடுகின்றன.''

இப்படிச் சொல்லிக்கொண்டு, மங்களத்தின் கருநாகப் பின்னலை ராஜம் தன் கையிலெடுத்துத் தடவிக் கொடுத்தான். பட்டுப்போலிருந்தது அதன் ஸ்பரிசம். "ஆமாம், பாம்பு போலத்தான் இருக்கிறது'' என்றான்.

"அப்புடீன்னா, நீதான் பாம்பாட்டியாம்!'' என்றாள் மங்களம், அவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் புன்முறுவலுடன்.

மங்களத்தை ஆடவைக்கும் பாம்பாட்டியாயிருந்து, ஓயாமல் மகுடி யூதும் பாக்கியத்தை அடைய வேண்டுமென்ற தன்னுடைய மனோ ராஜ்யம் கைகூட வேண்டுமே என்று ஒவ்வொரு கணமும் ராஜாராமன் கடவுளை வேண்டிக் கொண்டு தான் இருந்தான். ஆனால், சப் கலெக்டர் பதவியிலிருக்கும் தன் மாமனுடைய ஒரே அரும் புதல்வியான மங்களத்தை அவன் எப்படி அடைய முடியும்? சென்னை ராமகிருஷ்ண மடத்தில் படித்து, பி.ஏ. பரீட்சையில் தேறி, வேலையின்றித் திரியப் போகும் ராஜம், மங்களத்தை விடப் பன்னிரண்டு வயது பெரியவன், தாய் தந்தை யற்றவன்—இவனா மங்களத்தை அடையத் தகுதியுடையவன்!'' என்று தன்னைப் பற்றித் தனக்குத் தானே மனதுக் குள்ளே அவன் விசாரணை செய்து கொண்டான்.

அவனுடைய குழந்தைப் பருவத்திலேயே அவன் தாயாரிடம்

குடும்பப் பளுவை இறக்கிவிட்டு. ராஜத்தின் தகப்பனார் காலமானார். அந்தப் பளுவைச் சிறிது காலம் தாங்கிவிட்டுத் தாயாரும் காலமானாள். அதற்குமேல், மாமனுடைய சிபாரிசைக் கொண்டு, ராமகிருஷ்ண மடத்தில் சேர்க்கப்பட்டு, அனாதைப் பிள்ளையாய் ராஜம் படித்து வந்தான். விடுமுறை நாட்களில் மாமன் வீட்டுக்கு வருவான். ராஜமும் மங்களமும் விளையாடுவார்கள்; மங்களத்துக்கு அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே, அந்தந்த வயதுக்கேற்ற விளையாட்டுக்களாலும், விநோத வேடிக்கைகளாலும் அவளுக்கு அவன் களிப்பூட்டி வந்தான். அவன் பி. ஏ. பரீட்சையில் தேறிய வருஷம், கோடை விடுமுறை நாட்கள் வந்த சமயம்; மாமன் வீட்டிலேயே தங்கி யிருக்கலாம் என்று அவன் அங்கே வந்திருக்கும் சந்தர்ப்பம். திடீரென, எதிர்பாராமல், இடி விழுந்தது!

மங்களத்துக்குக் கல்யாணம் நிச்சயித்திருக்கிறார்கள்!

"ராஜம்! மங்களத்துக்குக் கல்யாணம். பையன் எம். ஏ. எலக்ட்ரிக் இஞ்ஜினீயர் பிள்ளை!" என்று மாமி சொன்னதும், ராஜத்தின் மனம் இடிந்து விழுந்தது.

ஆத்ம ஆசையைப் பொறுத்த மட்டில் மரண மடைந்துவிட்ட ராஜம், மங்களத்தின் கல்யாணத்தின் போது ஊரி லில்லாம லிருக்க வேண்டு மென்று தான் முதலில் எண்ணினான். மனதில் அப்படி எண்ணினானே யல்லாமல், காரியத்தில் அதை நடத்த முடியவில்லை. ராஜம் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு விசித்திர மலராய்த் தொடுத்து, மங்களத்துடன் முன்பு அவன் கழித்த இன்ப ஆண்டுகளை ஒரு கதம்ப மாலையாய் ஆக்கித் தன் உள்ளத்தில் அணைத்தணைத்து நுகர்ந்து கொண்டிருந்தான். அந்த மாலை நழுவி விழுந்து போய், அதன் மலர்களும் அவிந்து போயின.

சில நாட்கள் கழித்து, அவன் பி. ஏ. பரீட்சையில் தேறிவிட்டதாகச் செய்தி வந்தது. ஆனால், அந்தச் செய்தியை அவன் உணர்ச்சி யின்றியே ஏற்றுக் கொண்டான். வாழ்க்கைப் பரீட்சியில் தவறிவிட்ட ஒருவன் புத்தகப் பரீட்சையில் தேறிவிட்டதனால் என்ன பயன்? பற்பல சில்லறை உத்தியோகங்களில் புகுவதும் வெளிவருவதுமா யிருந்தவன், திடீரென்று ஒரு நாள் கிளம்பி, பம்பாயை அடைந்து, அங்கே குஜராத்தி வியாபாரி ஒருவனுடைய பெரிய வியாபார ஸ்தலத்தில் வேலைக்கு அமர்ந்தான்.

மங்களத்தை அவன் பார்த்துச் சில வருஷங்களாயின. பம்பாயில் வேலை கிடைத்த பிறகு, மாமிக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தான். ஆனால், அவளிடமிருந்து வெகு நாட்களாய்ப் பதிலே இல்லை. கடைசியில், ஒரு கடிதம் வந்தது. வீட்டில் ஏதாவது விசேஷம் நடக்கப் போகிறது போலும்; அதற்குத் தன்னை வரச் சொல்லி மாமி எழுதி யிருக்கலாம் என்று எண்ணி, ராஜம் ஆவலுடன் கடிதத்தைப் பிரித்தான். சுப சமாசாரத்தை எதிர் பார்த்த ராஜம், தலைப் பிரசவத்தைத் தாங்க மாட்டாமல் மங்களம் மாண்ட விவரத்தைப் படித்தான்......

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த இச் சம்பவங்கள், கனவில் புரண்டுகொண்டிருக்கும் ராஜத்தின் நினை

அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக் கூடியதாகவுமிருக்கவேண்டியது ...ஆனல் அது ஊக்கத்தை அளிக்கவும் வேண்டும்!

நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப்பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவைமாத்திர மிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதா யிருக்க வேண்டும். சில உணவுகள் மற்றவைகளை விட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம் வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக்கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனல் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினுல் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

... Dept. P.O. Box No. 353, Bombay ... A160



வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

HVM. 32-50-40 TM

உன்னத தயாரிப்புகள் !

மோஹன்ராம்

பெட்ஷீட்டுகள் டவல்கள்

●

Stockists :

மனோஹரன் ஸ்டோர்ஸ்

181, கீழவாசல் : : மதுரை

தந்தி : 'Harantalky' போன் : நெ. 219

மங்கை ★ பெண்களின் புத்தகம்

பதிப்பாசிரியர் :
"குகப்ரியை"

பெண்களுக்கென ஒவ்வொரு மாதமும்
ஒரு புத்தகம்—குடும்ப வாழ்க்கை, குழந்தை
வளர்ப்பு, குழந்தை மனோதத்துவம்,
சமையல், தையல், கதை, கட்டுரை
இன்னும் பல விஷயங்களுடன்

மூன்றாவது புத்தகம்
மார்ச் இரண்டாவது வாரத்தில் வெளிவருகிறது

புத்தகம் ஒன்றுக்கு ரூ. ஒன்று
[தபால் செலவு தனி]

ஒரு வருடத்தில் வெளிவரும் 12 புத்தகங்களுக்கு ரூ. 12
[தபால் செலவுடன்]

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : : சென்னை

வில் தெளிவாய்த் தோன்றின. அன்றொரு நாள், மங்களத்தை அவன் "ஸூ"வுக்கு அழைத்துக் கொண்டுபோன காட்சி எல்லா வற்றையும்விட மிகத் தெளிவாகத் தோன்றிற்று. பட்டுப்போல் வழவழ வென்று தொங்கிக் கிடந்த அவளது சாட்டைப் பின்னல் ராஜத்தின் கையில் சுற்றிக் கொண்டு கொஞ்சியது. "அப்படீன்னு நீதான் என் பாம்பாட்டியாம்,' என்றாள் மங்களம்.

மின்சார அழைப்பு மணி இரண்டுதரம் "கிர் கிர்" என்று அடித்தது; செருப்புச் சத்தமும், யாரோ ஒருவர் கதவைத் திறந்து கொண்டு ஒரு கண்ணாடிக் குப்பியைத் தரையில் வைக்கும் சத்தமும் கேட்டன. பால்காரன் வந்து, பாலை வைத்துவிட்டுப் போனான். பால்காரன் செய்த சத்தத்தைக் கேட்டு ராஜம் படுக்கையிலிருந்து எழுந்திருந்தான். மங்களம்போல் தோன்றிய யாரோ ஒருவர் தன் அருகிலிருந்து நகர்ந்து போய், வாசற்படி வழியாய் மறைந்தது போலிருந்தது. கனவு நிலையிலிருந்து சற்றுத் தெளிவடைந்து, ஜன்னல் கதவுகளைத் திறந்தான். படுக்கைக்கு எதிரில் கண்ணாடி தென்படவே, அதில் தன்னுடைய முகம் தெரிவதைப் பார்த்துக் கொண்டான். தலையில் நரை, வழுக்கை இரண்டும் தோன்றி விட்டன. இன்னும் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வரும் தன்னைப் பற்றிச் சற்றுச் சிந்தனை செய்து கொண்டான். உழைப்பு என்ற நுகத்தடியில் செக்குமாடு போல், அவனை இழுத்துப் பூட்டப் பகற்பொழுது மறுபடியும் அவனைத் தேடிவந்து விட்டது என்று டிராம்களும் பஸ்களும் ஓலமிட்டன. தன்னையும் அடையாமல், அவளை அடைந்தவனிடமும் தங்காமல் மறைந்துபோன மங்களத்தைக் குறித்து அவனுக்கிருந்த ஆறாத் துயரம், அவனுடைய வாழ்க்கையின் சோகச் சுமையை அவன் தாங்கிச் செல்வதற்கு ஒரு வகையில் உதவி செய்ததென்றே சொல்ல வேண்டும்.

✱

வாழ்க்கைக் கலை

பெண்களைச் சரிவர உணர்ந்து, அவர்களை வகைப் படுத்திப் பிரிப்பது வாழ்க்கைக் கலை.

எல்லோரிடமும் எல்லா விஷயங்களையும் ஒரே மாதிரியாகச் சொல்லுவது வாழ்க்கைக் கலை.

நம்மைத் தவிர மற்ற எவருக்கும் உணர்ச்சி என்பதே கிடையாது என்று நினைத்துக் கொள்வது வாழ்க்கைக் கலை.

முகந் தெரிந்த அளவில் பழக்கமானவர்களைக் கெட்டிக்காரத்தனமாய் ஒதுக்குவது வாழ்க்கைக் கலை.

நெருங்கிய நண்பர்களைச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால், பழக்கமானவர்கள் 'சனியன்'களாக வந்து முளைப்பார்கள்.

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும் என்று ஒருபோதும் கருதாமல் இருப்பது நல்லது. ஏனென்றால், நம்மைப் பற்றி மற்றவர்கள் நினைப்பதை அறிய முடியாது.

சமாளிக்க முடியாத ஆள் என்று பிறர் நம்மைப் பற்றிக் கருதச் செய்வது வாழ்க்கைக் கலை. அவ்வாறு பிறர் நம்மைப் பற்றி நினைப்பதால், நாம் நினைப்பது கைகூடும்.

—இ. வி. லூக்கஸ்

ஓரே தேசம்

ராஜேந்திர பிரசாத்

வடக்கே பனி மூடிய இமய மலைத்தொடரிலிருந்து தெற்கே அனேகமாகப் பூமத்திய ரேகை வரை பரவி நிற்கும் இந்திய நாட்டின் சீதோஷ்ண நிலையிலும் இயற்கை அமைப்பிலும் அதிக மாறுபாடுகளைக் காணலாம். நாலாயிரம் மைல் விஸ்தீரணமுள்ள கடற்கரை இருக்கிறது. கடற்கரையே சிறிதும் இல்லாத பரந்த உள் நாட்டுப் பிரதேசமும் இருக்கிறது. ராஜபுதன சிந்துப் பாலை வனங்கள் இருப்பன போலவே பசுமை கொழிக்கும் வங்க, அஸ்ஸாம் சமவெளிகளும் இருக்கின்றன.

வட கிழக்கு மாகாணமாகிய அஸ்ஸாமிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் தென் மேற்குப் பகுதிகளிலும் ஏராள மழை பெய்கிறது. இதற்கெதிராக ராஜபுதன, சிந்துப் பாலை வனங்களிலும் ஆந்திர மாகாணத்தைச் சேர்ந்த (சீடட் தானமாகப் பெற்ற) ஜில்லாக்களின் சில பகுதிகளிலும் மழை என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது. உள் நாட்டின் சில பகுதிகளில், முக்கியமாகப் பஞ்சாபிலும, வட மேற்கு எல்லை மாகாணத்திலும் அதிகக் குளிரையும் அதிக வெப்பத்தையும் காணலாம். தீபகற்பத்தின் தென் பகுதிகளில், கடற்கரை யோரமாக, மாரிக் காலமோ, கோடைக் காலமோ இருப்பதாகத் தெரிவதில்லை. அனேக இதர விஷயங்களில் இருப்பது போலவே, சீதோஷ்ணம், இயற்கை யமைப்பு, இவற்றில் காணப்படும் பல வகைப்பட்ட நிலையும், வித்தியாசமும், மதவாரியாகவோ வகுப்பு வாரியாகவோ, வகுக்கப்படும் ஜனத் தொகைப் பிரிவு எதனோடும் ஒத்திருப்பதில்லை. குளிர் நிறைந்த வறண்ட வடமேற்குப் பகுதியும், சதுப்பு நிலம் நிறைந்து புயல் வீசுவதும், பசுமை நிறைந்ததுமான கிழக்குப் பகுதி, வட கிழக்குப் பகுதிகளும் சீதோஷ்ணம், இயற்கை அமைப்பு இவற்றில் எல்லா விதத்திலும் மாறுபடுகின்றன. ஆனால், அவ்விரண்டு இடங்களிலும் அதிகமான ஜனத்தொகையுள்ள முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். இதனால், நாட்டை வகுப்பு வாரியாகத் துண்டாடும் கோரிக்கைக்கு ஆதரவு உண்டாகிறது.

சீதோஷ்ணத்திலும், இயற்கை அமைப்பிலும் தென்படும் வேறுபாடுகள் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வளர்ச்சி, அவர்களின் உடை, அவர்கள் வசிக்கும் வீடுகள், அவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்கள்—ஏன், பொதுவாக, அவர்கள் வாழ்க்கை எல்லாவற்றையுமே பாதிக்கின்றன. இத்தகைய வித்தியாசங்களிருந்தாலும், இந்தியா ஒரே நாடுதான். இயற்கையே, எளிதில் கடக்க இயலாத மலைகளையும் கடல்களை

பாகிஸ்தான் பிரச்னை எப்படி வந்தது? இதற்குச் சரித்திரத்தில் ஏதாவது ஆதாரம் காட்ட முடியுமா? முடியாது என்று ராஜன் பாபு இங்கே விளக்குகிறார். சமீபத்தில் வெளியாகிய **பிளவுபடாத இந்தியா** என்ற நூலின் ஓர் அத்தியாயமே இது.

யும் அரணுக அமைத்து, இந்த நாட்டை இதர அண்டை நாடுகளினின்றும் பிரித்து விட்டிருக்கிறது. ஹிந்துக்கள் காலத்திலும், மகமதியர் ஆட்சி செலுத்திய காலத்திலும், படையெடுத்துவந்து ராஜ்யத்தை ஸ்தாபித்த ஒவ்வொரு அரசரும், தத்தம் சக்திக் கியன்றவரை நாடு முழுவதையும் தம்முடைய ஆட்சிக்குள் கொண்டுவர முயன்று, இந்த முயற்சியில் பல்வேறு அளவில் வெற்றியும் அடைந்தார்கள். நாடு பூராவும் தன்னுடைய நேரடியான ஆட்சிக்குள் இல்லா விட்டாலும், தன்னுடைய செல்வாக்கிற்கு உட்பட்டதாகவாவது இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு அரசனும் ஆசை கொண்டான். வடமேற்குக் கோடியில் ஒரு பிரதேசம் யாருக்கும் சொந்தமில்லாத நிலையில் இருந்தது. இந்திய அரசன்—வெளிநாட்டவன் — இப்படியாக அதனை ஆண்டவர்கள் அடிக்கடி மாறிவந்தார்கள்.

ஹிந்துச் சக்கரவர்த்திகளும் மகமதியச் சக்கரவர்த்திகளும் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்த கொள்கையை ஒட்டியே பிரிட்டிஷாரும் நாடு முழுவதையும் பிடித்துக் கொண்டனர். இன்று தங்களுக்குள் சண்டையிடும் மாகாணங்கள் இருப்பன போலவே தங்களுக்குள் சண்டையிட்டு வந்த அனேக ராஜ்யங்கள் அப்போது இருந்தன. ஆனல், அவற்றில் வசித்த தனிமனிதனே அல்லது அவற்றிலொன்றின் அரசனே தன்னை இந்தியன் அல்லாத வேற்றுனுகக் கருதியதாகவோ அவன் வசித்த பகுதி தாய்நாட்டைச் சேராத,—சீனு, பாரசீகம், துருக்கிஸ்தான், அரேபியா, பர்மா, போன்ற—ஒரு தனி நிலப்பகுதி என்று கருதியதாகவோ கூறுவதற்குச் சான்றுகள் இல்லை. அதற்கு மாறுக, ஒவ்வொரு ஹிந்துவும் சந்தியாவந்தனம் செய்யும்போது, சங்கல்பத்தை ஒட்டிய ஒரு ஸ்லோகத்தை அடிக்கடி உச்சரிக்கிறுன். அந்த ஸ்லோகத்தில் நாடு முழுவதையும் ஒரே நிலப் பரப்பாகக் காண்பதோடு, சிந்து, கங்கை, காவிரி இவைகளின் தீர்த்தமெல்லாம் அவனுடைய கமண்டல நீரோடு கலந்து விடுவதாகவே, அவன் கருதி விடுகிறுன். ஹிந்துக்கள் ஆட்சியில் எப்போதாயினும் ஒரு சக்கரவர்த்தி நாடு முழுவதும் தன் ஆட்சிக் குட்பட்டதென்று உரிமை கொண்டாடுவான். அப்போது மட்டுமல்ல வெவ்வேறு அரசர்கள் வெவ்வேறு பகுதிகளில் ஆண்டு வந்த காலத்திலும், மகமதியச் சக்கரவர்த்திகள் டில்லியிலிருந்து ஆண்ட காலத்திலும் நாட்டின் பல பாகங்களிலும் சிறுசிறு மகமதிய அரசாங்கங்கள் கிளம்பிய காலத்திலும் கூடத் தொடர்ந்து மேற்கூறியவாறு நடைபெற்று வந்திருக்கிறது.

நம்முடைய தீபகற்பம் முழுவதிலும் பிரிட்டிஷ் ஆட்சி நடக்கும் இன்றும், அதே ஸ்லோகம் உச்சரிக்கப்பட்டு வருகிறது. முக்கியமாகக் கருதப்படும் யாத்திரை ஸ்தலங்கள் நான்கு. அவற்றிற்கு தாமங்கள் என்று பெயர். இவைகளைத் தரிசிப்பதால் ஒரு ஹிந்துவுக்கு மகத்தான புண்ணியம் கிடைக்கிறது. தீபகற்பத்தின் தென் முனையில் ராமேஸ்வரமும், ஹிமாலயத்தில் 15,000 அடி உயரத்தில் பத்ரிகாசிரமமும், கீழ்க் கரையை ஒட்டிய ஒரிஸாவில் பூரி ஜகன்னதமும், மேற்குக் கடற் கரையில் கத்தியவாரில் துவார

கையும் இருக்கின்றன. யார் ஆண்டபோதிலும், நாடு எத்த கைய நிர்வாக, அரசியல் பகுதிக ளாகப் பிரிக்கப்பட் டிருந்தாலும், ஹிந்துக்கள் எப்போதும், நான் இன்று கருதுவது போல் இந்தி யர்வை ஒரே நிலப்பரப்பாகவே கருதி வந்திருக்கிறார்கள் என் பதை மறுக்க முடியாது.

ஹிந்துக்கள் தொன்று தொட்டுப் பின்பற்றி வந்த எல் லைப் பிரிவுகளை மகமதியரும், பிரிட்டிஷாரும் அப்படியே ஏற் றுக் கொண்டனர்.

இரண்டு தேசங்கள் என்ற கொள்கை தலை தூக்குவதற்கு முன்பு வரை, மகமதியரும் தற் கால இந்தியாவின் எந்த ஒரு பிரதேசத்தையும் தாய் நாட டைச் சேர்ந்த ஒரு பாகமாகவே கருதியும், அதன்படி நடந்தும் வந்துள்ளனர். இந்த நாட்டின் மீது படை யெடுத்து வந்த மக மதியரில் ஒருவராவது இந்தியா வின் எந்த ஒரு பகுதியையும் அவர்கள், முந்தி இருந்து வந்த அன்னிய நாட்டுடன் சேர்ந்து விட வேண்டும் என்று ஆசைப் பட்டதாகத் தெரியவில்லை. பலம் பொருந்திய ஒவ்வொரு அரச னும் இந்த நாட்டிலேயே தங்கி, அவன் ஆட்சியை ஏற்றுக்கொள் ளாத பகுதிகளை அடக்கி அடிப் படுத்துவதிலே தான் ஈடுபட் டிருந்தான். எல்லைப் புறங்களில் ஒரு இடம் சிறிய இயற்கை எல்லைக் கோட்டிற்கு இந்தப் புறமோ அந்தப்புறமோ சேர்ந்து போயிருக்கலாம். இதனால், மேலே சொன்ன விஷயத்தின் ஆதார பூர்வமான உண்மை எந்த விதத்திலும் மாறுபடாது.

தாங்கள் அரசர்களாக இருந்து ஆண்டு வந்த காலத்தில் மட்டு மன்றி, பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்திலும், முஸல்மான்கள் பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந் தவர்களும் சரி, இந்திய சமஸ் தானங்களைச் சேர்ந்தவர்களும் சரி—வெகு சமீப காலம்வரை, இந்தியாவின் எந்தப் பகுதியை யும் அதனோடு சேராத தனித்த பிரதேசமாக நடத்தியதோ அல் லது அவ்வாறு தனித் தேசமாக இருக்க வேண்டு மென்று உரிமை கொண்டாடியதோ கிடையாது. சுதந்தரமுள்ள தனி நாடுகளாக ஆகவேண்டுமென்று முஸ்லிம் லீக் கேட்கும் வட மேற்கு, கிழக்கு மண்டலங்கள் உண்மையிலேயே இந்தியாவிற் குப் புறம்பானவையா, அல்லது அதனோடு சேர்ந்த அதன் பகுதி கள்தானா என்பது எனக்குத் தெரியாது.

எனக்குத் தெரிந்த வரையில், பாகிஸ்தான் தேசிய இயக்கத் தின் ஸ்தாபகரும் தலைவரு மான சி. ரஹமத் அலி ஒருவரே "இந்தியா" வினுடைய பிரதேச ஒற்றுமையை ஒப்புக் கொள்வ தானது "இந்திய மயம்" என்ற கொடுங்கோல் நுகத்தடியை "மிலாத்" மீது சுமத்துவதாகும் என்று வெளிப்படையாக அறி வித்துள்ளார். அதோடு, "இந் தியா" வுடன் ஏற்பட்டுள்ள எல்லாத் தொடர்புகளையும் அறுத் தெறியவே உயிர்வாழ வேண்டும் என்றும், "மிலாத்தை" "இந்திய மயமாய் விடுவதினின்றும் காப் பாற்ற வேண்டும் என்றும், இஸ் லாத்தின் அமைதிக்காகப் பாடு பட வேண்டும் என்றும் அவர் சகோதர முஸ்லிம்களை வேண்டிக் கொள்கிறார். அகில இந்திய முஸ்லிம் லீக் மீதும் சீறி விழு கிறார். அதன் பெயரே "இந்திய மயத்" தின் முத்திரையைத் தாங்கி நிற்கிறதாம் "இந்திய

மயத்தை" எதிர்த்து நாம் நடத்தும் போராட்டத்தை இது குறைவு படுத்துவதாக இருக்கிறது. இன்னும் அதிகமாக அது இந்திய மயம் ஆகி விடும் கொள்கைக்கு வலுக்கொடுக்கிறது, என்றெல்லாம் அவர் பழி சுமத்துகிருர். பெயர்களால் ஏற்படும் விளைவையோ அவற்றின் முக்கியத்துவத்தையோ நாம் குறைத்துப் பேசலாகாது. அவைதான் சிறப்பு வேற்றுமை காட்டுகிற அடையாளங்கள். அந்தப் பெயர் கொண்டவர்களின் உண்மைத் தோற்றத்தை அவை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதற்கும் மேலாக, அவை தார்மிகச் சின்னங்களாகும். உள்ளத் தூண்டுதலின் ஊற்றுக் கண்களாகும்... இத்தகைய பிழையினுல், மிகுந்த கேடு விளைந்திருக்கிறது. அது நம்முடைய தேசிய இனத்தை எதிரியினிடம் விட்டுக் கொடுத்துக் குழப்பி விடும்படி செய்திருக்கிறது. நம்மையெல்லாம் "இந்தியன்" என்ற பெயர்ச் சீட்டுக்குள் அடக்கி விட்டது. "இந்தியன்" என்ற பெயரில் ஏதோ பிழையிருப்பதால் இப்படிச் சொல்வதாக எண்ண வேண்டாம். அந்தப் பெயர் வேறு எந்தப் பெயரையும் போல் நல்ல பெயர்தான். ஆனல், நாம் "இந்திய" ரல்லர். ஆகையால், நம்மையோ நமது ஸ்தாபனங்களையோ "இந்திய" என்ற அடை மொழியால் குறிப்பிடுவது, நம்மையே நாம் கேவலப் படுத்திக் கொள்வதையே ஒக்கும் என்று அவர் சொல்லுகிருர்.

இந்த உண்மையை உணர்ந்த பிறகு ரஹமத் அலி இஸ்லாத்தின் 'ஐந்து வட மேற்குக் கற்கோட்டைகளுக்கு' 1932-ல் பாகிஸ்தான் என்ற பெயர் கொடுத்தார். 1937-ல் வங்கம், அஸாம் இவற்றுக்குப் பங்-இ-இஸ்லாம் என்றும், ஹைதராபாத், தக்காணம் இவற்றுக்கு உஸ்மானிஸ்தான் என்றும், முறையே பெயர் கொடுத்துவிட்டு, மில்லிகற் கோட்டைகள் என்று அவர் கருதும் மூன்று பிரதேசங்களையும் மனம் போனவாறு இரண்டு தேசங்களைக் கொண்ட உபகண்டமாகிய "இந்தியா" வோடு சேர்த்து விடுகிருர்.

1933-லிருந்து தான் ரஹமத் அலியாலும், பாகிஸ்தான் தேசிய இயக்கத்தினராலும், வெவ்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு உபகண்டமாக இந்தியா கருதப்பட்டு வருகிறது. இந்த விஷயத்தில் அவருடைய தலைமையை இதுகாறும் பின்பற்றி வந்திருப்பதாகச் சொல்லக் கூடிய பிரபல ஸ்தாபனமோ தனி மனிதரோ இருப்பதாகத் தெரியவில்லை. நிர்வாகக் காரியங்களுக்காக, பிரதேசப் பிரிவினைகள் ஏற்படலாம். ஆனல், இந்த மாதிரி பிரிக்கப்பட்ட நாடுகள் உண்டா, இப்படிப் பிரிக்கப்பட்ட நாடுகளை உண்டாக்க முடியுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஐரோப்பாவில் ஒரு நாட்டைத் துண்டாட முயன்றபோதெல்லாம் தீராத துவேஷமும் மனக் கசப்பும்தான் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றின் விளைவாக, போர்கள் மூண்டு ரத்தம் சிந்தியதுதான் மிச்சம். சமீபத்தில் நடந்து, உலகத்தைப் பாழ்படுத்திய யுத்தத்தையும் இவற்ருேடு சேர்க்கலாம். இதிலிருந்து நாம் நல்ல பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இது, நமக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்க வேண்டும்.

✻

எகிப்து

ஆர். ராமநாதன்

மத்திய கிழக்கு நாடுகள் போர் முரசு கொட்டுகின்றன. சுதந்தரத் தீ அந்த நாடுகளில் கொழுந்துவிட்டு எரிகிறது. ஆர்ப்பாட்டங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் அங்கே தினசரிச் சம்பவங்கள். அலெக்சாண்டிரியாவில் சென்ற வாரம் நடந்த மாணவர் ஆர்ப்பாட்டம் இதற்குச் சான்று.

புதிய எகிப்தில் புரட்சிப் புயல் வீசுகிறது. ஏகாதிபத்திய ஆட்சி முறையின் கீழே நீண்ட நெடுங்காலமாக நெளிந்து கொண்டிருந்த மக்கள் பரிபூரண சுதந்தரம் வேண்டுகிறார்கள். ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பதை உணர்ந்த ஜனங்கள் "ஏகாதிபத்தியமே,வெளியேறு!" என்று கோஷிக்கிறார்கள்.

எகிப்தில் சட்டசபை இருக்கிறது; எகிப்தில் மந்திரி சபை இருக்கிறது; எகிப்திய மந்திரிகள் எல்லாம் எகிப்தியர்கள். இது மாத்திரமா? ஐக்கிய நாடுகள் சபையில் எகிப்து அங்கம் வகிக்கிறது; பாதுகாப்புக் கௌன்சிலில் எகிப்துக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது; எகிப்து சுதந்தர நாடு என்று பறைசாற்றப்படுகிறது. அப்படியானால்,

> **பெயரளவிலே எகிப்து சுதந்தர நாடுதான். ஆனால், ராணுவ பலத்தாலும், ஒப்பந்த ஷரத்துக்களின் சாக்கின் பேராலும், பிரிட்டிஷ்காரர் அதைக் கேவலம் ஓர் அடிமை நாடாகவே நடத்தி வருகிறார்கள். இது எவ்வளவு காலந்தான் நீடிக்க முடியும்? எகிப்தில் உள்ள கொந்தளிப்புக்குக் காரணம் என்ன? அங்கே மக்கள் செய்யும் புரட்சி எப்போது பலன் தரும்?**

தேச பக்தர்கள் யாரை எதிர்த்துப்போர் புரிகிறார்கள்? மாணவர்கள் யாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்? உண்மையில் எகிப்து சுதந்தர நாடா?

பழைய சரித்திரத்தைக் கொஞ்சம் புரட்டிப் பார்ப்போம்,

முதல் உலக மகா யுத்தம் முடிந்த பிறகு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொடுங்கோலாட்சியைப் பல நாடுகளில் நிலை நிறுத்த முயன்றது. எகிப்தை என்றென்றைக்கும் ஒரு காலனியாக வைத்திருக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சூழ்ச்சி செய்தது. ஏகாதிபத்தியம் எங்கே போகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்த ஜனங்கள், மகிமை பொருந்திய அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியால் ஊக்கப்பட்ட ஜனங்கள், புதுமைத் தீயில் குளித்தெழுந்த மக்கள் 1919-ஆம் வருடம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். எகிப்து அதுவரையில் கண்டிராத அவ்வளவு மகத்தான புரட்சியைக் கண்டது. பொங்கி எழும் ஜன சக்தியை எதிர்க்க முடியாமல் ஏகாதிபத்தியம் பின் வாங்கிற்று. எகிப்தின் சுதந்தரம் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அதே நிமிடம் வேறு உருவத்தில் எகிப்தின் கழுத்தில் அடிமைச் சாஸனம் தொங்க விடப்பட்டது. ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடி தளரவில்லை; ஆனால், அது மக்கள் கழுத்தை நெரித்துக் கொண்டே இருந்தது. இது எவ்வாறு சாத்தியமாயிற்று?

1919-ஆம் வருடப் புரட்சிக்குப் பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மறைமுகமாக எகிப்தை ஆள ஆரம்பித்தது. நேரடியான அடிமைத் தனத்திற்குப் பதிலாகப் பொருளாதார அடிமைத் தனம் புகுத்தப்பட்டது!

நிலச் சுவான்தார்கள் நிறைந்த நாடு எகிப்து. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தயவால் அங்கே தொழில் வளரவில்லை! எனவே, பிரபுத்வக் காலத்தின் சின்னங்கள் அங்கே வேரூன்றி யிருக்கின்றன.

எகிப்தை 300 குடும்பத்தார் ஆளுகிறார்கள் என்றால், அது மிகை யாகாது. "300 பாஷாக்களும், ஜமீந்தார்களும்" எகிப்தின் யஜமானர்கள்; இவர்கள் யஜமானர் முடி மன்னர். இவர்கள் எல்லோருக்கும் மேலே வீற்றிருக்கிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!

எகிப்தின் சொத்தெல்லாம் 300 குடும்பத்தார் ஆதிக்கத்திலிருப்பதாகச் சொன்னோமல்லவா? அந்த 300 குடும்பத்தார் பிரிட்டிஷ் பாங்கியின் இரும்புப் பிடியில் இருக்கிறார்கள். இவர்கள் சம்பந்தப்பட்ட' வரையில் பிரிட்டிஷ் பாங்கி இட்டதுதான் சட்டம். எனவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இவர்கள் மூலம் எகிப்தை ஆளுகிறது! இதுதான் மறைமுகமான ஆட்சி.

மிக மிகப் பிற்போக்கான இந்த வர்க்கப்தான் 1923-ஆம் வருடச் சட்டத்தை வகுத்தது. மன்னனைச் சர்வாதிகாரி ஆக்குகிறது இந்தச் சட்டம். சட்ட சபையைக் கூட்டவும், கலைக்கவும் மன்னனுக்கு அதிகாரம்; மந்திரிகளுக்குச் சீட்டுக் கொடுக்கவும் மன்னனுக்கு அதிகாரம்! இது தான் எகிப்துக்கு அளிக்கப்பட்ட சுதந்தரம்!

மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு எகிப்தை எகிப்தியர்கள் ஆளுகிறார்கள் என்றே தோன்றும். எகிப்தில் சட்ட சபை இருக்கிறது; மந்திரி சபையும் இருக்கிறது. இன்னும் என்ன வேண்டும்? ஆனால் உண்மை என்ன?

எகிப்தை உளுத்துப் போன எகிப்திய ஜமீந்தார்கள் மூலம் ஆளுவதுடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திருப்தி அடைந்து விடவில்லை. அது நேரடியாகவும் எகிப்தின் உள் நாட்டு விஷயங்களில் தலையிடுகிறது. எகிப்தின் பொருளாதாரத்தைப் பிரிட்டிஷ் பாங்கி நிர்வகிக்கிறது; போலீசைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் நிர்வகிக்கிறார்கள்; தணிக்கை செய்கிறவர்களும் பிரிட்டிஷ் அதிகாரிகள்தான்! ஒரே வார்த்தையில் சொல்லுவதானால், எகிப்தின் ஜீவனைத் தன் கையில் வைத்துக் கொண்டு, அதைத் தன் விருப்பம்போல் ஆட்டி வைக்கிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!

இந்த முறையைத்தான் வாப்த் கட்சி வன்மையாக எதிர்க்கிறது. மிக முற்போக்கான தேசியக் கட்சி இது; எகிப்து மக்கள் சார்பில் பேச உரிமை படைத்த கட்சி இது. ஆபத்துக் காலத்தில் இக் கட்சியை உபயோகிப்பதும், ஆபத்து நீங்கினதும் இக் கட்சியை நசுக்க முயலுவதும் ஏகாதிபத்திய ராஜ தந்திரங்களில் ஒன்று. உதாரணம் வேண்டுமா?

நாஜிகள் வெற்றியின் சிகரத்தில் வீற்றிருந்த பொழுது எகிப்துக்குப் பேராபத்து ஏற்பட்டது. வழக்கம்போல், அப்பொழுது, பிற்போக்காளர்கள் யஜமானர்

களை மாற்றிக் கொள்ளத் தயாரா யிருந்தனர். பலர் நாஜிகளின் தயவை நாடினர். அவர்களை நம்ப முடியாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே, புதிய தேர்தல் நடத்தும்படி ஏகாதிபத்தியம் கட்டளையிட்டது. தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதும், ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதும் ஏகாதிபத்தியத்திற்கு நன்கு தெரியும். தேர்தலில் வாப்த் கட்சி அமோகமான வெற்றி பெற்றது.

வாப்த் கட்சி அதிகாரத்திற்கு வந்தது. புதிய உற்சாகம் தேசத்தில் குடிகொண்டது. எகிப்து முன்னேற்றப் பிரயாணத்தை ஆரம்பித்தது. ஜனங்களின் உரிமைகளைக் காக்கும் சட்டங்கள் பல பிறந்தன. வரிப் பளுவால் வாடிக் கொண்டிருந்த விவசாயிகள் விமோசனம் அடைந்தனர், வரிப் பளு பெரிதும் குறைக்கப்பட்டது. தொழிற் சங்கச் சட்டம் பிறந்தது. பிரஜா உரிமை, நிலை நிறுத்தப்பட்டது. அறியாமையைத் துடைக்கும் வேலையில் வாப்த் கட்சி கவனம் செலுத்திற்று. சோவியத் யூனியனுக்கும் எகிப்துக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வளவும் 1942-ஆம் வருடத்தில் நடந்தது. இந்த அபிவிருத்திகரமான நடவடிக்கைகள் பிற்போக்காளர்களின் கண்களை உறுத்தின. ஆனால், அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டு சும்மா இருந்தனர்.

நாஜிகள் விழுந்தனர். அதைத் தொடர்ந்து பிற்போக்காளர்கள் செயலாற்றினர். வாப்த் கட்சி சர்க்காரைக் கவிழ்க்க அவர்கள் முடிவு செய்தனர். எனவே எகிப்து சட்டசபை கலைக்கப்பட்டது; வாப்த் சர்க்கார் வீழ்த்தப்பட்டது. மீண்டும் கொடுங்கோலாட்சிக்குத் துவஜாரோகணம் செய்யப்பட்டது.

புதிய சர்க்கார்—நொக்ராஷி பாஷா தலைமையில் ஏற்பட்ட புதிய சர்க்கார்—வாப்த் சர்க்கார் செய்த நல்ல வேலைகளையெல்லாம் அடித்துத் தகர்த்தது.

இந்த ஆட்சி முறையை எதிர்த்துத்தான் கிளர்ச்சி செய்கிறார்கள் எகிப்து தேசபக்தர்கள்.

எகிப்திலிருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று ஒரு முகமாகக் கோருகிறார்கள் தேசபக்தர்கள். ஏன்? எகிப்திலுள்ள பிற்போக்காளர்களின் ஆயுதம் தாங்கின படை இது; எகிப்தின் சுதந்தரத்தைப் பரிகசிக்கும் சக்தி இது! எகிப்திலிருந்து பிரிட்டிஷ் ராணுவம் வாபஸ் வாங்கப் படுகிறது என்றால் சுதந்தரத்தை நோக்கி எகிப்து வெகு தூரம் முன்னேறுகிறது என்று அர்த்தம். "பிரிட்டிஷ் சிப்பாய்களை வெளியேற்று!" என்று கோஷித்துக் கொண்டு, அலெக்சாண்டிரியாவில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள்தான் சில நாட்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப் பட்டனர்!

ஆம்; சுதந்தரப் போராட்டம் எளிதானதல்ல. சுதந்தரப் போர் கரடு முரடானது. வேலை கஷ்டமானது என்பதற்காக வேலை செய்யாமல் இருக்க முடியாது. வானத்தின் கீழே இருப்பவன் இடிக்குப் பயப்பட முடியாதல்லவா?

எகிப்து பரிபூரண சுதந்தரம் கேட்கிறது. அதன் கோரிக்கை நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை!

சரும சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

ரெக்ஸோனா வினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்யமுடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லையெனின் அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனா வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமைவாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிருமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனாவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச்சேர்த்து நன்மையைக்கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின்மீது படிந்துள்ள அழுக்கையும், வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்திசெய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்றாய்ப் போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனாவையே உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமியையொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும், குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள்; அரிப்புகள், சணைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 27-50 TM

REXONA PROPRIETARY LIMITED

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டு களாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னான பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,

Manufacturing Perfumers

MADURA

பவானி பிரசுரம்

(ராயவரம்)

	ரூ. அ.
ஜெயகாதல் கீதம் துர்கனேவ்	0-8
சுந்தரி வ. ரா.	5-0
மஞ்சி விரட்டு கொத்தமங்கலம் சுப்பு	3-8
சஞ்சீவி 'குகப்ரியை'	(அச்சில்)
வானவில் வாண்டா வாஸிலிவ்ஸ்கா	,,
காதல் வாண்டா வாஸிலிவ்ஸ்கா	,,

சக்தி காரியாலயம்

சென்னை : மதுரை

கோயமுத்தூர் : திருநெல்வேலி

பாதிரியின் மகள்

உர்ஸுலா புளும்

அப்போது எனக்கு ஏழு வயது. ஞாயிற்றுக் கிழமை என்றால், குறைந்தது இரண்டு தடவை யாவது மாதா கோவிலுக்குப் போவேன். உண்மையாகவே உடல் நிலை மிக மோசமா யிருந்தாலொழிய, மாதா கோவிலுக்குப் போகாமல் இருப்பது பெருந் தவறு என்று எண்ணிய காலம் அது. மாதா கோவிலுக்குப் போவது என்பது அந்தக் காலத்துப் போக்கு, "பாஷன்". மாதா கோவிலுக்குப் போகச் சிறிது தூரம் நடக்க வேண்டி யிருந்த தால், அந்த ஞாயிற்றுக் கிழமை யன்று பத்தரை மணிக்கே புறப்பட்டு விட்டோம். கோவிலுக்கு வந்தவுடன் பூட்சு எல்லாம் கழற்றி விட்டு, உரிய இடத்தில் குடைகளை மாட்டியாய் விட்டது. பிறகு, தாயாரைப் பின் தொடர்ந்து, சமர்த்தாக, அமரிக்கையாகப் போக வேண்டும். உள்ளே சென்றதும், குடும்பங்களுக் கென்று ஒதுக்கப் பெற்ற பகுதியில் போய், மண்டியிட்டு அமர வேண்டும். முழங்கால்களுக்குக் கீழே போட்டுக் கொள்வதற்காக மெத்தைகள் கொடுப்பார்கள் (ஏழு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்குச் சிறியதாக இரண்டு மெத்தையும், பெரியவர்களுக்குப் பெரியதாக ஒரு மெத்தையும கொடுப்பது வழக்கம்). மண்டி யிட்டவடன், வேதப் புத்தகத்தைத் திறந்து கொண்டு, உரிய கால அளவுக்குப் பிரார்த்தனை செய்யவேண்டியது—இது அவரவர்கள் தனித் தனியே செய்து கொள்ளும் பிரார்த்தனைதான்.

இப்போதே ஒன்று சொல்லி விடுகிறேன். மண்டியிட்ட பிறகு என்ன செய்ய வெண்டு மென்று எனக்குத் தெரியவே தெரியாது. ஏன் செய்ய வேண்டு மென்பதையும் நான் அறிந்ததில்லை. காலையில் எழுந்தவுடன், முதல் வேலையாகப் பிரார்த்தனை செய்து விட்டேன். மீண்டும், இப் போது வேறு பிரார்த்தனை செய்துகொள்ள ஒன்றுமே இல்லை. என்னைப் பொறுத்தவரையில், எல்லாம் வல்ல கடவுளிடம் அப்போது எனக்கு ஒரு வேலையும் இல்லை. மண்டியிட்டு அமர்ந்த பிறகு, எப்போது எழுந் திருக்கப் போகிறோமோ என்ற எண்ணத்துடன், கடைக்கண் வழியாக, என் அன்னையைப் பார்ப்பேன். ஆனால், என்னைப் பிறர் பார்த்தால், மிகவும் பக்தியோடு பிரார்த்தனை செய்து கொண் டிருப்பதாகத்தான் நினைப்பார்கள். என் அன்னை என்னை லேசாகத் தட்டிய போதோ, அல்லது எழுந்திருக்கு மாறு சைகை செய்த போதோ, மிகவும் பணிவுள்ள—பக்தி வெள்

"கோவிலாவது, மண்ணாவது! எல்லாம் ஆஷாட்பூதித்தனம், ஐயா!" என்கிறார் பகுத்தறிவு வாதி. உருவமும் அருவமுமான இறைவனை அடையக் கோவிலும் விக்கிரகமும் பெருந்துணை செய்யும் என்கிறார் சமய வாதி. பக்தியுடன் ஆஷாட் பூதித்தனம் எப்படிக் கலந்து விடுகிறது என்பதைக் குழந்தை கண்டு கொள்கிறது. எப்படி? பிரபல நாவலாசிரியை உர்ஸுலா புளும் எழுதிய மாறிய நிலைமை என்ற புத்தகத்தில் உள்ள ஒரு பகுதியின் சாரமே இந்த ரசமான கதை.

ளத்தில் அழுந்தி யிருந்த—பிள்ளை யாகப் பிறர் நினைக்கும் வண்ணம் எழுவேன்.

பிறகு, என் தாயார் ஆர்மோனியம் வாசிப்பாள். எந்தக் காலத்திலோ வாங்கிய பழைய ஓட்டை ஆர்மோனியம் அது. பல கட்டைகளுக்கு இசையே கிடையாது. அதனுள்ளே எலிக் குஞ்சுகள் வேறு! அன்னை பாடு மிகவும் கஷ்டந்தான். என்ன செய்வது! வயல் நடுவே மூடிக் கிடக்கும் மாதா கோவிலில் எலி குடி புகுவது இயற்கைதானே. ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள்தான் அதன் கதவுகள் திறக்கும். மற்ற நாளெல்லாம் கோவில் பக்கம் திரும்புவார் இல்லை. எலிக்குஞ்சுகளுக்குச் சௌக்கியமான இடம் ஆர்மோனியப் பெட்டிதான். ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள்தான் அதை உபயோகப் படுத்த ஆள் வரும். ஆர்மோனியத்தை இசைக்க அம்மா சென்ற பிறகு, குடும்பத்துக் "குஞ்சு குட்டி" களை நான்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். (குட்டையான என் தம்பிக்கு மூன்று மெத்தைகள் கொடுத்தால்தான் திருப்தி....) கிராமத்தார்களிடம் நல்ல பிள்ளை என்று பெயரெடுக்க வேண்டுமே யென்ற கவலை யெல்லாம் எனக்குத் தான். அப்படிப் பட்ட பைத்தியக்காரத் தனமான எண்ணம் ஒன்றும் என் தம்பிக்குக் கிடையாது. அங்கேயிருந்த அலமாரியிலிருந்து பிரார்த்தனைப் புத்தகங்களை எடுத்துக் கடைகட்ட ஆரம்பித்து விடுவான். வரிசையாக ஒவ்வொன்றாக எடுத்து அடுக்கிய பிறகு, வியாபாரி ஆகிவிடுவான். ஒரு கோடியிலிருக்கும் புத்தகத்தை எடுக்கிறேன் என்று, திடீரென்று அவசர அவசரமாக எழுந்து, அலமாரியில் முட்டிக் கொள்வான். கடைசியில், அவன் செய்த சுட்டித் தனத்துக் கெல்லாம் என்னைத்தான் எல்லோரும் பழிப்பார்கள்.

பிறகு, யாவரும் சேர்ந்து ஈடுபடும் பொதுப் பிரார்த்தனை நடைபெறும். அவரவர்கள் தங்கள் தங்கள் இடங்களில் மண்டியிட்டு அமர்ந்திருப்பார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுவார்கள். தேவன் திருவுணவைப் பற்றிய பாட்டுப் பாட வேண்டிய நாளென்றால், மிகவும் சிரமந்தான். வெகு கவனமாக இருந்து பாடா விட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாக மண்டி போட்டு எழுந்திருக்க வேண்டியதுதான். மண்டிபோட வேண்டிய இடத்தில் நிற்பார்கள்; நிற்க வேண்டிய காலத்தில் மண்டியிட்டிருப்பார்கள். கடைசி முடிவென்ன? ஒரே குழப்பந்தான்.

பிரார்த்தனையின் போது பாடும் பாடலின் ஓசைதான் மிகவும் முக்கியமானதாய் மனத்தைக் கவர வல்லது. ஆனால், அந்த இசையை எழுப்புகிறவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள்? பெரிய பெரிய கால் சட்டைகளை அணிந்து வரும் சிறு பையன்கள் முதலில் வரிசையாக உட்கார்ந்திருப்பார்கள்; ஏதோ கவுன் என்று பெயருக்கு அணிந்து கொண்டு, தலைக்குப் பொருந்தாத தொப்பிகளை வைத்துக் கொண்டு, சில சிறுமிகளும் இருப்பார்கள். இந்தச் சிறுவர் சிறுமியர்கள் எழுப்புகிற இசைதான் பிரார்த்தனை இசை. வேறு எவருடைய ஒலியையும் கேட்க முடியாது. இவர்களுக் கெல்லாம் பின்னால், நான்கு கிழவர்கள்-தொப்பிகளைக் கழற்றி நாற்காலியின் கீழ்

வைத்து விட்டு நிற்கிறார்களே,— அவர்கள் இந்த உலகத்திலே வேறே எங்கேயும் கேட்க முடியாத மாதிரியாகச் சத்தம் போடுவார்கள். இது தான் பாட்டு!

கடைசியாகப் பாதிரியார் - எங்கள் அப்பாதான்—உபதேசப் பிரசங்கத்தை ஆரம்பிப்பார்.

பாதிரியாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிரசங்கத்தை எப்போதும் கேட்பதில்லை. ஏன் தெரியுமா? முதல் காரணம் நீங்கள் எல்லோரும் அறிந்ததுதான். உபதேசப் பிரசங்கத்தைக் கேட்பது என்பது ஒரு தண்டனையேதான். அத்தனை சுவாரஸ்யமாய் இருக்கும்! இன்னொரு விஷயம்; பேசுவது யார்? எங்கள் அப்பாதானே! கடைசிச் சமாசாரம். அந்தப் பிரசங்கத்தைக் கேட்டே ஆகவேண்டுமென்று, என்ன, வேத விதியா? மனத்துக்குப் பிடித்தமான காரியம் ஏதாவது வேண்டுமே என்ற கவலைதான் அந்தச் சமயத்தில் எனக்கு வரும். எங்கள் தந்தையார் உபதேசம், அதிகமாய்ப் போனால், பத்தே நிமிஷந்தான். என்றாலும், அந்தப் பத்து நிமிஷமே எனக்கு நெடு நேரமாகத் தான் படும். என் தம்பியைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. நாங்கள் இருந்த இடத்தில் ஒரு படப் புத்தகம் வைத்திருந்தோம்—யாருக்கும் தெரியாமல்தான். அதைப் புரட்டிப் புரட்டிப் படம் பார்ப்பதுதான் எனக்கும் தம்பிக்கும் வேலை. எங்கள் இருவருக்கும் நடுவில் அம்மா உட்கார்ந்து "அமைதியை நிலைநாட்டுவாள்". அவள் இல்லாவிட்டால், நாங்கள் இருவரும் படம் பார்க்கிற போரில் ஒரு பிரளய காலந்தான் உண்டாகும். அம்மா, அமைதியை நிலைநாட்ட வேண்டி, எங்களிடையே உட்கார்ந்திருப்பதில் ஒரு சங்கடமுண்டு. தகப்பனார் தமது பிரசங்கத்தை முடிக்குந் தறுவாயில், அடித்துப் புரண்டு, அவசர அவசரமாக ஓடவேண்டியிருக்கும். இப்படித் தடுமாறி ஓடிவருவது எங்கள் அப்பாவுக்குப் பிடிக்காது.

ஒரு நாள், ஒரு சிறுவன், கைக்குட்டையைக் கொண்டு முயல் போலச் செய்து, பாடிக்கொண்டிருக்கும்போதே, நடுநடுவே, நாங்கள் இருந்த பக்கமாக அதை நீட்டி நீட்டிக் காட்டினான். என் தம்பிக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரித்தான்; அடக்க முடியவில்லை. பிரார்த்தனையின் போது வேடிக்கை செய்வதாவது! தம்பி, கல்லறைகள் இருந்த பக்கமாக வெளியேற்றப்பட்டான். பிரார்த்தனை முடியும் வரை அவனை உள்ளே வரவிடவில்லை.

அந்த வாரம் என் தம்பி அகப்பட்டுக்கொண்டான் என்றால், அடுத்த வாரத்தில் நான் அகப்பட்டுக் கொண்டேன். அடுத்த கிராமத்திலிருந்து எங்களுக்குத் தெரிந்த குடும்பத்தினர் விருந்தினராக வந்திருந்தனர். அவர்கள் வருவதென்பதே எங்கள் தகப்பனாருக்குப் பிடிக்காது. அவர்கள் செய்யும் வேடிக்கைதான் எங்கள் அப்பாவின் வெறுப்புக்குக் காரணம். எங்கள் தந்தையாருக்கு வேடிக்கையும் விளையாட்டும் பிடித்திருக்கலாம். அது வேறு விஷயம். என்னதான் இருந்தாலும், ஆண்டவன் சன்னிதியில் விளையாட்டாவது!

குடும்பத்தினர் பகுதியில் அமர்ந்திருந்தோம். புத்தகம் வைக்குமிடத்தில் துவாரங்கள் இட்டு

அழகு செய்திருந்தான் தச்சன். அதன் முன் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். சடையை இரண்டாகப் பிரித்துப் பின்னி விட்டிருந்தாள். குச்சிபோல், இரண்டு சடையும் விறைத்து நின்றது. விருந்து வந்த குடும்பத்துச் சிறுமி இதைப் பார்த்தாள். அடேயப்பா! இவ்வளவு இருந்தால் போதாதா! துவாரத்தின் வழியாக இரண்டு சடையையும் மெல்ல இழுத்து, இரண்டையும் சேர்த்து முடிந்து விட்டாள். அவள் செய்வதைப் பார்க்காமல் இருக்க வேண்டுமென்றுதான் பார்த்தேன். ஆனால், அதுதான் முடியவில்லை. சிரிக்கக் கூடாது என்று நினைத்தால்தான் எங்குமில்லாத சிரிப்புப் பொத்துக் கொண்டு வரும்......இதற்குள், தந்தையார், உபதேசப் பிரசங்கத்தை முடித்து, மங்களம் சொல்ல ஆரம்பித்தார். மங்களம் சொல்லும் போது, வழக்கம் போல எழுந்தோம். பாவம், அந்தச் சிறுமி எழுந்ததுதான் தாமதம்—அடுத்த கணமே, கூச்சலிட்டு உட்கார்ந்து விட்டாள்.—அவளென்ன உட்காருவது! சடை அவளை வெடுக்கென்று இழுத்து உட்கார வைத்துவிட்டது. நீங்கள்தான் சொல்லுங்கள். நான் சிரித்ததில் தப்பு உண்டா? ஏழு வயதுச் சிறுமி தானே!

என்னைப் பிடித்து இழுத்துக் கல்லறைப் பக்கமாக வெளியே தள்ளிவிட்டார்கள். அடாடா! அந்தக் கல்லறைகள்! "......... ரின் புனித நினைவு குறித்து" என்றும் "என்............அன்பு நிறைந்த நினைவு நோக்கியது" என்றும், "இங்கு இருப்பது என் அரும் பெறல் அன்பன்" என்றும் எத்தனை எத்தனை அன்பு மொழிகள்! உண்மையிலா? உலகத்தில் வேறு எங்குமே அவ்வளவு பொய் சொல்லவோ எழுதவோ படுவதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

✲

வாசனையின் பாஷை

பாரிஸைச் சேர்ந்த எஸ்மி என்பவள் பிரசித்தி பெற்ற ஓர் அத்தர் வியாபாரி. வாசனைப் பொருள்களை உபயோகிப்பது பற்றி அவள் சில அழகான, புதுமை நிறைந்த, கருத்துக்களை வெளியிட்டிருக்கிறாள்.

இரண்டு முக்கிய நோக்கங்களுக்காகவே வாசனைப் பொருள்களை உபயோகிக்க வேண்டும் என்று அவள் கூறுகிறாள்.

நம் உடலின் அசுத்தம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக உடலுக்கு வாசனை ஊட்டுகிறோம். நாம் குளித்துச் சுத்தமாக இருக்கும் போது வாசனை சேர்ப்பதால் நம்மைச் சுற்றிலும் மிக்க ரம்மியமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்கிறோம். இதனால், பிறரது கவனத்தை நாம் வெகு எளிதில் கவர்ந்து விடுகிறோம். குளிக்காமல், அசுத்தத்தோடு, பரிமளத்தை உபயோகிப்பது, சேற்றிலே அத்தரைக் கொட்டுவதையே ஒக்கும்.

நீங்கள் உபயோகிக்கும் பரிமளத்தின் நறுமணம், உங்களைப் பற்றித் வெளிவாகவும், தயக்கமில்லாமலும் பிறருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மின்சார அனுத்திரள்கள் மூலம் சரியான சமிக்ஞையை அனுப்பினால், சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவரிடமிருந்து சரியான எதிர்ச் சமிக்ஞை கிடைக்கும். அதேபோல், நீங்கள் பொருத்தமாக வாசனை பூசிக்கொண்டால், பிறருடைய கவனத்தை உங்களுடைய நறுமணம் நல்ல முறையில் கவரும் என்று எஸ்மி கூறுகிறாள்.

மனம் மாறுவது ஏன்?

மிரான் ஸ்டெர்ன்ஸ்

ஒரே நிகழ்ச்சி பலரைப் பல வித மாகப் பாதிக்கிறது. ஒரு நாள் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு மாதிரியாய் நினைத்தவர், இன்னொரு நாளில் அதே விஷயத்தைப் பற்றி அதே மாதிரி நினைப்ப தில்லை. ஏன் இப்படி?

சில சமயம், காரியாலயத் தலைவர் மிகவும் "நல்ல மாதிரி"யாக இருக்கிறார். அப்போது, அவர் கீழே வேலை பார்ப்போர் செய்யும் சிறு தவறுகள் ஒன்றும் அவர் மனத்தில் பெரிதாகப் படுவதில்லை. வேறு சில வேளைகளில், ஒவ்வொரு காரியத்திலும் அப் பழுக்கு என்பது ஒரு சிறிதும் இல்லாமல் யாவரும் வேலை செய்யவேண்டும் என்று அதே தலைவர் எதிர்பார்க்கிறார்.

குழந்தைகள் சில சமயம் வெகு பிரியமாயும், பணிவாயும் நடந்து கொள்ளும். வேறு சமயங்களில் "பிசாசு"கள் மாதிரி அடம் பிடிக்கும். இது தாய்மார்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். ஒரு நாள், குளித்துக்கொண்டிருக்கும் போதே, கணவனுடைய வாய் இசை எழுப்புகிறது; இன்னொரு நாள், அதே கணவன், வாய் மூடி மௌனியாய் "உம்"மென் றிருக்கிறான். இவற்றுக்குக் காரணம் என்ன?

இவைகளி லெல்லாம் என்ன புதுமை இருக்கிறது? இயற்கையான காரியங்கள்தான். தீமையும் நன்மையும் கலந்த இந்த வாழ்க்கையில், அந்தந்த நிலைமைக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்ப மனிதனுடைய மன நிலையும் அமைகிறது. நல்ல நிகழ்ச்சி, மன எழுச்சிக்குக் காரண மாகிறது; தீய நிகழ்ச்சி, மனத் தளர்ச்சிக்குக் காரண மாகிறது — என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

அவ்வாறு நீங்கள் கருதுவது தவறு என்று விஞ்ஞானம் விளக்கிக் காட்டுகிறது என்று கூறுகிறார். டாக்டர் ரெக்ஸ் போர்டு-பி-ஹெர்சே என்னும் அறிஞர், பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தில் அமர்ந்து, பதினேழு வருஷகாலம் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். எழுச்சியும் தளர்ச்சியும், ஒன்றன் பின் ஒன்றாக, குறிப்பிட்ட கால அளவில், மாறி மாறி வருவனவாக அவர் கண்டிருக்கிறார். மனிதர் யாவருக்கும் இது பொது; சில காலம் ஊக்கமுள்ளவராய் இருப்பவர், அதன் பின் உள்ளத் தளர்ச்சி எய்துகிறார். சுற்றுச் சூழலில் நடக்கும் காரியங்கள் எழுச்சிக் காலத்தையோ அல்லது தளர்ச்சிக் காலத்தையோ நீடிக்கச் செய்யலாம் அல்லது குறையச் செய்யலாம். அவ்வளவே தவிர, வெளி நிகழ்ச்சிகளே மன நிலைக்கு முழுப் பொறுப்புடையன என்ப தில்லை. சுமார் முப்பத்து மூன்று நாட்

"காலையில். ஒனருவர், கடும் பகலில் ஒன்ருவர், மாலையில் ஒன்ருவர் மனிதரெலாம்" என்று புலவர் பாடினர். காலைக்கும் மத்தியானத்துக்கும் இடையில் நவ நவமாக மாறி வருகிறவர்களும் உண்டு. நம்முடைய மனம் மாறுவதற்கு முக்கியமான, அடிப்படையான காரணத்தை விளக்கும் இந்தக் கட்டுரை ரெட் புக் என்ற இதழில் வெளி வந்தது.

கள் கழிந்த பிறகு, மீண்டும் பழைய மாதிரியான உணர்ச்சி நிலை நம்மை வந்தடைகிறது. மனித "உணர்ச்சிச் சக்கரத்" தின் கால அளவு, பொதுவாக, இந்த முப்பத்து மூன்று நாட்கள் தான்.

ஒரு தொழிற்சாலையில் வேலை பார்த்த இருபத்தைந்து தொழிலாளரை, நாளொன்றுக்கு நான்கு முறை வீதமாக, ஓர் ஆண்டுக்கு மேலாகத் தம் ஆராய்ச்சிக்கு டாக்டர் ஹெர்சே பயன்படுத்திக் கொண்டார். அவர்களுடைய உடல் நிலை, உள்ளத்து உணர்ச்சி நிலை, சுற்றுப்புற நிகழ்ச்சிகளைப் பற்றிய அவர்களது எதிர் நிகழ்ச்சி— இவற்றை ஆராய்ந்து, பல பட்டியல்கள் தயாரித்தார்.

ஒரே மனிதனைப் பற்றித் தயாரிக்கப்பட்ட பல பட்டியல்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்ததைக் கண்டு அவர் மிக்க வியப்படைந்தார். ஒவ்வொரு மனிதனுடைய உணர்ச்சி நிலையிலும் ஒரு வகையான ஒழுங்கு இருப்பதைக் கண்டார். ஓர் உணர்ச்சி நிலைக்கும், மற்றோர் உணர்ச்சி நிலைக்கும் இடைப்பட்ட காலம், எல்லா இடங்களிலும், கிட்டத் தட்டச் சமமாகவே அமைந்திருந்தது. ஓர் உணர்ச்சி நிலையிலிருந்து மற்றோர் உணர்ச்சி நிலைக்கு வரும்போது, எங்கும் ஓர் ஒழுங்கு இருப்பது தெரிய வந்தது.

ஒரு தொழிலாளி, விபத்துக்குள்ளாகித் தன் கையை இழந்தான். மன எழுச்சிக்குரிய காலத்தில் கையை இழந்த அவன் மருத்துவச் சாலையில் மகிழ்ச்சியுடன்தான் இருந்தான். "இதனால் என்ன, ஒருவேளை இது காரணமாகவே உயர்ந்த உத்தியோகம் கிடைக்கலாம்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். அவன் நினைத்தபடியே நடந்தது. தொழிற்சாலைக்கு அவன் திரும்பியபோது, ஒரு சிறிய பகுதியின் கண்காணியாக அவனை நியமித்தார்கள். ஆனால், அதற்குள்ளாக உணர்ச்சிச் சக்கரம் சுழன்று, தளர்ச்சி நிலை வந்து விட்டது. அவன் உள்ளம் உற்சாகம் அடைவதற்கு மாறாகத் தளர்ச்சியடைந்தது. பலன்? அவனை உண்மையாகக் காதலித்த அழகிய நங்கையின் தொடர்பை அவன் இழந்தான்.

தான் எப்போதும் சந்தோஷமாகவே இருப்பதாகவும், எழுச்சிக்கோ தளர்ச்சிக்கோ ஒரு போதும் ஆளாவதில்லை என்றும், வயதான ஒரு தொழிலாளி கூறினான். ஆனால், ஒவ்வோர் ஐந்தாவது வாரத்திலும், தன்னுடைய மேலதிகாரிகளைப் பற்றி அவன் அதிகமாகக் குறை கூறத் தொடங்கினான் என்றும், தன் தோழர்களிடம் வேடிக்கைப் பேச்சுப் பேச விரும்புவதில்லை என்றும் ஹெர்சேயின் பட்டியல் விளக்கியது.

வெளியில் நடக்கும் நிகழ்ச்சிகளே மன நிலைக்குக் காரணம் என்று எல்லோரும் எண்ணுகிறார்கள். தங்களுக்குள்ளேயே உணர்ச்சி நிலை மாறுகிறது என்பதை அனேகமாக எவரும் ஏற்றுக் கொள்வதில்லை.

உணர்ச்சி நிலையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன என்பதைக் கண்ட ஹெர்சே, அவ்வகை நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டுமென எண்ணித் தம்முடைய உணர்ச்சி நிலைகளையே

ஆராயத் தொடங்கினர். உணர்ச்சியின் ஏற்றத் தாழ்வுகளை எவ்வாறு நல்ல வழியில் பயன் படுத்தலாம் என்று தெரிந்துகொள்வதே அவருடைய ஆராய்ச்சியின் நோக்கம்.

அவருடைய மன எழுச்சி தாழ்ந்திருந்த காலத்தில், அதாவது, தளர் நிலையில், தம் அறிவு மிகவும் நுணுக்கமாகப் பகுத்தறியும் திறமை பெற்றிருந்ததையும், எளிதாகக் கோப மடைந்ததையும் டாக்டர் ஹெர்சே கண்டார். தளர் நிலைப் பருவத்தில், பிறர் தம்முடன் பேசித் தொந்தரவு செய்வதை அவர் மனம் விரும்பவில்லை. இத்தகைய உணர்ச்சித் தளர் நிலைப் பருவத்தை ஆராய்ச்சிக்குப் பயன் படுத்தலானர். திடமான தன்னம்பிக்கையோடு செய்யவேண்டிய காரியங்களை இப் பருவத்தில் நீக்கினர். வளர் நிலைப் பருவத்தை, அதாவது, மன எழுச்சிக் காலத்தைப் பிறரோடு கலந்து விவாதிக்கவும், சொற்பொழிவுகள் ஆற்றவும் செலவழித்தார்.

உடற் கூற்றுக்கும் உணர்ச்சி நிலையின் சுழற்சிக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று அவர் காண விரும்பினர். அதன் பிறகு, தம்முடைய உடம்பின் நிலையையே ஆராயலானர். டாக்டர் மைக்கேல் பென்னட் என்ற பிலடெல்பிய மருத்துவரிடம் வாரந்தோறும் சென்று, தம்முடைய உடற் கூறுகளைத் துருவி ஆராய்ந்தார்.

ஒரு வருஷ காலம் இந்த ஆராய்ச்சி நடைபெற்றது. தைராய்ட் கிளாண்ட் (குரல் வளைப் பக்கத்தில் அமைந்திருக்கும் ஒரு வட்ட வடிவமான பகுதி; ஒருவகை நீரைச் சுரக்கும் தொழிலுடையது) சுவாசப்பை முதலிய பல உறுப்புக்களின் இயக்கம் வாரத்துக்கு வாரம் வேறுபடுவதைக் கண்டார். மற்றவற்றைவிடத் தைராய்ட் கிளாண்டின் இயக்கத்துக்கும், உணர்ச்சி நிலையின் சுழற்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்தது. தைராய்ட் கிளாண்டின் இயக்கம் உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு வருவதற்கு நான்கு அல்லது ஐந்து வாரங்கள் ஆயின. டாக்டர் ஹெர்சேயும் டாக்டர் பென்னட்டும் சேர்ந்து செய்த ஆராய்ச்சியின் முடிவில், உணர்ச்சிச் சக்கரத்தின் கால அளவு பொதுவாக முப்பத்து மூன்றிலிருந்து முப்பத்தாறு நாட்கள் வரை அமைகிறது என்று கண்டார்கள்.

உடலிலே உண்டாகின்ற சக்தியின் சேகரிப்பையும் செலவையும் பொறுத்ததே மனநிலையின் எழுச்சியும் தளர்ச்சியும் உண்டாகின்றன. எவ்வாறு உடற் சக்திக்கும் உணர்ச்சி நிலைக்கும் சம்பந்தம் இருக்கிறது? உடலிலே சக்தி சேர்ந்து கொண்டே வருவது முதல் நிலை. சக்தி சேரச் சேர, நம் உள்ளமும் உற்சாகம் அடைகிறது. உற்சாகமிகுதியிலே நாம் எழுச்சியுடன் தொழிலாற்றுகிறோம். எழுச்சி இன்னும் விரைவாக இயங்கத் தொடங்குகிறது; ஆனால், சக்தியின் உற்பத்தி வேகம்அதற்கேற்றாற் போல அதிகப்பட வில்லை. எனவே, உற்பத்தியாகும் சக்தியை விட உபயோகப்படும் சக்தி அதிகமாகிறது. கடைசியில், சேகரித்து வைத்த சக்தி யெல்லாம் செலவாகத் தொடங்குகிறது. இந்த நிலையில்தான் தளர் நிலைப் பருவம் ஆரம்பமாகிறது.

மன எழுச்சியின் உச்சத்திலே நாம் இருக்கிறபோது நம்முடைய

உடற் சக்தி குறைய ஆரம்பிக்கிறது. அவ்வாறே, மனத் தளர்ச்சியின் கடைசி எல்லையிலே நாம் இருக்கிறபோது, நம்முடைய உடற் சக்தியின் உற்பத்தி தொடங்குகிறது. மீண்டும் உணர்ச்சி நிலைச் சக்கரம் சுழலுகிறது.

மேலும் மேலும் பலருடைய மன நிலையையும், உடல் நிலையையும் ஆராய்ந்ததன் பலனுக, இரண்டு டாக்டர்களும் பின் காணும் முடிவுக்கு வந்தனர்: உணர்ச்சிச் சக்கரத்தின் கால அளவு (33 நாள்) சிற்சில சமயங்களில் அதிகமாகவோ, குறைவாகவோ ஆவதற்கு தைராய்ட் கிளாண்ட் உற்பத்தி செய்யும் சக்தியின் ஏற்றத் தாழ்வுகளே காரணமாகும். உணர்ச்சி நிலையின் கால அளவிலே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. என்ருலும், பெண்களின் மாதவிடாய்க் காலச் சக்கரத்தின் சுழற்சி, உணர்ச்சி நிலைச் சக்கரத்தின் சுழற்சியைப் பாதிக்கிறது. மாதவிடாயின் காரணமாக ஏற்படுகிற தளர் நிலைப் பருவமும், உணர்ச்சி நிலையில் இயல்பாக ஏற்படும் தளர்நிலைப் பருவமும் ஒன்றுசேர நேர்ந்துவிட்டால், மிக மோசமான நிலைமை உண்டாகிறது. இத்தகைய நிலையிலே தான் பல தம்பதிகளின் மன (மண) முறிவு ஏற்பட்டிருக்கிறது என்று ஹெர்சேயும் பென்னட்டும் கருதுகிருர்கள்.

இந்த ஆராய்ச்சியால் ஏதாவது பயனுண்டா, என்று கேட்கவே இடமில்லை. மற்றவர் உங்கள் தளர் நிலைப் பருவத்தில் உங்களைக் குறைகூறினுல், வீணில் தளர்ச்சியடைய வேண்டியதில்லை; மனம் எழுச்சியுறும் வளர் நிலைப் பருவத்தில் அந்தக் குறைகளெல்லாம் மறைந்து, தன்னம்பிக்கை உண்டாகும். ஒரு தேதிப் படத்தில், உங்கள் மனத் தளர்ச்சிக் காலத்தைக் குறித்து வையுங்கள். பின்னர், மீண்டும் அந்நிலை எப்போது வருகிறது என்பதையும் கவனியுங்கள்... இவ்வாருக, உங்கள் உணர்ச்சிச் சக்கரத்தின் சுழற்சியைத் தெரிந்து கொண்டபின், எப்போது எப்போது எந்தெந்த நிலை வரும் என்பது உங்களுக்கு முன்கூட்டியே தெரியும். அவ்வாறு தெரிந்து கொள்வதன் பலன் என்ன?

வளர்நிலைப் பருவத்துக்கெனக் கஷ்டமான காரியங்களையும், ஆக்க வேலைகளையும் ஒதுக்கி வையுங்கள். கூர்ந்து கவனித்து ஆராயும் வேலைகள் தளர் நிலைப் பருவத்துக்கு ஏற்றன அல்ல. மனத் தளர்ச்சி எளிதாக வரும் தளர் நிலைப் பருவத்தில் தவறுகள் செய்வது சாதாரண நிகழ்ச்சி. எனவே, சிரம மில்லாத எளிய வேலைகளை அந்தப் பருவத்தில் செய்ய வேண்டும். தளர் நிலைப் பருவத்தில் நிகழும் சிறுசிறு சங்கடங்கூடப் பெரிதாகத் தோன்றிப் பேரிடைஞ்சல்களை உண்டாக்கும்; இத்தகைய ஆபத்தினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தளர் நிலைப் பருவத்தில் ஏற்படும் பொருட்படுத்தத் தகாத சிறு சிறு இடைஞ்சல்களைப் பெரிதாக மதித்து, வீண் தொந்தரவுக்கு ஆளாக வேண்டாம் என்பது டாக்டர் ஹெர்சேயின் எச்சரிக்கை.

பாதுகாப்புக்கு

Godrej கோத்ரெஜ்

கோத்ரெஜ் பாதுகாப்புப் பொருள்களை வாங்கி, உங்கள் விலையுயர்ந்த சாதனங்களை பத்திரமாக வைத்திருங்கள். இதர தயாரிப்புகளில் கிடைக்காத விசேஷ பாதுகாப்பம்சங்களை, கோத்ரெஜ் இணைப்பற்ற பேழைகள், பணப் பெட்டிகள், கஜானாப் பெட்டிகள், காபினட்டுகள், அலமாரிகள், பூட்டுகள் முதலியவை உங்களுக்கு அளிக்கின்றன. நம்தேசத்தின் ஐசுவரியத்தின் பெரும்பாகத்திற்கு காவலனாக இருக்கும் பெருமை கோத்ரெஜுக்கு உண்டு. விரிந்த நம் நாடெங்கும் சர்க்கார்களும், பாங்கிகளும், வர்த்தக ஸ்தாபனங்களும், பொது மக்களும் தங்கள் செல்வங்களைப் பாதுகாப்பதற்கு கோத்ரெஜையே நம்பியிருக்கின்றனர்.



கோத்ரெஜ்
16 மூலை வளைவு
இணைப்பற்ற
பேழை

கோத்ரெஜ்
6 பேடன்ட்
காற்றுக் கட்வாத
அலமாரி



கோத்ரெஜ்
பேடன்ட்
பால் - ஸ்லைட்
பைலிங் காபினட்



கோத்ரெஜ்
ஷெல்விங் ராக்
தட்டுகளும் சிறிய
அறைகளும் கூடியது

கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்

பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● டெல்லி ● கான்பூர்
ஹைதராபாத் (டெக்கான்) ● நாடு முழுதும் ஏஜன்ஸிகள்

இந்தியாவின் இயந்திர சகாப்தத்தின் ஆரம்பகர்த்தாக்கள்

உங்கள் சரும ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாக்க, தாவர எண்ணைகளால் செய்யப்பட்ட கோத்ரெஜ் ஸ்நான சோப்புகளையே உபயோகியுங்கள்.

Godrej

N.A.S.

153/5

சோல் டிப்போ :— 158-B, பிராட்வே, ஜி.டி., மதராஸ்

அச்சுப் பேய்

நாரா

“ சக்தி ”யில், சமீப காமலாக,
மாதா மாதம் வதாதுவ ஒரு
பேயைப்பற் றியவிஷம் வெளிந்
துவ கொண் டே யி ருக்கிறது
என்று ஒரு நன்பர் வேடிக்கை
யாகக் குறிப்ட்டார். “உயிர்
வந்த பேய்”, “:யேய் உலக சிறு
ஷடி” இந்த மாதிறி,

அதற்காக, எழுத வேண்டிய
தைஎழுதாமலிருகக் முழிகிறதா,
வன்ள ? எழுதுகிறவர்கல், அச்
சடிககிழுவர்கள் இறுவருக்கும்
அச்சுப்பிழை பரம விரோதி. சில
சமணம் அக்சும் பிரை இவர்
களுக்ச் சமப சஞ்சீவியாக தவிக்
கு வந்து விடுவதும் உண்டு. புஸ்
தழத்தில், பத்திரிகைபில் வத்ாவது
தப்பிக இருந்து விடாட்ல், “ ஓ,
அது அச்சுப் பிழை. சம்பரசிட்
டார்! விட்டு விட்டாள். புரூப்
திருத்துகாறவன் விட்டு விடான்.
அச்சடிக்கிறவன் விட்டு விட்
டான். எழுதிளவன் விட்டு விட்
டாஸ்!” எள்று யழியை ஒருவர்
மேல் ஒருவர் யோட்டு விட்டுத்
தம்பித்துகொள்ள இந்த் அச்சும்
மேய் லெகு சௌகற்யமான
சரக்காக ஆசிலிடும்.

“ இங்கிலீஷ் புல்தகஸ்களில் அச்
சுப் பிழை இள்லேயே. தமி
ழ்ப் புல்தகஸ்கள், பத்திரிகை
களில் மட்டும் இப்படிக் கண்ணே
உறுத்துப் பிழைகள் மலிய விடு
வது யேன்? என்று வாசக்
நண்பற்பல் கே ட் கி ரு ர் க ல்,
நியாயமான கேழ்வி ஆனல்,

இதிவ எவ்வளவு சிரம்ம் இருக்
கிற?து தெபியுாம

பல்லாங்குழி அடத்க்குப் பல
ணகயில் குழிகுழியா யிருக்குமே,
அந்ற மரதிரி 199 குழி இருக்கும்.
ஒவ்வொரு குழியிலும் க, ங, ச,
ஞ, ட, ண, த, ந, ப, ம—, , , , ...
; ; ; ;⏜ — ....? ? ? ! ! (((
((([[[ ]]] × × × 1 2 3 4 5 6
என்று தனித் தனியாய் எழுத்
துக்கள் குவியல் குவியல் போட்
டிருக்கும். சம்பாகிடர், அச்சுங்
கோக்க வேண்டிய விஷத்தைப்
பாதர்துகொக்ண்டே! கைப் பழக்
கத்தால் அந்த அந்த எழுத்துள்ள
குழியில் கையை இட்டு, ஒவ்
வொரு எழுத்தாக நீளமாய் வாச
கத்தைக் கோப்பாள். இதைப்
புரூப் ரீடர் பார்துத் திருத்த்ம்
செய் யவேண் டியஇ டத்தில்
கு றி போ ட் டு ச் சரியான
எழுத்தை எழுதுவாண். பின்
ஞள், “ காலி ”யிலுள்ள வியஷத்
தைப் பக்க்ம் பக்கமாப்க பிரிப்
கள்பார் அப்புறம் தானே மழிக்
கிற வம்ச பார்த்துப்ப க்ககங்ளே
அடுக்கி அ ச்சடிப்பார்கள். இது
தான் “ பாரம் ” துஎன்கிற. அப்
புறம பாரங்கனே யெல்லாம்
சேர்த்து ஒன்ருய்த் தைப்பர்
கள்ா. அட்டை போடுவார்கள்.
—இதுதான் புத்தக,மும் பத்தி
ரிகை. இனத எல்லாம் மேற்
பார்த்துக் கொல்லுகிறவற், ஒரு
கம்பளிடைரக் டர்மா திரி வெகு
வி ழி ப் வே வ ண் பா யி ரு க் க டு ம்.
இல்லா விட்டால்—அடேடே!
இதிலே கூடம்பிழைரொம்ம வங்
து வி ட் டா ற் போலிருக்கே—
இந்தா! யார் அங்கே! போர்
மேன் கன்னியப்பனேக் கூப்பிடு
இத்தனே பிழையா...!!

அச்சு வேலே நச்சு வேலே. அதன் சிரமம்
தெரியாமல் படுவேகத்தில் எழுதித் தள்ளி,
படுவேகத்தில் அச்சுக் கோத்து, பிழை
திருத்தாமலும் விட்டுவிட்டால், என்ன
ஆகும்? கேட்பானேன்!

கடவுளைக் கண்டேன்

சுவாமி விவேகானந்தர்

சுவாமி: தக்ஷிணேசுவரத்தில், கோவில் நந்தவனத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நாள் என்னுடைய ஹிருதயத்தைத் தொட்டார். உடனே மனைகளும், கதவுகளும், பலகணிகளும், மடங்களும், மரங்களும், சூரிய சந்திரரும் துகளாகப் போய், அணு அணுவாகப் பிரிந்து போவதையும், அவை எல்லாம் ஆகாசத்தில் ஈற்றில் அமிழ்ந்து விடுவதையும் கண்டேன். அதன்பின், ஆகாசமும் மறைந்து விட்டது. அதனோடு, நான் என்னும் எண்ணமும் மறைந்து விட்டது. அப்புறம் என்ன நடந்ததென்று எனக்கு நினைவில்லை. முதலில் நான் அச்ச முற்றேன். அந்த நிலையிலிருந்து நான் மீண்டவுடன், மனை, கதவம், பலகணி, மாடம் முதலிய பொருள்களெல்லாம் ஒவ்வொன்றாகத் தோன்றத் தொடங்கின. மற்றொரு முறை, அமெரிக்காவில், ஒரு தடாகக் கரையிலே, இவ்வகை அனுபவம் பின்னும் ஒரு முறை நிகழ்ந்தது.

சிஷ்யர்: மூளையின் நரம்புகள் கலக்கமுற்றிருப்பதனால் இத்தகைய நிலைவந்தெய்த மாட்டாதா? மேலும், இந்த நிலையை அடைவதால் எய்தக் கூடிய ஆனந்தம் எது என்று எனக்கு விளங்கவில்லையே.

மகா புருஷர் சுவாமிஜி கடவுளைப் பற்றிக் கூறும் உண்மை, சமய, தர்க்க, விஞ்ஞான முடிவுகளுடன் வியக்கத் தகுந்தபடி பொருந்துகிறது. விவேகானந்தர் சம்பாஷணைகள் என்ற அறிவுப் பொக்கிஷத்தில் தென்படும் ஓர் அரிய ரத்தினம் இந்தப் பகுதி.

சுவாமி: மூளையின் கலக்கமா? இது, நோயிலிருந்து எழுகின்ற பிதற்றல் நிலை அல்ல; குடி வெறியினால் எய்திய மாறுபட்ட நிலையும் அல்ல; பல்வேறு வகையான சுவாச அப்பியாசங்களால் வருகிற மயக்கத் தோற்றமும் அல்ல. சுகமும், அறிவும் பூரணமாக நிறையப் பெற்றிருக்கிற மனிதனாலே அந்த நிலை அடையப் பெறுகிறது.

என்னை மூளை பிசகிய மனிதன் என்று எண்ணுகிறாயோ?

சிஷ்: இல்லை, இல்லை. நான் அவ்வண்ணம் கருதவில்லை. சாஸ்திரங்களிலே அத்துவித அனுபவத்தைப் பற்றிய உதாரணங்கள் நூற்றுக் கணக்காக இருக்கின்றன. அது மாத்திர மன்றித் தேவரீருடைய சொந்த அனுபவமும் சுருதி மொழியோடும் சாஸ்திரங்களோடும் ஒத்திருக்கிறது. அப்படியிருக்க, அது பொய் என்று நான் எப்படித் துணிந்து கூற முடியும்? ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளும் அந்த நிலையை அனுபவத்தில் அடைந்து, 'பிரபஞ்சம் எங்கோ மறைந்து விட்டதே!' என்று கூறியிருக்கிறாரே.

சுவாமி: இந்தப் பேரானந்தத்தை ஒரு முறையாவது உணர்ந்தவர், இவ்வுலகத்தின் இன்ப துன்பங்களினாலே ஒரு பொழுதும் அல்லலுறுவதில்லை. கீழான பெண்ணாசை, பொன்னாசைகளிலே பந்தமுற்ற மனிதர்கள் இந்தப் பிரம்மானந்தத்தை அனுபவிக்க மாட்டார்கள்.

கடவுள் சுத்தப் பொய்

ராபர்ட் ஜி. இங்கர்சால்

பணிவு, ஆடக்கம், தன் மறுப்பு, தயாளம், எதிர்க்காமலிருத்தல் ஆகிய அடிமைக் குணங்களை மதம் கற்பிக்கிறது. தன்னம்பிக்கை, சுயேச்சை, ஆண்மை தைரியம், தற்காப்பு ஆகியவைகளை மதம் கற்பிக்கவில்லை. கடவுளை ஆண்டானாகவும், மனிதனை அவருடைய அடிமையாகவும் மதம் ஆக்குகிறது.

1. ஜடப் பொருளை—வஸ்துவை—அழிக்க முடியாது; அதை நிர்மூலமாக்கி விட முடியாது. 2. சக்தியை அழிக்க முடியாது; அதை நிர்மூலமாக்கிவிட முடியாது. 3. பொருளும் ஆற்றலும் தனித்தனியாகப் பிரித்து இருக்க முடியாது. ஆற்றல் இன்றிப் பொருள் இல்லை. பொருள் இன்றி ஆற்றல் இல்லை. 4. அழிக்க முடியாததை ஆக்கியிருக்கமுடியாது. அழிக்க முடியாமலிருப்பதை இனி ஆக்கவும் முடியாது. இந்த நாலு விஷயங்களும் உண்மையானால், ஜடமும் சக்தியும் அனாதி காலமாகவே இருந்து வந்திருக்கின்றன. அனாதி காலமாக அவை இருந்துவரவேசெய்யும் என்றும், இவைகளைக் கூட்டவோ, குறைக்கவோ, முடியாது என்றும் கட்டாயம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பொருளும் ஆற்றலும் எண்ணற்ற காலமாக இருந்து வந்து, எண்ணற்ற காலத்துக்கு இருந்து வருமானால், கடவுள் என்று ஒருவர் இல்லை; பிரபஞ்சத்தைக் கடவுள் சிருஷ்டிக்கவில்லை, அதை அவர் ஆளவுமில்லை; பிரார்த்தனைக்குச் செவி சாய்த்துப் பதிலளிக்கிற கடவுள் இல்லை; தாழ்த்தப் பட்டவர்களை ஆதரிக்கிற கடவுள் இல்லை; அபலைகளின் துயரத்தைக் கண்டு இரங்குகிற கடவுள் இல்லை; உடம்பு தழும்பேற உழைக்கிற அடிமையையும், குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்மார்களையும் பற்றிக் கவலையெடுத்துக் கொள்ளுகிற கடவுள் இல்லை; சித்திரவதைக்குள்ளானவர்களைக் காப்பாற்றுகிற கடவுள் இல்லை; தியாகிகளைத் தீக்கிரையாகாமல் காக்கும் கடவுள் இல்லை—என்பவைகளை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும். அதாவது, தேவ லோகத்திலிருந்து மனிதனுக்கு எந்த விதமான உதவியும், எப்போதும் கிடைத்ததில்லை என்றாகிறது. செய்த தியாகம் அனைத்தும் வீண்; பிரார்த்தனைகள் அனைத்தும் கேட்பாரற்றுக் காற்று வக்கில் போய்விட்டன-.

எனக்குத் தெரியுமென்று நான் பாவனை பண்ண வில்லை. நான் நினைப்பதையே சொல்லுகிறேன்.

மனசு கலங்கி. வழி தெரியாமல் திண்டாடுகிற போது, தெய்வத்தினிடம் சரணடைகிறோம். உலகத்தில் அக்கிரமங்கள் நடந்து கொண்டே வருவதைக் கண்டு நாம் மனம் கொதித்து நாஸ்திகர்களாய் மாறுகிறோம். சமயத்தின் பேரால் மனிதனை மனிதன் வாட்டி வதக்குகிறான். மக்கள் விழிப்படையத் தம்முடைய வாணாள் பூராவையும் அர்ப்பணம் செய்த பகுத்தறிவுப் பெரியார்களில் கர்னல் ராபர்ட்ஜி. இங்கர்ஸால் தலையாயவர் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் என்ற இவரது இலக்கிய, பகுத்தறிவு ஆராய்ச்சி நூலின் ஒரு பொறி இது.

காதல் விவகாரம்

ரிச்சர்ட் ஹாப்ளர்

ஓர் ஆணும் பெண்ணும், அண்ணனும் தங்கையும் போல் பழகி, ஆத்மிக உறவு பூண்டு, இன்பங் காண முடியும், உடலின்பம் அவசியமல்ல, என்று கிரேக்கத் தத்துவ ஞானி பிளேட்டோ போதித்தார். "பிளேட்டோனியக் காதல்" முறை சாமான்ய மக்களுக்குச் சரிப்பட்டுவரக் கூடியதா, என்ன? காதல் உணர்ச்சிக்குப் பல முறை ஆட்பட்டு ஏமாந்துவிட்ட பெண் ஒருத்திக்குக் கடைசியில் ஒத்த பண்புடைய காதலன ஒருவன் வாய்க்கிறான். இருவரும் சுகப்படுவார்கள் என்றுதான் நாம் எதிர்பார்ப்போம். நடப்பது என்ன? ஆர்கஸிப் பத்திரிகையில் வெளியான இந்தக் கதை "விவகார"த்தை அம்பலப்படுத்துகிறது.

அன்றைக்கு என்று, காலையில் இருந்து வானம் ஒரே யடியாக இருண்டு கிடந்தது. மழைத் தாரை (சோக நாடகத்தில் வரும் ஒரு நடிகனைப் போல,) தெருக்களில் வழிந்தோடிச் சாக்கடைகளில் சலசலத்துக்கொண் டிருந்தது.

கடற் படைக் காரியாலயத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது தான் நண்பன் லுபவ்ஸ்கி உள்ளே நுழைந்தான். கையோடு அறைக் கதவைச் சாத்தி விட்டு, எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான். லுபவ்ஸ்கி, கடற் படையில் ஒரு லெப்டினெண்டு. அவனை வரவேற்கத் தலை நிமிர்ந்த நான், அவன் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு திடுக்கிட்டேன்.

அட்டுழியங்களை விளக்கும் பிரசாரப் படத்தில் தோன்றும் ஓர் உருவத்தைப் போல அவன் காட்சி யளித்தான். பட்டினியால் களைத்து, பார்க்கப் பரிதாபகரமாய் இருந்தது அவன் முகம். க்ஷவரம் செய்து கொள்ளாததால், தலையிலும் முகத்திலும் மயிர் வளர்ந்து போய், கரடி போலத் தோன்றினான்.

என் திகைப்பை அறிந்து கொண்ட அவன், "எப்போதும் நான் 196 ராத்தல் நிறை இருப்பது வழக்கம். ஆனால், இங்கே நகரத்தில் மூன்று மாதம் வசித்த தன் பயனாக, உடல் நிறையில் இருபத்து எட்டு ராத்தலை இழந்து விட்டேன்" என்றான்.

சினிமாவுக்குக் கதை எழுதுவது தான் அவன் தொழில். சமீபத்தில், சாகாமல் வாழக் கற்பிக்கும் படமொன்றைக் கடற்படையினர் பிடித்தார்கள். அதில், இரண்டு வாரம் அன்ன ஆகாரமின்றி, நடுக் கடலில் தத்தளிக்கும் கடற் படை விமானியின் பாகம் தாங்கி அவன் நடிக்க நேர்ந்தது.

அவன் தலையை வாரிவிட்டிருந்த விதமே அலாதியாயிருந்தது. பிளவுபட்ட தாடையும், குழி விழுந்து கிடந்த கன்னங்களும், விந்தையான போக்குகளும் எல்லாம் சேர்ந்து அவனுக்கு ஒரு தனித் தோற்றத்தை அளித்தன. தன் தந்தையைப் பின்பற்றி வாழ்க்கை நடத்த அவன் எண்ணவில்லை. அவர் ஒரு சைத்திரிகர். ஆனால், தம்முடைய படங்களை அவர் யாருக்கும் விற்கமாட்டார். சினிமாவுக்கு மாத்திரம்

தினமும் காலை ஒன்பது மணிக்குப்போகத் தவறமாட்டார். சில சமயங்களில், அவர் காலை ஏழரைக்கே எழுந்து விடுவார். வாயிற் படியில் வந்து நின்றுகொண்டு, அந்த ஊரிலுள்ள மக்கள், வயிற்றுப் பிழைப்பை முன்னிட்டு, ரயிலைப் பிடிக்க ஓடுவதை வேடிக்கை பார்ப்பார். அதன் பிறகு, மீண்டும் படுக்கப் போய் விடுவார். இதை, நண்பனே ஒரு முறை என்னிடம் கூறியிருக்குறான். ஒரு சமயம் அவருடைய மோட்டார்லைசென்ஸ் தகட்டின் வர்ணத்தைப்பார்க்க அவருக்குப் பிடிக்க வில்லை. அதற்காக அந்த தகட்டின் மீது தமக்குப்பிடித்தமான வேறு வர்ணத்தைப் பூசி விட்டார். சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்து வகிக்க வேண்டுமென்ற தன் தந்தையின் கொள்கையை அவன் ஏற்க வில்லை. மத்திய தர வகுப்பாரைப் போலவே வெற்றிகரமாக வாழ அவன் ஆசைப்பட்டான். பணத்தை மீதம் பிடிக்கிறான். செட்டுத் தனமாகச் செலவு செய்பவன் என்றும் பெயர் வாங்கி விட்டான். ஒரு பெண்ணை மணந்து, குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டுமென்றுவிரும்புகிறான். கொஞ்ச நாட்களாக, ஒருதனிவீட்டையே வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறான்

"நேற்றிரவு ஓர் அழகிய பெண்ணைச் சந்தித்தேன்" என்று ஆரம்பித்த அவன்—

"அவளுக்கு சுமார் முப்பத்து நாலு வயது இருக்கும். ஆனால், பார்ப்பதற்கு இருபத்து ஆறு வயது மங்கையாகவே காட்சி அளிக்கிறாள்," என்று சொல்லி முடித்தான்.

நண்பனுக்கோ சுமார் முப்பத்தைந்து வயதுதான் இருக்கும்.

"எங்களிருவருக்கும் ஒத்துப் போகுமானால், மணந்துகொண்டு விடலாம் என்று பார்க்கிறேன்," என்று மேலும் கூறினான்.

விஷயத்தை விவரமாகச் சொல்லுமாறு அவனை நான் வற்புறுத்தினேன்.

முந்திய இரவு அவளைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துப் போனதாகவும், ஒரு புட்டி மதுவைக் காலிசெய்த பிறகு, மெல்லத் தன் காதலை அவளிடம் வெளியிட்டதாகவும், அவள் அதை அவ்வளவாக ரசிக்கவில்லை என்றும் விளக்கிச் சொன்னான்.

"காரியத்தைத் தடதட வென்று உடனே முடித்து விடுவதை அவள் விரும்ப வில்லை. உடலின்பத்தைத் தவிர வேறு ஏதாவது இருவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று அவள் கருதுகிறாள்" என்றான்.

மறுநாள் காலை என்னுடைய அறையுள் நுழைந்து, என் மேஜை அருகே விரைந்து வந்தான். காற்றடித்த பலூனைப் போல் அவன் முகம் மலர்ந்திருந்தது. வந்ததும் வராததுமாய், "களிமண் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டான்.

எனக்குத் தெரியாது என்று சொல்லி, எதற்காகக் களிமண்ணைத் தேடுகிறான் என்று கேட்டேன்.

"கையோடு வேண்டும்" என்றான். மீண்டும் காரணத்தை வினவவே, விஷயத்தை அவன் விளக்கிக் கூறினான்.

முந்தின இரவு அவளைச் சந்தித்திருக்கிறான். அவளும், முன் போல், அவ்வளவாக அவன்

முயற்சிக்கு முட்டுக்கட்டை போடவில்லை என்று தெரிகிறது. மனதிற்குகந்த பொழுதுபோக்கு ஒன்றில் இருவரும் சேர்ந்து ஈடுபட்டால், தன் மனமும் இணங்கி வரக்கூடும் என்று அவள் சொல்லியிருக்கிருள்.

“இருவரும் சேர்ந்து, மாதிரிச் சிலைகள், உருவங்கள் போன்றவைகளைச் செய்யக் கூடுமானல், அதன் மூலம் இருவரிடையேயும் ஓர் ஒற்றுமை—பொதுவான பந்தம்—ஏற்படலாம்” என்று சொன்னளாம். அதற்குத்தான் அவன் களிமண் தேடுவது.

எனக்கு அதைப்பற்றின விஷயமே தெரியாது என்று நான் மீண்டும் சொல்லவே, அதைப் பற்றித் தெரிந்த யாரிடமாவது கேட்டுக் கொள்வதாகக் கூறி, அவன் போய் விட்டான். அன்று பிற்பகல், மலர்ந்த முகத்தோடும் கையில் ஒரு பொட்டணத்தோடும் அவன் வந்தான்.

மறுநாள் காலை, எதையோ பறிகொடுத்து விட்டவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு, அவன் வந்து சேர்ந்தான். உயிரற்ற பிணம் போல் இருந்தது அவன் தோற்றம்.

“காய்ந்து கட்டியாகிவிடாதபடி களிமண்ணை எத்தனை நாள் வைத்திருக்க முடியும்?” என்று கேட்டான். ஏதோ மோசமான காரியம் நிகழப்போகிற தென்று சந்தேகித்தேன்.

“ஓர் ஈரத் துணியைப் போட்டு மூடி வைத்தால், எவ்வளவு நாள் வேண்டுமானலும் காயாது” என்று சொல்லி வைத்தேன்.

அவன் எதற்காகக் கேட்கிருன்? “நேற்றி வீருந்து இரண்டு வாரங்களுக்கு அவளுக்கு ராத்திரி வேலை” என்று துக்கத்தோடு சொன்ன பிறகுதான் எனக்கு விஷயம் விளங்கியது.

அடுத்த பதினைந்து நாட்களுக்குள் லுபவ்ஸ்கி எத்தனையோ புதுப்புதுச் சுந்தரிகளை யெல்லாம் சந்தித்தான். ஆனலும், அவன் முதலில் சந்தித்த பெண்ணிடம் அளவளாவியதால் ஏற்பட்ட அளவு சந்தோஷம் இவர்களிடம் உண்டாகவில்லை. வாஷிங்டன் நகரத்துக் கேளிக்கைகளில் பல பெண்களைச் சிரமமின்றிச் சந்தித்து, அவர்களுடன் பழகினன். சிற்பக் கலையில் பயிற்சி பெற்ற ஒரு பெண் இருந்தாள். அவள் விமானப் போக்குவரத்து அதிகாரி ஒருவருடைய மகள். ராணுவத்தைச் சேர்ந்த இரண்டு செவிலிப் பெண்களோடும் கொஞ்ச நாள் பழகினன். இப்படிப் பல பெண்களோடு பழகி, ஒருவரையும் பிடிக்காமல், எல்லோரையும் கைவிட்டிருக்கிருன்.

பிரசாரம்

பிரசாரம் செய்கிற முறைகளை மாற்றிக்கொள்ளும் போது, பிரசாரம்செய்து என்ன பலனை அடைய நினைக்கிருேமோ, அந்தப் பலனுடைய அடிப்படை மாறிப் போகும்படி விட்டுவிடக் கூடாது. பிரசாரம் என்ன நோக்கத்தோடு தொடங்கியதோ, அதே நோக்கம் கடைசி வரையிலும் இருந்தாக வேண்டும். பிரசாரத்தில் ஒலிக்கும் கோஷத்தைப் பற்பல கோணங்களில் வைத்துச் சிறப்பித்துக் காட்டலாம். ஆனல், அதற்காகக் கையாளும் எந்த உபாயமும் அதே கோஷத்தையே முடிவில் ஒலிக்க வேண்டும். வேறு எந்த வழியாலும் பிரசாரமானது திடமாகவும், பொருத்தமாகவும் செயலாற்ற முடியவே முடியாது.

அடால்ஃப் ஹிட்லர்— (மெயின்காம்ப்)

உணவு விடுதியில் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு மாது கீழே குடியிருந்தாள். அவளும் அவன் மீது வலை வீச முயன்முள். வேறு ஒரு விடுதியில் உள்ள நாடகக் கோஷ்டியைச் சேர்ந்த இன்னெருத்தியும் ஆனமட்டும் பார்த்தாள். இருவர் ஜம்பமும் அவனிடம் சாயவில்லை.

பூர்த்தியாகாத, மனதை லயிக்கச் செய்கிற, கடந்த கால நிகழ்ச்சிகள் அவன் உள்ளத்தை ஒரேயடியாகக் கவர்ந்தன.

அவனிடம் நான் சரியாக அநுதாபம் கொள்ளவில்லை என்று லுபவ்ஸ்கி எண்ணினன் போலிருக்கிறது.

கல்வி சம்பந்தமாய்ப் படம் எடுக்கிற தனி இலாக்காவைச் சேர்ந்த வேருெரு லெப்டினெண்டிடம் தன் காதல் லீலைகளைப் பற்றி அவன் சொல்லியிருக்கிருன். அந்த மனிதர் உடனே எல்லாவற்றையும் என்னிடம் அப்படியே சொல்லி விட்டார்.

லுபவ்ஸ்கி, தன் காதலியைத் தன்னுடைய இருப்பிடத்திற்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிருன். களிமண்ணும் காயாமல் இருந்தது. ஒரு புட்டி மதுவை அருந்திய வண்ணம் இருவரும் மும்முரமாக உருவங்களைச் செய்ய ஆரம்பித்தனர். அவள், புராதன உடையலங்காரங்களோடு விளங்கும் ஒரு மனித உருவத்தைச் செய்தாள். அவன், தன்னுடைய உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, வட துருவக் கரடி ஒன்றைச் செய்தான். தான் செய்த உருவம் தான் நன்ருயிருந்தது என்று அந்த லெப்டினெண்டிடம் அவன் கூறினனும்.

சுமார் ஒரு மணி நேரம் இருவருக்குமிடையே மனப் பூர்வமான ஒற்றுமையை நிலவச் செய்த முயற்சிகள் காரியத்தை முடிக்க உதவாமல் வீணுயின, கடைசியாக, லுபவ்ஸ்கிக்கு ஓர் அருமையான எண்ணம் உதித்தது.

"நான் ஒரு மனித உருவத்தைச் செய்யப் போகிறேன். ஒரு பெண்ணின் நிர்வாண உருவத்தைச் செய்யலாமா என்று யோசிக்கிறேன். அதற்கு நீதான் சிலை மாதிரி என் முன் நிற்க வேண்டும். என்ன சொல்லுகிருய்?" என்று அவளிடம் கேட்டிருக்கிருன்.

இதற்கு அவள் இணங்க மறுத்து விட்டாள். அவர்களுக்குள் என்ன பேச்சுகள் நடந்தனவோ! யார் கண்டார்! கடைசியில், அவளுடைய ராணுவ உடை சகிதமாக அவளை அப்படியே கட்டிப் பிடித்துத் தழுவி விட்டான். உடனே, அவள் பளார் பளார் என்று இவன் கன்னத்தில் இரண்டு அறை விட்டாள். இருந்த போதிலும், அவள் கோபப்பட்டு உடனே வீட்டிற்குப் போய்விட வில்லை. இருவருக்குமிடையே சன்னஞ்சன்னமாகச் சமரசம் ஏற்பட்டு, பொழுது சாய்வதற்குள்ளாகவே, மீண்டும் ஒரு மாதிரியாய்ச் சமாதானம் உண்டாய் விட்டது.

அந்தச் சம்பவத்தைப் பற்றி நான் லுபவ்ஸ்கியைப் பல முறை கேட்டேன். ஆனல், முன் போல் எல்லாம் இப்போது அவன் தன் அந்தரங்கம் எதையும் என்னிடம் சொல்வதில்லை. ஏதோ, இரண்டொரு விஷயங்களைப் பற்றி மட்டும் அவன் சொன்னன். மூன்று முறை ஆண் பிள்ளைகளால் வஞ்சிக்கப்

பட்டதால், அவளுடைய மனம் கசந்து போய்விட்டதாம். எதிலும் தனக்குச் சந்தோஷம் உண்டாகுமென்று அவள் எதிர்பார்ப்பதற்கில்லையாம். அதனால், அவள் தயங்கினாளாம். ஆனாலும், அவர்களுடைய உறவு வளர்ந்து கொண்டுதான் வந்தது.

நண்பனிடம் கொண்டிருந்த அநுதாபம் காரணமாகவே, கொஞ்சக் காலம் இந்த விஷயத்தைப் பற்றி நான் அவனை எந்த விதக் கேள்வியும் கேட்பதில்லை. சமீபத்தில்தான் அதைப் பற்றி அவனைக் கேட்கத் துணிந்தேன்.

"காதலியா?" என்று வெறிச்சோடிய குரலில் வினவினான். பிறகு "யார்?—அவளா?" என்று விஷயத்தைப் புரிந்து கொண்டவன் போல் பதில் கூறினான். புன்னகை செய்தவாறே, இல்லை யென்ற பாவனையில் தலையை ஆட்டினான்.

"எங்கள் தொடர்பு முறிந்து விட்டது. அது நடந்து வெகு நாளாச்சே!" என்றான்.

"என்ன நடந்தது?" என்று கேட்டேன். தோள்களைக் குலுக்கியவாறே, "கடற்படைக் கட்டுப்பாடுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு முற்றிப் போகவே, பிரிந்து விட்டோம்" என்றான்.

✲

நான் யார்?

எல்லா விதமான தொழிலுக்கும் தளவரிசை நான்தான்.

செழிப்பின் ஊற்றுக் கண் நான்தான்.

மேதையின் தந்தை நான்தான்.

வாழ்வுக்கு மணம் அளிக்கும் சத்து நான்தான்.

செல்வத்திற் கெல்லாம் அஸ்திவாரமா யிருப்பது நான்தான்.

இளைஞர்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் அவர்களுடைய பணக்காரப் பெற்றோர்களை விட நான் அவர்களுக்கு எவ்வளவோ உதவ முடியும்.

என்னை நேசிப்பவர்களுக்கே நான் என்னுடைய மிகச் சிறந்த பரிசில்களை அளிப்பேன்.

என்னை நேசிப்பவர்களின் வாழ்வை நான் இன்பகரமானதாகவும், லட்சியமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் செய்கிறேன்.

பணக்காரனின் பெரிய பெரிய தொழில் மூலதனங்களிலும், பரம ஏழையின் சின்னஞ் சிறு சேமிப்பிலும் எனக்குப் பங்குண்டு.

வளர்ச்சி அனைத்தும் என்னிட மிருந்துதான் தொடங்குகிறது.

நான்தான் உழைப்பு!

பீட்டர் எஸ்ல்மண்ட்—(அபெர்டீன் கதைகள்)

சிறந்த கருத்து

எல்லா எழுத்தாளர்களும் கொள்ளுகிற பலவிதமான அபிப்பிராயங்களுள், அவர்கள் தம்மைப் பற்றிக் கொள்ளுகிற அபிப்பிராயந்தான் மிக்க மேலானது.

—**யுவர் லீஃப்**



ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி: மூன்று வருஷங்களாகத் தலைமறைவாக இருந்து, சமீபத்தில் வாரண்ட் ரத்தாகி, வெளியுலகத்துக்கு வந்துள்ள வீராங்கனை.



பம்பாயிலுள்ள ஹாப்கின் நிலையத்தின் டைரக்டர் லெப்டனெ்ட் கர்னல் சர் சாஹேப் சிங் சோக்கி பெனிசிலின் மருந்தைப் பற்றி வைஸ்ராய் வேவல் பிரபுவுக்கு விளக்குகிருர்.



ஆளைக் கண்டவுடன் பாம்பு படமெடுக்கிறது. வைஸ்ராய் வேவல் அதைக் கவனிக்கிறார்.

பிளேக் நோய்க்கு மருந்து :

பிளேக் நோயைக் குணப்படுத்துவதற்கு உபயோகிக்கிற நிண நீர், பம்பாயிலுள்ள ஹாப்கின் ரசாயன சாலையில் தயாரிக்கப் பெறுகிறது. உஷ்ண தேசமாகிய நம் நாட்டில், நஞ்சு முறிவு மருந்துகளையும், நிண நீர் வகைகளையும் கெடாமல் பாதுகாத்து வைக்கிற முறையை இந்நிலையத்தார் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



தலையையும் வாலையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, சிறிய கண்ணாடிக் குப்பியில் பாம்பு விஷத்தைக் கக்கும்படி செய்கிறார்கள். குப்பியைப் பாம்பிடம் நீட்டிக் கொண்டு டைரக்டர் நிற்கிறார். வைஸ்ராய் கூர்ந்து கவனிக்கிறார்.

விஷ முறிவு மருந்து :

பாம்பின் விஷத்துக்கு முறிவு மருந்தும் இங்கே தயாரிக்கிறார்கள். இதற்குப் பாம்புப் பண்ணை ஒன்று வைத்திருக்கிறார்கள். பாம்பினிடமிருந்து விஷத்தை எடுத்து, அதில் உள்ள நிண நீரையும் விஷத்தையும் பிரித்து, நிண நீரை விஷ முறிவு மருந்தாகத் தயாரிக்கிறார்கள். 9-1-46ல் வேவல் பிரபு நிலையத்தைப் பார்வையிட்டார்.

பிரிட்டிஷ் பார்லமெண்டரி தூதுக் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீமதி நிக்கோல் சென்னையில் ராஜாஜியோடு பேசினார்.



சமீபத்தில் நடந்த நேதாஜி 50-வது ஆண்டு நிறைவு விழாவின் போது பெண்கள் வந்தே மாதர கீதம் பாடிய காட்சி.

இப்படியா?

பார்லமெண்டரி தூதுக் கோஷ்டித் தலைவர் புரபசர் ரிச்சர்ட்ஸ் ஒரு கிராமத்தைப் பார்வையிடுகிருர்.

"நான் அணி கலையும் மாண் எழில் சிதைக்கும்
பசிப்பிணி என்னும் பாவி."

—மணிமேகலை

இப்படியா?



மனிதத் தன்மையை மறக்கச் செய்யும்
பஞ்ச(ப்) பாதகம்.



'' வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்து ... ''
பிறர்தரும் பிச்சைக்கு ஏங்கும் பெண்டிர்.

— மணிமேகலை

(உள் படம்)

அள்ளி விழுங்க அமுதம் கிடைத்ததென்று
அன்னையைத் துறந்த அனாதைக் குழந்தை.

உணவு நெருக்கடி

மகாத்மா காந்தி

ஒவ்வொருவரும் உணவை எவ்வளவு குறைத்துக் கொண்டால் தம்முடைய ஆரோக்கியம் பாதிக்கப் படாதோ, அவ்வளவு குறைத்துக் கொள்ள வேண்டும். பட்டணங்கள் போன்ற இடங்களில் பால், காய்கறி, எண்ணெய், பழங்கள் கிடைக்குமாதலால், அத்தகைய இடங்களில் உள்ளவர்கள் தான்யங்களின் அளவையும் பருப்புத் தினுசுகளின் அளவையும் குறைத்துக் கொள்ள வேண்டும். அப்படிக் குறைத்துக் கொள்வது அவர்களுக்கு எளிதான காரியமே. கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைக்கக் கூடிய பருப்புக்கள், தான்யங்களை முழுவதையும் இப்பொழுதே உண்டு தீர்த்து விடாமல் சேமித்து வைக்க வேண்டியது அவசியமாதலால், தான்யங்களிலுள்ள மாச்சத்தை அந்தச் சத்துள்ள காரட், உருளைக் கிழங்கு. சேனைக் கிழங்கு, வாழைப் பழம் போன்ற உணவுப் பொருள்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தான்யங்களும் பருப்புத் தினுசுகளும் குறைந்து விட்டபடியால், பட்டினியும் பசியும் கோடிக் கணக்கான மக்களை வாட்டப் போவதாகப் பயமுறுத்திக்கொண் டிருக்கின்றன. இந்த நிலைமையிலுள்ள ஏழை மக்களுக்குக் காய் கறிகள் கொஞ்சங் கூடக் கிடைக்காமலிருக்கும் போது, நாம் மட்டும் காய் கறிகளை அளவு. கடந்தோ சுவையை எண்ணியோ புசிப்பது கூடவே கூடாது.

(2) தண்ணீர் வசதியுடைய ஒவ்வொருவரும் வீட்டு உபயோகத்துக் காகிலும் சரி, விலைக்கு விற்பதற்காகிலும் சரி ஏதேனும் சில உணவுப் பொருள்களை உண்டாக்க முயல வேண்டும். அப்படிச் செய்வதற்கு எளிதான வழியானது சுத்தமான மண்ணைச் சேகரித்து, அத்துடன் தழை மக்கிப்போன உரத்தில் கொஞ்சமோ, அது இல்லாவிட்டால், அதற்கொப்பான உவர்ந்த சாணத்தில் கொஞ்சமோ கலந்து, மண் தொட்டியிலோ, தகர டப்பாவிலோ போட்டு, கடுகு போன்ற சில விதைத் தினுசுகளைத் தூவி, தினசரி ஜலம் வார்த்து வருவதே யாகும். அந்த விதைகள் சீக்கிரத்தில் முளைத்துக் கறிக்கான இலைகளைத் தருவதைக் கண்டு ஆச்சரியப் படுவீர்கள். இந்தக் கீரைகளைச் சமைக்க வேண்டியதில்லை, பச்சடியாகவே செய்து சாப்பிடலாம்.

(3) பூந்தோட்டங்களை எல்லாம் உணவுப் பொருள்களை உண்டாக்குவதற்கு உபயோகப் படுத்த வேண்டும். இந்தக் காரியத்தை வைஸிராய், கவர்னர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களே முதலில் ஆரம்பித்து ஜனங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று அவர்களுக்கு யோசனை கூற விரும்புகிறேன். மத்திய விவசாய இலாக்கா, மாகாண இலாக்கா ஆகியவற்றின் தலைமை உத்தியோகஸ்தர்கள் எந்த உணவுப் பொருள்களை எந்த விதத்தில் எளிதாக உண்டாக்கலாம்

" உணவு நெருக்கடி உண்டாய் விட்டது என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலைமையில், உடனே கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் " மேலே உள்ளன. ஸ்ரீ பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை மொழிபெயர்த்தது.

என்பது பற்றி ஏராளமான துண்டுப் பிரசுரங்களைச் சுதேச பாஷையில் தயாரித்து, நாடெங்கும் பரப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(4) உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக்கொள்ளும் திட்டத்தை முக்கியமாக ராணுவத்தினரே முதலில் ஆரம்பித்தல் வேண்டும். அதிகமாகக் கட்டுப்பாட்டில் பழகியவர்களாதலால், அவர்கள்தான் சிக்கனத் திட்டங்களை எளிதில் நிறைவேற்றிவைக்க முடியும். அப்படி அவர்கள் ஆரம்பிக்கா விட்டாலும், அவர்கள் சாதாரண ஜனங்களைப் போல உணவின் அளவைக் குறைத்துக்கொள்ளவாவது வேண்டும்.

(5) எண்ணெய் விதைகளையும், எண்ணெய்களையும், புண்ணாக்கையும், கொட்டைகளையும் ஏற்றுமதி செய்வது ஏற்கெனவே தடுக்கப்படா திருந்தால், இப்பொழுது உடனே தடுக்கப்பட வேண்டும். எண்ணெய் விதைகளை மண்ணும் தூசியு மில்லாமல் சுத்தம் செய்து ஆட்டியிருந்தால், அந்தப் புண்ணாக்கும் அதிகப் போஷணை தரும் ஊன் சத்து நிறைந்த உணவே யாகும்.

(6) எங்கெல்லாம் முடியுமோ, எங்கெல்லாம் அவசியமோ, அங்கெல்லாம் அரசாங்கம் நீர்ப்பாசனத்துக்கும் குடி நீருக்கும் ஆழமான கிணறுகளைத் தோண்ட வேண்டும்.

(7) சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஜனங்களும் மனமுவந்து ஒத்துழைத்தால், இந்தக் கஷ்ட காலத்தை எளிதில் கடந்துவிடலாம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேக மில்லை. பீதியடைந்தவன் நிச்சயமாகத் தோல்வி யடைவான். அதேபோல், நாடு முழுவதும் கஷ்டம் ஏற்படவிருக்கும் சமயத்தில், அதைத் தடுப்பதற்கான காரியங்களை அவசரமாகச் செய்யாதிருந்தால், தோல்வியே உண்டாகும். நம் முன் உள்ள கஷ்ட நிலைமையின் காரணங்களைக் குறித்து இப்போது சிந்திக்கவேண்டாம். காரணம் எதுவா யிருந்தாலும் சரி, இப்போது சர்க்காரும் ஜனங்களும் இந்த நெருக்கடியைப் பொறுமையோடும் தைரியத்தோடும் சமாளிக்க முன்வராவிடில், நாட்டுக்குக் கேடு உண்டாவது நிச்சயம். நாம் இந்த அன்னிய சர்க்காரை எதிர்க்கவேண்டியது அவசியம்தான். ஆயினும், இப்போது இந்த உணவு விஷயத்தை விட்டு மற்ற விஷயங்களில் மட்டுமே அதை எதிர்ப்போம். ஆனல், இந்த உணவு விஷயத்திலுங்கூட அரசாங்கத்தார் இரக்கமில்லாமலோ, அல்லது காரண காரியத்தோடு கூறும் பொதுஜன அபிப்பிராயத்தை அவமதித்தோ நடப்பார்களானல். அவர்களைச் சும்மா விட முடியாது. எதிர்க்க வேண்டியதே யாகும். சர்க்கார் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பதும், இன்னும் சில மாதங்கள் ஆவதற்குள் சுயராஜ்யம் வந்துவிடும் என்று நம்ப வேண்டு மென்பதுப் என் அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தை அங்கீகரிக்கும்படி ஜனங்களுக்கு யோசனை கூறுகிறேன்.

(8) எல்லாவற்றிற்கும் மேலாக, கள்ள மார்க்கெட்டும், ஏமாற்றி விற்பதும் அடியோடு ஒழிந்து விட வேண்டும். இந்த உணவு நெருக்கடி சம்பந்தப் பட்ட மட்டில், எல்லாக் கட்சியாரும் ஒன்று சேர்ந்து, மனமுவந்து ஒத்துழைப்பதையே தங்கள் பிரதமக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

கலை வாழும் இல்லை

பி. எஸ். நாயுடு

சதா சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு யாத்திரிகனுக்குச் சிதம்பரம் சர்வ சாதாரணமாகவும், சுவாரஸ்ய மற்றும் தோன்றலாம். அசுத்தம் நிறைந்த வீதிகளும், இடிந்து கிடக்கும் வீடுகளும், பசியாலும், வியாதியாலும் வருந்தும் மக்களும் எல்லாம் சேர்ந்து, அந்த ஊருக்கே ஒரு மோசமான தோற்றத்தைக் கொடுக்கின்றன. அழுது வடியும் அந்த ஊருக்கு மின்சார வசதி வந்ததால், அதன் கோரத் தோற்றம் இன்னும் அகோரமாகி விடுகிறது. அவ்வூருக்குள்ள முக்கியத்துவமும், பெருமையும் அங்குள்ள கோவிலால் வந்தனவே. ஆனால், கோவிலுக்குப் போகும் வீதிகளைப் பார்க்கும்போது, நமக்கு ஏமாற்றந்தான் உண்டாகும்.

பிரசித்தமான கீழக்கோபுர வாயில் வழியாக நுழைவோம். எத்தனை புதைபொருள் ஆராய்ச்சியாளர், புராதனப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கவனத்தையும் கருத்தையும் இந்தக் கோபுரம் ஈர்த்திருக்கிறது! இந்தக் கோவில் தலபுராணத்தைத் தமிழில் பாடிய கவியின் சொற்கள் மூலம், இந்தக் கோவில் அழியாப புகழ் பெற்றுத் திகழ்கிறது. கற்பனைத் திறமில்லாதவர்கள் கோவிலைப் புதுப்பிக்கிற வேலையில் முனைந்து, செங்கல்லையும் சுண்ணம்பையும் கொண்டு, கண்ட இடங்களில் வாரி அப்பி, அந்தப் புராதன ஆலயத்தின் கட்டிட நிர்மாண அழகையும், சிற்பக் கலை அழகையும் மாசுபடுத்தி விட்டார்கள்.

கவனக்குறைவால், கடப்பைக் கல் தள வரிசைகள் அங்கங்கே பெயர்ந்து விட்டன. இடம் பெயர்ந்த கற்களின் இடைவெளிகளில் புல்லும் முளைத்து விட்டது. கோவில் வாயிலில், வழியை அடைத்துக் கொண்டும், பாதையை அசுத்தம் செய்து கொண்டும் ஒரு பசு நிற்பதைக் காணலாம். தென்னாட்டிலேயே மிகப் புனிதமானதாகக் கருதப்படும் இவ்விடத்தில் இந்த மாதிரியான அசங்கியக் காட்சிகளைக் காணும் எவரும் மனம் உளையாமல் இருக்க முடியாது.

அவசரப் படாமல் கொஞ்சம் நிதானித்தோமானால், இந்த மோசமான சூழ்நிலையிடையே கண்ணைக் கவரும் காட்சிகளையும் காணலாம். சற்றுக் கீழக் கோபுரத்தின் அருகே சென்று, கவனமாக அதை நோக்குவோம்.

எளிய உளியும் சுத்தியும் கொண்டு, இந்தியாவின் மேற்குக் கரையோரமுள்ள அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா குகைகளைக் குடைந்து அற்புதச் சிற்ப ஜாலங்களை எழுப்பிய கலைஞரான

சிவபெருமான் சிதம்பரத்தில் ஆடிய அற்புத நடனத்தைக் கண்ட தேவர்களெல்லாம் அப்படியே மெய்ம்மறந்து போய், இன்ப லஹிரி வெள்ளத்தில் மூழ்கினார்களாம். இதை நாம் பார்த்ததில்லை. அற்புதமான பரத நாட்டியத்தைப் பார்க்கையில், நம்முடைய உள்ளத்தை மகா இன்பகரமான உணர்ச்சிகள் வருடி விடுவதுண்டு. பரத நாட்டிய சாஸ்திரத்தின் நிலைக்களன், கல்லூரி, கலைக் கூடம் சிதம்பரந்தான் என்று பேர்ஸ்பெக்டிவ் என்ற பத்திரிகையில் ஸ்ரீ பி. எஸ். நாயுடு எழுதிய ஒரு கட்டுரையின் ஒரு பகுதி இது.

சன்னியாசிகளின் திறமையையும், கலை ஆர்வத்தையும் எல்லா நாகரிக நாடுகளும் வியந்து போற்றுகின்றன. ஆனால், கீழ்க் கரையோர நகரங்களின் அற்புத ஆலயங்களை, அழகுச் சிற்பங்களை நிருமித்த தென்னாட்டுச் சிற்பிகளின் பொறுமையும், தன்னை மறந்த கலைத்தொண்டும், எளிய பக்தி நிறைந்த வாழ்வும் மகத்தானவை. அவர்களை எவ்வளவு போற்றினாலும் பெருமை செய்தாலும் தகும்.

சற்று உள்ளே சென்று, உட்புறச் சித்திரங்களைக் காண்போம். பாதையின் இரு மருங்கிலும், மேல் முகடு வரை அடுக் கடுக்காக அமைந்துள்ள நுண்ணிய சிற்பங்களைப் பாருங்கள். ஒவ்வொன்றும் பரிபூரணத்துவம் வாய்ந்த அதி அற்புதமான சிருஷ்டி! கல்லில் செதுக்கியுள்ள சிற்றுருவங்களின் மயங்கிச் சொக்கிய கண்களையும், துடிக்கும் இதழ்களையும், நுண்ணிய இடையையும், வழித் தெடுத்த அங்கங்களின் உணர்ச்சி படிந்த சைகை நிலையையும் பாருங்கள்! அந்தச் சித்திரங்கள் உயிர் பெற்று தம்முடைய இருப்பிடத்தை விட்டு வந்து, நம்மோடு சம்பாஷிக்கத் தயாராய் இருப்பன போல் அல்லவா தோன்றுகின்றன? இந்தச் சின்னஞ் சிறு சிலைகள் சொல்லும் கதைகள் தான் என்ன? புராதன இந்திய நாட்டியத்தைப் பற்றி ஒன்று விடாமல் பரதன் எழுதிய அரிய நூலில் கூறப்பட்டுள்ள நூற்று எட்டு அபிநய பாவங்களை இந்தக் கற்களில் அழியா ஓவியங்களாகச் செதுக்கி வைத்திருக்கிறார்கள். இவைதான் பரதனுடைய நூலுக்கு இருக்கும் ஒரே ஆதாரம்; அதை வரிசைக் கிரமமாய், கவனமாய் விளக்குகிற விளக்க உரைகளும் இந்தச் சிற்பங்கள் தான். இவை தவிர, வேறே ஆதாரமோ விளக்கமோ வேறு எங்கும் இல்லை. நாட்டியச் சிற்பங்கள் தென்னாட்டுக் கோவில்கள் பலவற்றிலும் ஏராளமாக உள்ளன. ஆனால், புராதன நாட்டியத்தின் பல்வேறு பாவங்களையும் சிதம்பரத்தில்தான் நாம் ஒழுங்கான வரிசை முறைப்படி காணலாம்.

ஒவ்வொரு நடனச் சிற்பமும் பரிபூரணத்துவம் வாய்ந்த அற்புதச் சிருஷ்டியாகவே பொலிகிறது. சிற்பி, மரத்தையோ, மென்மையான சலவைக் கல்லையோ, தன் வேலைக்குத்தேர்ந்தெடுத்துக் கொள்ள வில்லை. செதுக்குவதற்குக் கடினமான கடப்பைக்கல்லிலேயே தன் கைவரிசையைப் பூராவாகக் காட்டி யிருக்கிறான். தன் கைத்திறத்தால், தென்னாட்டுச் சிற்பி, உயிரற்ற கல்லிற்கு உருவமும் உயிருமளித்து, அவை மகிழ்ச்சியால் கூத்தாடவும், துக்கத்தால் அழவும், இன்னும் இம் மாதிரியே மனித உள்ளத்தை ஆட்டிவைக்கும் நூற்று எட்டு விதமான உணர்ச்சிகளையும், மன எழுச்சிகளையும் வெகு அழகாக அந்தச் சிற்பங்கள் மூலம் வெளிப் படுத்தி யிருக்கிறான். கவிஞன், நாடக ஆசிரியன், கதாசிரியன், இவர்களைக்கூடத் திகைக்க வைக்கும் மனித மனத்தின் எண்ணிறந்த நவ நவமான எழுச்சிகளையும், வளைவுகளையும் ஒரே சதுர அங்குல அளவுள்ள இடத்திற்குள் அதியற்புதமாகச் சித்தரித் திருக்கிறான். அந்தச் சிற்பியின் திறமையே திறமை. வெறும் கல்லுக்கு உயிர் ஊட்டி, விகாரமாய்க் கிடந்த கல்லை நடமிடும் ஓர் அழகுருவமாக மாற்றி விடும்

சிற்பியின் கற்பனை ஆழத்தின் மகிமையே மகிமை. தென்னாட்டுக் கோவிலைக் "கல்லில் இழைத்த கவிதை," என்று சொல்வது மிகப் பொருத்தமாகும். இந்தக் கோவில்களை நிருமித்தவர்கள் அமானுஷ்யமான சிருஷ்டி உள்ளம் படைத்தவர்கள். அவர்களின் அதீதமான கற்பனையை, அவர்களுடைய சிருஷ்டிகளாகிய பலம் பொருந்திய பிரம்மாண்டமான ஆலயங்களிலும், அற்புதமான சிற்பங்களிலும் நாம் காண முடிகிறது.

இந்தச் சின்னஞ் சிறு சிற்பங்கள் எல்லாம் பரதன் எழுதிய நாட்டிய நூலின் நாலாவது அதிகாரத்தில் கண்ட நூற்று எட்டு அபிநய பாவங்களின் விளக்கம் என்று சொல்லலாம். சிற்பங்களின் மேல் காணப்படும் கல்வெட்டுகள், அபிநய பாவங்களின் அமைப்பு நிலைபற்றி நூலில் உள்ள ஈரடிச் செய்யுள் பகுதிகளேயாகும். இந்தச் சிற்பங்கள் மட்டும் இல்லையென்றால், இந்த அருமையான நூலைப் பற்றியும் நாம் அறிந்திருக்க முடியவே முடியாது. இந்த நடன பாவங்களைப் படம் பிடித்து, மனோ தத்துவ, அழகுத் தத்துவ அடிப்படையில் மீண்டும் வரிசைப் படுத்திப் பார்க்கும்போது, ஒரு மகத்தான உண்மை வெளியாகிறது. அடிப்படையான மன எழுச்சிக் கோவை பூராவும், அதன் பல்வேறு நுண்ணிய நெளிவுகளோடு, அந்த அந்த மன எழுச்சி அததற்குரிய உச்ச ஸ்தாயியை எட்டிப் பிடித்த வேளையில் எப்படி எப்படித் தோன்றுமோ, அதே தோற்றங்களைக் கல்லில் அழியா உருவில் நம் நன்மைக்காகச் செதுக்கி வைத்துள்ள தமிழ்ச் சிற்பிகளுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

உதாரணமாக, சில பிரதான எழுச்சிகளை எடுத்துக்கொண்டு கவனிப்போம். பயம், ஒரு பிரதான மன எழுச்சி தான் என்று மேல் நாட்டு மனோ தத்துவ சாஸ்திரிகளும், கீழ் நாட்டு அழகுணர்ச்சி விமரிசகர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த அடிப்படையான குணம், தொடர்ந்து பல உருவங்களின் வாயிலாக இங்கே அறபுதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அளவு மீறிய தயக்கத்திலும், விஷயம் புரியாத திகைப்பிலும் எழும் லேசான பயம், மிக அருகில் பாம்பைப் பார்த்து விடுவதால் ஏற்படும் நடுக்கம்: நெருப்பைக் காணும்போது அல்லது பாம்பைத் தொட்டு விட்டதால் உண்டாகும் பதை பதைப்பு, ஆழ்ந்த பயங்கரத்தால் நிலை விழந்து தடுமாறித் துடித்து விழுவது—இவை அச்ச உணர்ச்சியின் பல்வேறு சாயைகள். இவை அனைத்தும் கோவில் சிற்பங்களில் வெது தத்ரூபமாய்ச் சித்தரிக்கப் பட்டுள்ளன. இந்த வரிசையிலுள்ள ஒவ்வொரு சிறிய உருவத்தின் முக பாவமும் அப்படியே வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. தனக்குத் தானே அடங்கி யிருப்பதும், அதோடு பிறரிடமும் பணிவு காட்டுவதும், பயத்தை ஒட்டிய உணர்ச்சிகளாகும். சிற்பங்களின் கூப்பிய கைகள், சுருங்கிய உடல், கூம்பிய முகம், கீழ் நோக்கும் பார்வை சோகத்தின் தோற்றம் அல்ல. இதழ்களில் குறுநகை தவழுவதால், இவை அனைத்தும் சந்தேகமறப் பணிவையே தெரிவிக்கின்றன, பயத்திற்கும், அடக்கத்திற்கும் எதிர்மாருக,

ஆத்திரமும், வற்புறுத்தலும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரியே, அநுதாபம், ஆச்சரியம், மகிழ்வு முதலிய பிற உணர்ச்சிகளையும் அந்த நடன உருவங்களில் காண்கிறோம்.

பிரதான மன எழுச்சிகள் மிகச் சிலவே என்றாலும், அவைகளின் கூட்டுச் சேர்க்கையாலும், திரிபாலும் விளையும் எழுச்சிகள் எண்ணிறந்தன, பலதிறத்தன. புராதன இந்திய நாட்டிய சாஸ்திர ஆசிரியரான பரதன், பொறுமை, அசூயை, துக்கம், பிரமை, நன்றியுணர்வு என்ற மிகவும் சிக்கலான உள்ளத்து உணர்ச்சிகள் சிலவற்றையும், இதிகாசங்களில் வரும் பாத்திரங்களைப் பாதிக்கும் இன்னும் சில உணர்ச்சிகளையும் பற்றி மட்டும் கூறியுள்ளார். இவை அனைத்தும் சிதம்பரம் கோவிலில் சிற்ப வடிவில் சித்தரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய சிற்பங்களில் ஒன்றைப் பற்றி மட்டும் விசேஷமாகக் கூறவேண்டுவது அவசியம். தன் இஷ்ட தெய்வத்தை வணங்கும்போது, மெய்ம்மறந்து பரவச வெறியில் லயித்துவிடும் பக்தனின் நிலையை அந்தச் சிற்பம் உணர்த்துகிறது. பக்தி, வியப்பு, பூசனை, நன்றி ஆகிய உணர்ச்சிகளை எல்லாம் அந்தச் சிற்பம் வெகு தத்ரூபமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

பரதன், தம்முடைய நாட்டிய சாஸ்திரத்தில், ஒவ்வோர் அமைப்பு நிலையும் எவ்வாறு தொடங்குகிறது, அதை எப்போது எப்போது அபிநயிக்க வேண்டும் என்பதைப் பற்றி மிக நுணுக்கமான குறிப்புக்கள் தந்திருக்கிறார். இவை, விளக்கமாகவும் பூரணமாகவும் இருந்தாலும், வெறும் சொற்கோவையாக்வே இருக்கின்றன. சில வார்த்தைகளின் கருத்து விசேஷம் என்ன என்று அறிய முடியாமல், பலமுறை திகைக்க நேரிடுகிறது. இந்த நிலையில் நமக்கு உதவுபவை சிதம்பரம் கோவிலிலுள்ள சிற்பங்களே. பரதனின் சொல் விளக்கத்தில் தெளிவில்லாமலும், அறுதியிட்டுக் கூறாமலும் காணப்படுபவைகளைத் திறமை மிக்க சிற்பிகள் தெளிவாகவும் குறிப்பாகவும் தம்முடைய சிற்பங்களின் மூலம் விளக்கி விட்டார்கள். மூலத்திலுள்ள சமஸ்கிருத ஈரடிச் செய்யுள்களுக்குச் சிற்பக் கலையின் மூலம் இவர்கள் குறியீடுகள் அமைத்துள்ளார்கள்.

சிற்பியின் அபாரமான திறமையை வெளியிடும் சிறு சிறு நடனச் சிற்பங்களைப் பற்றிய ஒரு விசேஷ உண்மையை இங்குக் கூறலாம். ஜதை ஜதையான சிற்ப உருவங்களின் அபிநயங்கள் அனேகமாக ஒரே கருத்தை வெளியிடுவனவாகத் தோன்றுவதை அடிக்கடி பார்க்க நேரும். ஆனால், கூர்ந்து கவனித்தோமானால், ஜதையில் உள்ள ஒவ்வொரு உருவமும் வெவ்வேறு மன எழுச்சியை உணர்த்துவதைக் காணலாம். இதழ்களையும், கண்களையும் மகா சாமர்த்தியமாகச் செதுக்கி, அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கலை நுணுக்கம் காட்டி, முற்றிலும் வேறான இருவகை மனோ நிலைகளைச் சிற்பி சித்தரித்திருக்கிறான்.

அபிநயத் தோற்றங்களின் உள் நெளிவுகளையெல்லாம் கூர்ந்து நோக்கும்போது, மனித மனத்தைப் பற்றிப் புராணத்தில் வரும் பரத மகரிஷிக்கு இருந்த ஆழ்ந்த நுண்ணறிவைக் கண்டு நாம் வியக்காமல் இருக்கவே முடி

யாது. ஆனால், மனித உள்ளத்தின் பிடிபடாத பலவகை உணர்ச்சிகளைக் கடினமான, உணர்வற்ற, உயிரற்ற கல்லில் செதுக்கி வைத்த அருட் சிற்பிகளின் சிருஷ்டிகளைப் பார்க்கும்போது, நம்முடைய போற்றுதல் கண்மூடி வழிபாடாகவே மாறி விடுகிறது.

இத்தகைய கலைக் கூடங்களே இவற்றை நிர்மாணித்த மக்களின் பலதிறத்ததும், நுண்ணியதும், பூரணமடைந்து விளங்கியதுமான, மெருகேறிய பண்பாட்டிற்குத் தக்க சான்றுகளாகும். ஒரு பிரார்த்தனை ஸ்தலமாகவும், குருகுல வாசததிற்கு ஏற்ற இடமாகவும், கிராமியச் சமூக வாழ்வின் நடுநாயகமாகவும், தமிழனுடைய கூட்டுணர்வினுடைய புறப் பகுதியின் பரிபூரண உதாரணமாகவும் சிதம்பரம் கோவில் திகழ்கிறது. கலையுணர்வுத் துறையில், இந்தக் கோவில் கிரேக்க, ரோம நாடுகளின் மாபெரும் சிருஷ்டிகளுக்குச் சமமாகப் பொலிகிறது.

உன்னதமான பண்பாட்டு முன்னேற்றத்தின் சின்னமான இந்தக் கோவிலை எழுப்பிய மக்கள், தம்முடைய புற வாழ்வைப் பற்றிய மட்டில் மிகமிக எளிமை வாய்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்!

✲

வேலைக்காரியின் சந்தேகம்

வில்லியம் டீன் ஹாவல்ஸ் என்பவர், பிரசித்தி பெற்ற ஒரு நாவலாசிரியர். அவர் வீட்டில் வேலை பார்க்கப் புதிதாக ஒரு வேலைக்காரப் பெண் வந்திருந்தாள். எஜமான், வெளியே போகாமல் சதா காலமும் வீட்டைச் சுற்றிக் கொண்டே இருந்து வந்ததைக் காணக் காண அவளுக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. பல வாரங் கழித்து, ஒருநாள், நேரே தன் எஜமானியிடம் போய், "அம்மா, உங்களிடம் ஒரு சங்கதி சொல்லவேண்டும்" என்றாள்.

"என்னடி, அது?"

அந்தப் பெண், நாணத்தால் முகம் சிவந்து, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். கடைசியில், ஒருவாறாக, "வந்து,......எனக்கு வாரத்துக்கு நாலு டாலர் தருகிறீர்கள்—" என்று முணுமுணுத்தாள்.

அவள் சொல்லி முடிக்கு முன்பே, "என்னடி பண்ணுகிறது? நிஜமாக அதற்குமேல் உனக்குத் தர என்னால் முடியாதே" என்று எஜமானி இடைமறித்தாள்.

"உஹூம்! அதற்குமேல் அதிகமாய் எனக்கு வேண்டவே வேண்டாம். எஜமானுக்கு வேலை கிடைக்கும் வரையில், எனக்கு மூன்று டாலர் தந்தாலே போதும்."

—கிறிஸ்தியன் சயன்ஸ் மானிட்டர்

லௌகீக மனம்

வாழ்வில் எத்தனைதான் துன்ப துயரங்களை இடைவிடாமல் அனுபவித்தாலும், லௌகீகனுடைய மனமானது, பொன்னாசைகளை எளிதில் வெறுத்து, ஈசுவரனிடம் திரும்பாது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

இன்பத்தின் எல்லையைக் கண்டவன்

ஆர்தர் பிரியண்ட்

பிரிட்டிஷ் மக்கள், எழுத்தாளர்களை ஒரு கூத்தாடி இனமாகவே மதிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். எழுத்தாளர்களுடன் பழகுவது சுவாரஸ்யமா யிருக்கலாம். இவர்களுடைய செய்கைகளை, போனால் போகிறார்கள் என்று கண்டிக்காமல் கூட நாம் சும்மா இருக்கலாம். அது மட்டுமா? இவர்களை நாம் புகழக் கூடச் செய்யலாம். அதோடு சரி. இவர்களுடைய முக்கியத்துவம் எல்லாம், உலகத்தின் பொழுது போக்கு வசதிக்கான ஓர் அம்சமாக இவர்கள் இருப்பது ஒன்று தான். பெரும்படியான காரியம் எதையும் இவர்கள் சாதித்திருப்பதாகச் சொல்லவே முடியாது.

பிரமாதமான வெற்றி பெற்று, இன்று உயிரோடிருக்கும் எழுத்தாளர்களில், நமது ஐரிஷ் நாடகாசிரியரே முதன்மை யானவர். இது, தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல. இவர், எதைப் பற்றியும் மிக்க ஆழ்ந்து சிந்திக்கும் பண்பினர். தீவிரமான, உள்ளார்ந்த குறிக்கோள கொண்டவர். எழுத்தாளரைப்பற்றி உலகம் கொண்டிருக்கும் அர்த்தமற்ற மனோ பாவத்தை இவர் நன்கு அறிந்திருக்கிறார். அதற்கு ஏற்பவே, வெகு புத்திசாலித்தனமாகவும், அலட்சியமான வெறுப் போடும், விதூஷகப் போர்வைக்குள் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார்.

எழுதுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கிற எல்லாருமே எழுத்துலகில் வெற்றி பெற்றுவிடுவ தில்லை. சிறந்த எழுத்தாளனாக ஆன பிறகுகூடப் பெரும் பலருக்கும் போதிய வருமானம் கிடைப்ப தில்லை. இருந்தாலும், ஒரு முறை பேனாப் பிடிக்கத் தொடங்கிவிட்டால், பின்னால் அதை உதறித்தள்ளமுடிவ தில்லை. அப்படி இதில் என்ன தான் மோகன சக்தி இருக்கிறது? வெற்றிகரமான ஆசிரியனாக ஆவதுஎப்படி? எழுத்தாளனுக்கு இன்பம் கிட்டுமா? இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையின் சாரம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது.

பிரசித்தி பெற்ற ஓர் எழுத்தாளர், நல்ல வியாபாரியாகவும, ஆழ்ந்த அரசியல் மேதையாகவும், தேர்ந்த நிர்வாகியாகவும் கூட இருக்கலாம். இந்தத் துறைகளில் உள்ள அனேகருக்கு எழுதும் திறமை கிடையாது. இவர்களுக்குச் சமமாகவும்—ஒரு படி மேலாகவும் கூட, எழுத்தாளர்கள் பிரகாசிக்க முடியும. ஆனால், ஆங்கிலோ சாக்சானிய மனத்திற்கு இது ஒரு முரண்பாடாகவே தோன்றுகிறது. பதினாறும் நூற்றாண்டில் இருந்த நடிகர்களிடமிருந்தன போலவே, ஆசிரியர்களிடமும், முரடர்கள், ஊர் சுற்றிகள், இவர்களின் சிறப்பியல்புகள் லேசாகப் படிந்திருப்பனவாக ஜனங்களுக்குத் தோன்றுகிறது. ஒரு சிறிய வித்தியாசம். இந்தக் காலத்தில், ஆசிரியர்கள் திட சரீரிகளாகவே இருப்ப தில்லை. பயன்தரும் எதையும் அவர்கள் செய்வது கிடையாது.

ஆங்கிலோ சாக்சானியர் இவ்வாறு நினைப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவர்கள்

பர்னிச்சர்களுக்கு பெயர் பெற்றது

ரென் கம்பெனியே



சென்னையிலுள்ள எங்கள் வாடிக்கைக்
காரர்களில் ஒருவருடைய வீட்டின்
உட்பக்கம், சில நாட்களுக்கு முன்
எங்களால் அலங்கரிக்கப்பட்டது

ரென் பென்னட் அண்ட் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

★ தனிச் சிறப்பு வாய்ந்தது ★

இந்திய சுயராஜ்யம்

காந்திஜி எழுதியது

★

ரூபாய் : ஒன்று

[தபால் செலவு தனி]

உலக நிலை

ராஜாஜி எழுதியது

★

ரூபாய் : ஒன்றரை

[தபால் செலவு தனி]

சோவியத் ருஷ்யா

வெ. சாமிநாத சர்மா எழுதியது

★

ரூபாய் : நாலரை

[தபால் செலவு தனி]

பிளேட்டோவின் அரசியல்

வெ. சாமிநாத சர்மா எழுதியது

★

ரூபாய் : ஆறு

[தபால் செலவு தனி]

மகாகவி பாரதியார்

வ. ரா. எழுதியது

★

ரூபாய் : மூன்று

[தபால் செலவு தனி]

டால்ஸ்டாய் கதைகள்

முதலாவது புத்தகம்

★

ரூபாய்: இரண்டேகால்

[தபால் செலவு தனி]

சக்தி வெளியீடுகள்

ஆழ்ந்த மதப் பற்றுடையவர்கள். பண்படாமல், விலகி யிருந்து, தனித்து வாழும் போக்குடைய வர்கள். இதில் அவர்கள் மித மிஞ்சி முனைந்திருந்தாலும் கூட, இது நல்லதுதான். இதைவிட முக் கியமான காரணம், எழுதுவது சுலபம் என்று அவர்கள் நினைப் பது தான். எழுதுவது சிலருக்கு மற்றவரைவிடச் சுலபமாக இருக் கிறது. அத்தகையோர் அந்த வசதியை அப்படியே காசாக்கி விட முடியும். அவர்களைப் பார்த்துப் பிறர் பொறுமைப் படாமல் எப்படி இருக்க முடி யும், என்று தான் முந்திச் சொன்னவர்கள் வாதிக்கிறார் கள். வேறு எந்த மனித முயற் சிக்கும், சாதனைக்கும் தேவை யான உழைப்பும், சிரமமும் எழுத் துலகில் வெற்றி காண்ப தற்கும் அத்தியாவசிய மானது தான் என்ற உண்மை சாதா ரணப் பிரிட்டானியன் மனத்தில் உறைப்பதில்லை.

எந்த ஒரு சிறிய பொருளையும் பற்றி எழுது முன்பாக, எழுத் தாளர்கள் எத்தனை விதமான தகவல்களைப் புள்ளி விவரங்க ளோடு சேகரிக்க வேண்டி யிருக்கிறது? பின்னர், அவற்றை எவ்வளவு கவனமாகவும் ஜாக் கிரதையோடும் சரி பார்க்க வேண்டி யிருக்கிறது? இதைப் பலர் கவனிப்ப தாகவே தெரிய வில்லை. புத்திசாலிகள் என்று கருதப்படும் நண்பர்களும், அறி முகமானவர்களும் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கேட் கிறார்கள். எழுதுவதற்கு என்று, குறிப்பிட்ட வேலை நேரம் வைத் துக் கொள்வது அவசியமா, என்று அவர்கள் கேட்கிறார்கள்.

தூக்கத்திலும், உல்லாச விடு முறைகளிலும், இலக்கிய விருந்து களிலும் கூடச் சிரமமில்லாமலே நான் சரித்திரம் எழுதிவிட முடி யும் என்று அவர்கள் நினைக்கி றார்கள் போலிருக்கிறது!

இதை யெல்லாம் பற்றி நான் நினைக்கும்படி செய்தது நான் போயிருந்த ஒரு விருந்தில் நடந்த நிகழ்ச்சி தான். விருந்து முடிந்த பிறகு, நான் ஒரு சிறிய சொற் பொழிவு நிகழ்த்தினேன். எனக்கு வந்தனங் கூற எழுந்த ஒரு தொழில் பிரமுகர், என்னைப் பாராட்டிப் பேசினார். அவர் அவ்வாறு என்னைப் பாராட்டிய தற்குக் காரணம் இது தான்: பிரபல மடைந்த பிற எழுத்தா ளர்களைப் போல் அல்லாமல், நான் பொது ஊழியத்திலும் என் நேரத்தில் கொஞ்சம் செலவிடுகி றேன். இதன் மூலம், கடவுள் எனக்கு அளித்திருக்கும் திறமை நன்கு பயன் படுகிறது, என்றார் அந்த மனிதர். வேறு வழியில் செலவிடும் காலமும் என் தின சரித் தொழில் நேரத்தின் ஒரு பகுதிதான், ஓய்வு நேரம் அல்ல, என்னும் விஷயம் அவர் மூளைக்கு எட்டவில்லை என்றே தோன்று கிறது. எழுத்தாளன், உண்மை உழைப்பு என்பதையே அறியாத வன் என்று தான் ஒரு வியாபாரி நினைக்கிறான். எழுத்தாளன், மனதுக்குப் பிடித்தமான ஒரு வகை விளையாட்டுப் பொருள். அணிசெய்யும் — ஆனால் அதிகத் தொல்லை தராத—ஒரு பொழுது போக்குச் சாதனம்—ஒரு ஸ்திரீ யின் நூல்வேலை போல! தன்னு டைய காலத்தை அவன் எப்படி வேண்டுமானாலும் செலவிடலாம். அவன் காலத்திற்குத் தான் கணக்குக் கிடையாதே!

யுத்தத்தின் போது, காரியதரிசி இல்லாமலே வேலை செய்து வந் தேன். காலை உணவு அருந்து

கையில், தினமும் குறைந்தது ஒரு கையெழுத்துப் பிரதியாவது மேஜை மேல் கிடக்கும். நண்ப ரிடமிருந்தோ, வேற்று மனித ரிடமிருந்தோ அது வந்திருக்கும். தங்கள் நூல்களைப் பற்றிய என் விமரிசனத்தைக் கேட்டோ, அல்லது அவற்றைப் பிரசுரிக்க என் அபிப்பிராயத்தை — சில வேளை அதிகார தோரணையில்— கோரியோ, அதோடு அவர்களின் கடிதமும் வருவதுண்டு.

தயவு தாட்சணியம் பாராமல், அந்தப் பிரதிகளை அப்படியே கட்டோடு திருப்பி அனுப்பி விடு கிறேன் என்று வைத்துக் கொள் வோம். அப்போதும், ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு கடிதம் எழுதியாக வேண்டும். எழுதக் காகிதம் தேடவேண்டும். இன்னொரு விஷயம். இவர்கள் எவ் வளவு அலட்சியமாக எழுதிவிடு கிறார்களோ, அதே விதமான அலட்சியத்தோடு, ஏடுகளைச் சரி யாகக்கூடச் சேர்த்துக் கட்டா மல் அனுப்பி விடுவதால், எழுத் துப் பிரதிகள் பெரும்பாலும் அலங்கோலமாகவே வந்து சேர் கின்றன. அவற்றை ஒழுங்காகக் கட்டி அனுப்ப வேண்டுமானால், அதற்குக் கயிறு தேடவேண்டும். கடைசியாக, அவைகளுக்கு ஒட்டி அனுப்பத் தபால் தலைகள் வாங்குவதற்கு வேறுதொடர்ந்து பணம் செலவழிக்க வேண்டி இருக்கும்.

இவ்வாறு இல்லாமல், அன்பி னாலோ, எழுதி யிருப்பதைப் படித் தறியும் ஆர்வத்தினாலோ, நாம் அதைப் படிக்க ஆரம்பித்துவிட் டாலோ, வந்தது ஆபத்து! அதனால் விளையக் கூடிய தொல்லைகள் அனேகம். எந்தவிதமான கடி தப் போக்கு வரத்து நடத்த வேண்டி வரும் என்றோ, அத னால் எத்தகைய மனக் கசப்பை ஏற்க நேரிடும் என்றோ யாரும் சொல்வதற் கில்லை. இந்த விஷயத் தில், நாம் பெர்னார்டு ஷாவின் உதாரணத்தைப் பின்பற்றலாம். யாரும் எளிதில் தன்னை அணுகி விட முடியாதபடி, தன்னைச் சுற்றி லும் கடுமையான சுவர் எழுப்பிக் கொண்டானானால், எழுத்தாளன் பிழைத்தான். இல்லையேல், தொலைந்தான்! நடக்கக் கூடிய தும், நடக்கக் கூடாததுமான பல தர்மக் காரியங்களுக்காக வும், ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், பலர் அவன் உதவியை நாடி வந்து, அவன் உயிரையே வாங்கி விடு வார்கள்! சர் ஆஸ்பர்ட் சிட்வெல் மேற்கோள் காட்டிய ஒரு கடி தத்தில், "பணக்காரரிடமிருந்து, அவர்கள் கை எழுத்துடன் புத்த கங்கள் சேகரிப்பது எங்கள் நோக்கம்,'' என்று கண்டிருந் தது.

ஆசிரியர்கள், வரி செலுத்த வேண்டி யிருக்கிறது. சொந்த ஸ்தல தர்மங்களுக்கும் பணம் கொடுக்கவேண்டி யிருக்கிறது. இவை போதா வென்று, பிரசுர கர்த்தர்களிட மிருந்து கைப் பணத்தில் புத்தகங்கள் வாங்கித் தர்மத்திற்கு அளிக்க வேண்டும் என்று வேறே எதிர் பார்க்கிறார் கள். மேலே குறிப்பிட்ட கடிதம் எழுதியவரே, ஒரு மீன் வியாபா ரிக்கு, "உங்களிடம் இருக்கும் சிறந்த மீன்களைச் சேகரித்து மீன் பிரியர்களுக்கும், பணக்காரருக் கும் ஏலம் விடுவதே எங்கள் நோக்கம்'' என்று கடிதம் எழு தக் கனவிலும் கருதுவாரா? மாட்டார். ஏன்? மீன் வியாபாரி எழுத்தாளனை விட எவ்வளவோ உயர்ந்தவன் என்றே அவர் எண்ணுவார்.

உண்மையில், எழுத்தாளனுடைய வாழ்க்கை, வேறு எவருடையதையும் போலவே, கஷ்டம் நிறைந்தது தான். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. தங்கள் கூலி, வாரம் ஒன்றுக்கு ஐந்து பவுனுக்குக் குறைவதானால், அதற்காக நாட்டிலுள்ள மிகப்பெரும்பான்மையான ஆண் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யத் தயாராயிருப்பார்கள். இதனால், சகோதர மக்கள் பட்டினி கிடப்பதானாலும் சரி, கவலைப்பட மாட்டார்கள். ஆனால், தற்போது பிரசுரமாகும் புத்தகங்களில் 250 பவுனுக்கு அதிகம் பெறக்கூடியவை எத்தனையிருக்கும்? இவை அதிகமாய் இரா. எந்த ஆசிரியரும், அவர் எவ்வளவு அனுபவஸ்தரானாலும் சரி, சராசரி, ஆண்டொன்றுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட, உண்மையிலேயே சிறந்த முறையில் எழுதப்பட்டு, உயர்ந்த முறையில் வெளியாகும் நூலை எழுத முடியுமா, என்று அறைகூவிக் கேட்கிறேன்.

சில ஆசிரியர்கள் அதிகமான நூல்களை எழுதுகிறார்கள் என்பது மெய்தான். ஆனால், அவை அவ்வளவு திருப்திகரமாக இருப்பதில்லை. இன்னும் சிலர், ஒரே நூல் மூலம், பத்து மடங்கு—என், நூறு மடங்குகூட-பொருள் சேர்த்து விடுகிறார்கள். ஆனால், இத்தகைய நல்ல அதிர்ஷ்டம் வருவது அபூர்வமே. வியாபாரம், பாங்கித் தொழில், வைத்தியம், சட்டம், இத் துறைகளை விட வெகு அபூர்வம் தான். லாபம் ஏராளமாய்க் கிடைக்க வேண்டுமானால், இதறகாக ஒரு பாங்கரோ, தொழில் தலைவரோ தம்முடைய வியாபாரத்தில் காட்டும் ஆர்வமும், உழைப்பும், செயல் திறமும், தன்னுடைய முயற்சியில் வெற்றிபெற நினைக்கும் எழுத்தாளனுக்கும் இருந்தே ஆகவேண்டும். இத்துணை சிரமத்திற்குப் பிறகு கிடைக்கும் பலனும், பிற துறைகளில் கிடைப்பதைவிட மதிப்புக் குறைந்தது தான்.

ஒரு தொழில் முதலாளியோ, அல்லது தரகனோ, லாபத்தையெல்லாம் அப்படியே மூலதனமாக்கிக் கொண்டு விடலாம். மறைமுகமானதும், வரி விதிக்கக் கூடாததுமான வருவாய் அதிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கலாம். ஆனால், எழுத்தாளனின் நூல்களையும், அவன் நல்லெண்ணத்தையும் அவ்வாறெல்லாம் மாற்றிவிட முடியாது. பார்க்கப் போனால், தற்கால வரி விதிக்கும் முறையில், எந்த ஆசிரியனும் - அவன் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றவனாயினும் சரி — மீதம் பிடித்து வைப்பதென்பதோ, முதுமைப் பருவத்தில் உதவுவதற்காகச் சேர்த்து வைப்பதென்பதோ, அனேகமாக முடியாத காரியமாகி விட்டது. ஏனென்றால், அவன் பூராவும் தன் சொந்த உழைப்பையே நம்பி நிற்கிறான்; அவனுடைய டைபிஸ்ட்டைத் தவிர (அப்படி ஒருவனை வைத்துக்கொள்ளும் வசதி அவனுக்கு இருந்தால்) வேறு யாரையும் அவன் வஞ்சிப்பதில்லை. தொடர்ந்து கிடைக்கும் சம்பளம் எதையும் அவன் எதிர்பார்ப்பதற்கில்லை. எதனாலாவது அவன் வேலை செய்ய லாயக்கற்றுப் போனால், உபகாரச் சம்பளம் ஏதும் அவனுக்குக் கிடைப்பதில்லை. அந்த நிலையில், கடந்த வருஷ வருமான வரி, அதற்கு முந்திய வருஷ அமித வரி, இவற்றைச் செலுத்தச் சக்தியில்லாத

தற்காக அவன் சிறை செல்லும் படி கூட நேரிடலாம்!

இத்தகைய வெளியுலக வசதிக் குறைவுகளும், தொல்லைகளும் அவனுக்கு அனேகம் இருக்கலாம். ஆனால், சராசரி மனிதன் சரியானபடி எண்ணுவதைப் போல், ஓர் ஆசிரியன் அதிர்ஷ்டசாலியே. அவன் நிலை பொருமைப்படத் தக்கதே. பிழைப்பிற்காகப் பிறர் கனவிற் கூட நினைத்திராத அளவு அதிகநேரம் அவன் உழைக்கவேண்டியிருக்கலாம். தனக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்ட வாழ்வின் எல்லைகளுக்குள், அவன் தனக்குத் தானே தலைவனாக விளங்குகிறான்,—மறைந்து போன நாகரிகத்தின் உழவனையும் தொழிலாளியையும் போல.

முழுச் சர்வாதிகார ரீதியில் அமைந்த அரசாங்கம், அவனையும் பிற பாட்டாளி மக்களைப் போல் ஓர் அடிமைக் கூலியாக மாற்றிவிடும் வரை — எழுத்தாளன் சுதந்தர மனிதன் தான். அவன் வாழ்க்கை கடிகார முட்களோடு சேர்ந்து ஓடவேண்டியதில்லை. குறித்த நேரத்தில் வர வேண்டும், வேலை செய்யக் குறிப்பிட்ட கால எல்லைகள் வைத்துக் கொள்ள வேண்டும், என்ற நிர்ப்பந்தங்கள் அவனுக்கில்லை. தனக்குப் பிடித்தமான நேரத்தை அவன் ஏற்படுத்திக் கொள்கிறான். தனக்குப் பிடித்தமில்லாத காரியங்களை, பிறர் கட்டாயத்திற்காக, இஷ்டமில்லா விட்டால்கூட, செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம் எதுவும் அவனுக்குக் கிடையாது. தன் மனதிற்குப் பிடித்தவற்றையே செய்வான். எப்படியோ பிழைப்பு நடக்க வேண்டும். தன் புத்தகங்களைப் பொது மக்கள் வாங்குமாறு செய்யவேண்டும். இந்த அவசியத்தைத் தவிர, அவன் எதைப் பற்றி வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் எழுதலாம். எந்த விதமான தளைகளிலும் கட்டுப்படாமல், தனக்குப் பிடித்த பிரசுர கர்த்தரைத் தானாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தொட்டில் முதல் சுடுகாடு வரை—பிறந்தது முதல் சாகும் வரை—திட்டம் போட்டு வாழ்க்கை நடத்தும் இந்த உலகத்தில், எழுத்தாளனே உண்மையில் இன்பத்தின் எல்லையைக் கண்டவனாவான்.

✲

உணவுப் பிரச்சினை தகர்ந்தது

இந்தியாவில், தேவைக்கு அதிகமாய் மிஞ்சிவிட்ட வெடிமருந்துகளை, நிலத்திற்கு உரமாக உபயோகித்துப் பார்த்ததில், இதனால் கோதுமை அறுவடை நூறு சத விகிதமும், சோள அறுவடை நாற்பத்தொன்பது சத விகிதமும் அதிகரித்தனவாம். வெடி மருந்துகளை நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கல்கத்தாக் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் சொல்லுகிறார். தாவரங்களால் எளிதில் கிரகித்துக்கொள்ளக் கூடிய ரூபத்தில் வெடி மருந்துகளில் உப்புத் திராவகம் இருப்பதாக அவர் எடுத்துக் காட்டுகிறார்.

—ஜனதா

சல்லாபத்தின் மறு உருவம்

காதல் கீதம் என்பது வேறொன்று மல்ல; இசை உருவம் பெற்று விட்ட சல்லாபம் தான் அது.

சிக்மண்ட் ராம்பெர்க்—(இங்கிலீஷ் டைஜெஸ்ட்)

காப்பி குடிக்கலாமா ?

ஜான் ஹார்வி கெல்லக்

காப்பி ஓர் உணவல்ல; தீமை விளைக்காத மூலிகையும் அல்ல; அது ஒரு மருந்துப் பொருள்,—சக்தி வாய்ந்த, அழிவு தேடக்கூடிய மருந்துப் பொருள். அது ஒரு விஷம். காப்பியால் உண்டாகும் தீய விளைவுகளுக்கு அதிலுள்ள கஃபீன் என்ற நச்சுச் சாறுதான் காரணம். இந்தக் கஃபீன், தேயிலை முதலிய இதர பானங்களிலும் ஒருமுக்கிய அம்சமாக இருக்கிறது. கொக்கோவிலும், சாக்லெட்டிலும் அடங்கியிருக்கும் தியோ ப்ரோமின் என்பதும் கஃபீனைப் போலத் தீமை செய்யக் கூடியதுதான்.

காப்பியின் விளைவுகளைப் பற்றிப் பேசும்போது, ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காப்பியைப் பற்றிக் கூறப்படும் ஒவ்வொரு விஷயமும் தேயிலை, கொக்கோ முதலிய இதர பானங்களுக்கும் பொருந்தும்.

நம் நாட்டிலும், நாகரிக மடைந்துள்ள இதர நாடுகளிலும், பல்லாயிரக் கணக்கான மக்கள் காப்பி குடிப்பதன் மூலம் நஞ்சை உண்டு வருந்துகிறார்கள். ஆனால், அவர்கள் அதை உணர்வதில்லை. தலைவலி, மனச் சோர்வு, தூக்கமின்மை, சிடுசிடுப்பு, நரம்புத் தளர்ச்சி, எந்த விஷயத்திலும் ஒரு தீர்மானத்துக்கு வர முடியாமல் திண்டாடுவது, எதிலும் ஆர்வம் கொள்ளாமை, தகுதிக் குறைவு, இவற்றால் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு எல்லாம் காரணம், வேலை அதிகமா யிருக்கிறது, இடம் மாற வேண்டும், வேலை மாறுதல் வேண்டும் என்கிறார்கள். இவை தவிர, வேறு பல காரணங்களையும் கூறுகிறார்கள். உண்மையான காரணத்தை மட்டும் அவர்கள் அறிவதில்லை. காப்பி குடித்து உடம்பில் நஞ்சு சார்வதால் வரும் கோளாறுகள் தான் இவை என்பதை அவர்கள் சிந்திப்பதேயில்லை. "மயக்கம்" ஊட்டாமல் "உற்சாகம் ஊட்டும்" கோப்பைகளைப் பற்றிக் கவிஞன் உயர்வாய்ப் பாடினான். ஆனால், அந்தக் கோப்பைகள் உண்மையில் விஷக் கோப்பைகள் தான் என்பதை விஞ்ஞானம் நிரூபித்து விட்டது. அந்த விஷம் சுவடு தெரியாமல் வேலை செய்யக் கூடியது; மகா பொல்லாதது. மனிதனை அது நாளடைவில் கொன்று விடுகிறது. அதன் ஆபத்து வெளிக்குத் தெரிவதில்லை. அதற்கு இரையாகும் மனிதனும் அதனால் உற்சாகம் ஏற்படுவதாகவும், தான் அதனிடமிருந்து அனுகூலம் அடைவதாகவுமே கடைசி வரை நம்புகிறான்.

சமீப காலத்தில், ஹிருதயம், ரத்தக் குழாய் இவை சம்பந்தமான வியாதிகள், மூத்திரக்காய் உபத்

சீனர்களுக்கு, தேநீர் பருகுவது என்பது, பய பக்தியுடன் செய்ய வேண்டிய ஒரு சடங்கு. தென்னாட்டாருக்கு, காப்பி குடிப்பது என்பது, கட்டாயமான தினசரித் தேவை. காப்பி, தேநீர், கொக்கோ எதுவுமே குடியாதவர்கள் மிகமிகச் சொற்பம். இதற்காகக் காப்பி முதலியன நல்லவைதான் என்று சொல்லமுடியுமா? இவற்றால் நம்மைச் சூழும் பெருங்கேடுகளை விளக்கி வெல்த் அண்ட் வெல்பேர் பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையின் சாரம் இது.

திரவங்கள், ரத்தக் கொதிப்பு, நடுக்கு வாதம் முதலியவற்றால் ஏற்படும் மரணச் சதவிகிதம் அதிகரித்திருப்பதற்கு, தேயிலை, காப்பி குடிக்கும் பழக்கமே ஓரளவுக்கு முக்கியக் காரணம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

அமெரிக்கரிடையே, காப்பி குடிப்பதை அதிகரிப்பதற்காகக் காப்பி வியாபாரிகள் அதன் உண்மையான குணங்களை மக்களிடமிருந்து மறைக்க அசாதாரணமான முயற்சிகளெல்லாம் செய்கிறார்கள். தப்பான முறைகளைக் கையாளக் கூட இவர்கள் தயங்குவதில்லை. இந்த நிலையில், காப்பியின் தீமைகளை மக்கள் அறிந்துகொள்ளுமாறு செய்வது அவசியமாகும்.

எல்லாவிதக் காப்பியிலும் விஷம் இருக்கிறது. 'கஃபீன் நீக்கப்பட்ட காப்பி'யும் இதற்கு விலக்கு அல்ல. காப்பியில் இரண்டு வகையான விஷம் அடங்கி இருக்கிறது. (1) பச்சைக் காப்பிக் கொட்டையிலேயே அடங்கியுள்ளவை:—இவை, கஃபீன், கஃபீயோடான்னிக் காடி, வாசனை எண்ணெய். (2) கொட்டையை வறுக்கும்போது உண்டாகக் கூடியவை:—இவை, புகை ஊட்டிய பொருள்களில் உள்ளவைகளைப் போன்றனவே. மிகவும் ஆபத்தான விஷக் கலப்பு உள்ளவை. பச்சைக் கொட்டையில் காணப்படும் விஷங்களை விட இவை பல மடங்கு அபாயகரமானவை. புகை ஊட்டிய பொருள்களில் உள்ள விஷம், சாதாரணக் காப்பியில் காணப்படும் அதே அளவுக்குக் 'கஃபீன் நீக்கப்பட்ட' காப்பியிலும் இருக்கிறது. அதன் விளைவாக, ஹிருதயம் வெகு சீக்கிரத்தில் பலவீனமடைவதோடு, செயலாற்ற முடியாமலும் போய்விடுகிறது.

பல வருஷங்களுக்கு முன்பு, சர் வில்லியம் ராபர்ட்ஸ் என்பவர் நடத்திய பல பரிசோதனைகளின் மூலம், பின்வரும் விஷயம் தெளிவாகி உள்ளது: மிக நுண்ணிய அளவில் உட்கொண்டாலும் கூட, தேயிலையானது உணவை ஜீரணிக்க உதவும் உமிழ் நீரின் சக்தியை ஒரேயடியாகக் குறைத்து விடுகிறது. அது ஜீரண சக்தியையும் தடைப்படுத்துகிறது. தேயிலையைப் போலவே, காப்பியும், கொக்கோவும் குடலின் ஜீரண சக்தியை வெகு தூரம் பாதிக்கின்றன.

உணவு முறைகளைப் பற்றி எழுதுவதில் மகா சிறந்த ஆங்கில எழுத்தாளரான டாக்டர் டிப்பிள்ஸ், காப்பியானது ஈரலை மிகவும் பாதிப்பதால், அதைக் கண்டிக்கிறார். மேலும், தூக்கமின்மை, ஹிருதயப் படபடப்பு, முகம் நிற மாறுதல், தசைகளில் அதிர்ச்சி, நரம்புத் தளர்ச்சி அறிகுறிகள்—எல்லாம் தேயிலையினால் ஏற்படுபவை தான் என்கிறார்.

பிலடெல்பியாவைச் சேர்ந்த டாக்டர் ஷூமேக்கர் என்பவரும், மூத்திரக் காய்களைக் காப்பி சேதப்படுத்துகிறது என்று கூறுகிறார். இவர், மருத்துவ அகராதியும், மருந்து வகைகளின் குணங்களைப் பற்றிக் கூறும் புத்தகமும் எழுதி இருக்கிறார். மேலும், இவர் மருத்துவ சத்திர சிகிச்சைக் கல்லூரியில் ஓர் இலாக்காவின் தலைவராயிருக்கிறார்.

பலத்த அதிர்ச்சியினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில், ரத்த ஓட்டத்தை அதிகப் படுத்தக் கஃபீனை உபயோகிக்கலாம். அதற்கு இது நம்பிக்கையான

மருந்து. சாதாரணமாக, ஒரே ஒரு தரம், ஓர் அரிசி எடை அளவு அதை மருந்தாக உபயோகித்தாலும், அதன் விளைவு மிகத் தெளிவாகத்தெரியும். சத்திர சிகிச்சைக்குள்ளான ஒரு நோயாளிக்கு ரத்த ஓட்டம் சராசரி நிலைக்கும் கீழே மந்தமாய்ப் போய்விட்டது. அவனுக்கு ஓர் அரிசி எடை கஃபீன் கொடுத்தவுடன், ரத்த ஓட்டம் வெகு சீக்கிரத்தில் இருபது துடிப்பு அதிகமாய் விட்டது.

மருந்துப் பொருள் என்ற அளவில், காப்பி மிகவும உபயோகமானது. ஆனால், அது ஓர் உணவே அல்ல. காப்பியிலுள்ள எந்தக் குணம் அதை ஒரு மருந்துப் பொருளாகச் செய்கிறதோ, அதே குணம் காப்பியை வழக்கமாக அருந்துவதை மிக்க ஆபத்தான செய்கையாக்கி விடுகிறது.

ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிற கஃபீன் போன்ற மருந்துப் பொருள் ரத்தக் குழாய்களில் கலக்க விடுவதால், ரத்தக் குழாய்கள் சுருங்கி, இறுகிப் போய் விடுகின்றன. ரத்தக் குழாய்கள் இறுகிக் கடினமாய்ப் போவதால் பலவீனமும், வேறு பல அபாயங்களும் சதாரணமாக ஏற்படுகின்றன. இதனால், ரத்தக் கொதிப்பு உண்டாகிறது. உணர்ச்சி மரமரத்து விடுகிறது. கிழடு தட்டுகிறது.

போதை தரும் குடி வகைகளை விடக் காப்பி அதிகமாகப் பரவிவிட்டது. அவைகளை விட இதனால் இன்று மகா மோசமான தீமை விளைகிறது. காப்பி, நுண்ணிய மருந்துப் பொருள். சராசரி அமெரிக்கன், ஆண்டு ஒன்றுக்குப் பதினைந்து பவுண்டு காப்பி உட்கொள்ளுகிறான். நாலு அரிசி எடை கஃபீனைத் தினசரி விழுங்குகிறான். ஆனால், சிசுக்களும், சிறு குழந்தைகளும் காப்பியை உபயோகிப்பதில்லை. ஆகவே, சராசரிக் காப்பிக் குடியனுக்குக் குறைந்தது பத்து அல்லது பன்னிரண்டு அரிசி எடை கஃபீன் உடம்பில் சேருகிறது. இதோடு, சுமார் பன்னிரண்டு தினுசுக் காப்பி விஷங்களும் அவனுள் கலக்கின்றன.

ஒவ்வொரு மிடறு கஃபீனும் ரத்த அழுக்கத்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. சக்திக்கு மீறிய வேலையால் தளர்ந்து போகும் ஹிருதயத்தின் ஆயுளை அது தேய்த் தழிக்கிறது. அகாலத்தில் ஓய்ந்து போகும் ஹிருதயம், நெஞ்சுக் குத்து, மாரடைப்பு, மார்பு வலி போன்ற நோய்களுக்கு இரையாகிறது.

தினசரி இரண்டு கோப்பை, மூன்று கோப்பை என்று காப்பி அருந்துவதால் பலமான ரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது என்று சொல்லுகிறார் டாக்டர் ஸெனெட்ஸ் என்கிற பிரசித்த ஜெர்மன் நிபுணரும்.

சில வருஷங்களுக்கு முன், தொடர்ந்து சரியான தூக்கமில்லாததாலும், நரம்புத் தளர்ச்சியாலும், ஏராளமான ஐரிஷ் மக்கள் பைத்தியம் பிடித்தவர்களாக ஆகிக் கொண்டு வந்ததற்குக் காரணம், அவர்கள் டீ அருந்தியது தான் என்று, பைத்தியத்தைப் பற்றி விசாரணை செய்த ஐரிஷ் விசாரணை சபையார் அபிப்பிராயப்பட்டார்கள். காப்பியானது, ஒரு முறை உபயோகித்துப் பழகி விட்டால், பின்னல் விட முடியாதபடி வழக்கத்துக்கு வந்து விடுகிற ஒரு மருந்து.

காலையில் காப்பி குடிக்கத் தவறி விட்டால், சிலர் "உடம்புக்கு என்னவோ போல் இருக்கிறது" என்கிறார்கள். சிலருக்குத் தலைவலியே வந்து விடுகிறது! இவர்கள் எல்லாம் காப்பியின் அடிமைகள். பீப்பாய்க் குடியன், ஒரு நாளைக்குக் குடிக்க முடியா விட்டால், மிகவும் சங்கடப் படுகிறான். தினசரி சுருட்டுப் பிடிப்பவன், ஒரு நாள் புகைக்கா விட்டால், உன்மத்தனாகி விடுகிறான். காப்பி இல்லா விட்டால் கலக்கமடைகிறவர்கள் பல்லாயிரக் கணக்காக இருக்கிறார்கள். இவர்கள் மெய்யான காப்பி அன்பர்கள். காப்பி அவர்களுக்கு உயிர். அது இல்லாமல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. காப்பி அவ்வளவு தூரம் ஜனங்களைப் பைத்திய மாக்கிவிட் டிருக்கிறது! மக்களுக்குக் காப்பி விளைக்கும் தீமைகளுக்கு இது ஒரு சிறிய உதாரணம்.

காப்பி வியாபாரிகள், காப்பி ஓர் உணவு தான் என்று அமெரிக்க மக்களை நம்பும்படி செய்ய முயல்கிறார்கள். இதற்கு, வியாபார மோகம் கொண்ட மருந்து வியாபாரியும் உடந்தையாய் இருக்கிறான். காப்பி நிச்சயமாக ஒரு விஷமே. அது ஒரு கொடிய பழக்கம்.

காப்பி திறமையைக் குறைத்து விடுகிறது. வியாதியை உண்டாக்குகிறது. வயோதிகத்தை வருந்தி அழைக்கிறது. ஆயுளையே தேய்த்தடிக்கிறது. ஹிருதய நோய் உள்ளவர்கள், ரத்தக் குழாய் இறுகி விட்டவர்கள், மூத்திரக்காய் வியாதியஸ்தர்கள் — இவர்கள் காப்பி குடிப்பதை எல்லா டாக்டர்களும் கண்டிக்கிறார்கள். இந்த உறுப்புக்கள் நல்ல நிலையில் இருப்பவர்களும் காப்பியைக் கைவிட வேண்டும். அப்போது தான் மேலே சொன்ன இந்த உறுப்புக்கள் நலம் குன்றாதிருக்க முடியும். அவை நோயுற்று விட்ட பிறகு நாம் செய்யக் கூடியதெல்லாம், நோய் மேற்கொண்டு பரவாமல் தடுப்பது அல்லது அதன் வேகத்தை மட்டுப் படுத்துவது ஆகியவை தான். அதிகமாக வேறொன்றும் செய்வதற் கில்லை.

காப்பியால் எவ்வளவு தீமைகள் விளைகின்றன! அப்படி இருந்தும், அது ஒரு முக்கிய மான உணவாக ஆகிவிட்டிருப்பது விந்தை தான்!

காப்பி, அழிவு தேடும் மருந்துப் பொருள். அதற்குப் பதிலாகப் பழ ரசங்களையும், பால் முதலிய பானங்களையும் உபயோகிக்கலாம்.

*

ஜாகைக்குச் சிறை

அமெரிக்காவில், அத்லாந்தாவைச் சேர்ந்த எழுபத்திரண்டு வயதான இ. டபிள்யு. ஆலன் என்பவர் ரூ. 67,500 ஜீவனாம்சத் தொகையைச் செலுத்திவிட்டுச் சிறையினின்றும் வெளி வந்தார். ஆனால், வெகு சீக்கிரம் பழையபடியும் அதே சிறைக்கு வந்துசேர்ந்தார். சிறை அதிகாரியிடம் போய், "இந்த நகரம் முழுவதும் நான் சுற்றிப்பார்த்து விட்டேன். தங்குவதற்கு எங்கும் அறை கிடைக்க வில்லை. அதனால், நான் முன்பு வசித்து வந்த பழைய அறையையே எனக்குத் தரவேண்டுகிறேன்" என்று கேட்டுக்கொண்டார்.

வசிக்க வேறிடம் கிடைக்கும்வரை, நாளொன்றுக்கு ரூ. 2 வீதம், வாடகைக்கு அங்கேயே தங்கிவர அவரை அனுமதித்தார்கள்.

இப்படிச் சலவை செய்தால் அடித்துத் துவைப்பதனாலுண்டாகும் நாசத்தைத் தடுக்கலாம்



பழைய முறையில் ஆடைகளை அடித்துத் துவைத்துச் சலவை செய்வதால் துவாரங்கள், கிழிசல், கரையோரமாகத் தையல் விட்டுப்போதல் . . . முதலிய அநாவசியமான வீண் செலவிற்குரிய நாசம் ஏற்படுகிறது.

1

ஆடைகளைப் பாழ் படுத்தாமல் எப்படித் துவைத்துச் சலவை செய்யலாமென்று இப் படங்கள் உங்களுக்குக் காட்டுகின்றன. (1) சலவை செய்யவேண்டிய உடையை நன்றாக நனையுங்கள் — குழாய், தொட்டி, குளம், ஆறு அல்லது ஓடை ஆகிய இவற்றை நீங்கள் உபயோகிக்கலாம். அதனால் யாதொரு வித்தியாசமும் இல்லை. (2) நன்றாக உடை நனைந்தபிறகு ஸன்லைட் சோப்பை அதன்மீது முழுவதும் தேயுங்கள். (அழுக்கேறின பாகத்தில் ஸன்லைட்டைத் தாராளமாகத் தடவவும்.) (3) சோப் போடப்பட்ட உடை முழுவதும் பரவ கசக்கவும் (சப்பாத்தி செய்ய மாவை எப்படி நீங்கள் பிசைவீர்களோ அப்படிச் செய்யவும்). துணியின் இழையில் சோப் நுரை படும்படி அதை முழுவதும் கசக்கிப் பிழியுங்கள். முரட்டுத்தனமாக துணியைத் துவைத்து கசக்கவேண்டிய அவசியமே இல்லை. அழுக்குள்ள இடங்களிலெல்லாம் நுரை படும்படி தேயதுக் கசக்கினால், ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை எல்லா அழுக்கையும் மெதுவாகப் போக்கிவிடும். இந்த சக்திவாய்ந்த நுரையிலுள்ள "சிறந்த" சோப் பட்டமாத்திரத்தில் அழுக்கு உடனே நீங்கிவிடுகிறது. ஆடையிலுள்ள அழுக்கு நீங்கிப்போய் நுரையிற் சேர்ந்துவிடுகிறது. ஆகையினாலே துணியை நுரையிலிருந்து அலசிக் கழுவும்போதே அழுக்கையும் நீங்கள் அகற்றிவிடுகிறீர்கள். (4) அழுக்கு இப்பொழுது அடங்கியிருக்கிற நுரையை ஆடையிலிருந்து போகும்படி நன்றாக அலசிச் சுத்தம் செய்யுங்கள்.

இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி துணிகளைச் சலவை செய்தால் அவை வெகுநாளைக்கு நீடித்துவரும்.

2

3

4

ஸன்லைட் சோப் துணிகளைப் பாதுகாக்கிறது

S 74-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

இந்தியன்
பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

●

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான
இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வர்க்களிக்கப்பட்ட
- மூலதனம் ரூ. 68,71,800

செலுத்தப்பட்ட மூலதனம்
- - - ரூ. 44,42,662

ரிஸர்வ் நிதி - ரூ. 49,50,000

டிபாஸிட்ஸ் - ரூ. 13½ -
(31-12-45) கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்
களும் கவனிக்கப்படும்

செக்ரேடரி :

N. கோபால அய்யர்

நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்
கள் தமிழ்நாட்டு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

செகந்திராபாத் — பெஜவாடா — மதுரை

பாட்டாளி மக்கள்

மா. கோலப்ப பிள்ளை

நிலம் உழுவார்; நெல் விதைப்பார்; அறுத்தடிப்பார், தம்பீ.
நெல்மணியைக் களங்களிலே குவியல் களாய்க் குவிப்பார்.
நெல் போன விதம் அறியார்; கடவுள் செயல் என்பார்.
நெடு நாளாய்ப் பட்டினிக்கு இரையாகிக் கிடப்பார்.
பல் போன முதியவர் சொல் பலம் என்று சொல்வார்.
பழுத்த இளம் கிழவர்களாய்ப் பாரதத்தோர் நின்ருல்,
பண்புடைய சுதந்தரத்தாய் பாரதத்தை என்று
பார்த்திடுவாள்? விளக்கமுறச் சொல்லிடடா தம்பீ.

இளம்பருத்திச் செடி நடுவார்; பஞ்செடுப்பார் ; நல்ல
லேசான நூல் நூற்பார்; துணி நெய்வார், தம்பீ.
இடுப்புக்குத் துணியின்றித் தெருக்களிலே நின்று
ஈசன் செயல் என்றுளறித் தன் வலியை மறந்து
மழை மழையாய்க் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட
மனமுடைந்து வாய் விட்டு அழுதிடுவார்; ஆனுல்,
மனித குலம் இக்கதிக்கு வந்தது ஏன் என்று
மனம் விட்டுச் சிந்திக்க மதி கொள்ள மாட்டார்.

பாடுபடும் மக்களுக்குப் பார்வை யில்லை தம்பீ.
படிக்கின்ற கூட்டமெலாம் பழமை எனும் பெரும் பேய்
ஆடுகின்ற ஆட்டமதில் அறிவிழந்து நிற்கும்.
ஆண்மை உள்ள வாலிபர்கள் அவமதிப்பை விழுங்கி
ஓடுகின்ற ரத்தத்தை உறைய வைத்து நிற்பார்.
ஓய்ந்திருக்கும் கிழவரெலாம் ஒன்றையுமே எண்ணுர்.
காடு தின்ற தீ போலக் கஷ்டமெலாம் நம்மைக்
கரித்துருக்கி நீருக்கிக் கவலைக்குள் தள்ளும்.

நமைச் சுரண்டி வாழுகின்ற நாடோடி அரசு
நடராஜ நர்த்தனத்தை அற்புதமாய்ச் செய்யும்.
சுமையான பாருங்கல் என்கின்ற துன்பச்
சூழ்ச்சிக்குள் தள்ளி நமைச் சோதனையும் செய்யும்.
இமையாது விழித்திருக்கும் அறிவாளிக் கூட்டம்
இறைவனையே துதி செய்து அவனுதவி கேட்கும்.
நமக்குள்ளே பிளவுபட நாடு பிறர் ஆளும்
நக்கல் இனி நடக்காது எனச் சொல்லு தம்பீ.

✱

மதிப்பிழந்த நோட்டு

தி. ஜ. ர.

மனிதர்களுக்கு, வாழ்வும் தாழ்வும் அவர்கள் வைத்திருக்கும் பணத்தைப் பொறுத்துத்தான் இதுவரை இருந்து வந்தது. இப்போதோ, பணத்துக்கே வாழ்வும், தாழ்வும், ஏன், — அனாதையாய், நிர்க்கதியாய் மடியவேண்டிய பரிதாபமான நிலைமைகூட வந்து விட்டது. மதிப்பிழந்த பணத்துக்குப் புது உபயோகம் என்ன? இங்கே சில யோசனைகள் கூறப்பெறுகின்றன.

"அப்பா, நீ ஓரணாக் கொடுத்தால், நான் பத்து ரூபாய் தருவேன்" என்றாள் குழந்தை பாப்பா ஒரு நாள்.

ஓர் அணாவுக்குப் பத்து ரூபாய்! ஒன்றுக்கு நூற்றியறுபது மடங்கு! இந்தக் குழந்தை என்னை எப்படி ஏமாற்றப் பார்க்கிறாள்! இது ஏதாவது புதிரா? தமாஷா? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"நிஜமாகவே கொடுக்கவேண்டும். இப்போதே கொடுக்க வேண்டும் இல்லையோ உதைப்பேன்" என்று மிரட்டினேன்.

"நிஜமாகவே கொடுக்கிறேன். இப்போதே" என்று உறுதியாகச் சொன்னாள் குழந்தை.

மறுபடியும் யோசித்தேன். ஒருகால், அந்த மொனாப்பலி விளையாட்டுக் காகித நோட்டை வைத்துக் கொண்டு, ஏமாற்றப் பார்க்கிறாளோ? அப்படியானால், நன்றாய்த் தர்க்கம் செய்யலாம். அது 'ஸ்டர்லிங்' நோட்டு அல்லவா? அந்த விளையாட்டுக் காகித நோட்டில் பத்து என்று இருப்பது 'பத்துஸ்டர்லிங்,' இவள் சொல்லுவது பத்து ரூபாய் அல்லவா? எப்படியிருந்தாலும் இந்தப் புதிரை அவிழ்த்துவிடவேண்டும்; அதிலும் வெற்றி நமக்காயிருக்கவேண்டும். அதாவது, இது என்ன தமாஷ் என்று கண்டு பிடிக்க வேண்டும்; அதே சமயத்தில் ஓர் அணாவையும் தோற்கக் கூடாது. இவ்வாறு முடிவு செய்துகொண்டேன்.

"சரி, இந்தா ஓர் அணா. கொடு உன் பத்து ரூபாயை" என்று சொல்லி, என் மணிபர்ஸிலிருந்து ஓர் அணாவை எடுத்துக் குழந்தையிடம் நீட்டினேன்.

தட்சணமே குழந்தை உள்ளே ஓடினாள். தன் புஸ்தக அடுக்குக்கிடையே ஒளித்திருந்த ஐந்தாறு காகிதத் துண்டுகளை எடுத்து வந்தாள். அவைகளில் ஒன்றை என்னிடம் நீட்டினாள். என்ன விநோதம்! உண்மையிலேயே அது ஒரு பத்து ரூபாய் நோட்டு! அழகான நோட்டு! அருமையான உறுதியான காகிதம்! நேர்த்தியான அச்சு! உண்மையான நோட்டுத்தான்; கள்ள நோட்டுஅல்ல. ஒருகாலத்தில் எங்கெங்கோ அநேக வரவு செலவுகளை நடத்தியிருக்கக் கூடிய நோட்டு. நாலைந்து வருஷங்களுக்கு முன்னே இந்த நோட்டைத்தான் இந்திய சர்க்காரின் விளம்பர இலாக்காதார் தேடிப் பிடித்து, புகைப்படம் எடுத்து, பத்திரிகைகளுக்கெல்லாம் அனுப்பினார்கள். 'சக்தி'யில் கூட நாங்களும் பிரசுரித்தோம். இது வேறொன்றுமல்ல; ஆக்கிர

மிப்புக்கு உள்பட்ட பர்மாவில் வழங்கி வந்த ஜப்பானிய நோட்டு.

ஆஹா! வாழ்வும் தாழ்வும் மனிதர்களுக்குத் தானா? பொருள்களுக்கும் தான் நேர்கின்றன. இந்த நோட்டுக்கு மட்டும் வாய் இருந்தால், என்னென்ன கதைகளைச் சொல்லி யிருக்குமோ! யாராருக்கு என்னென்ன நிலைமையில் எந்தெந்தப் பொருள்களை இது வாங்கித் தந்ததோ! எவ்வெம்மாதிரி பணப்பைகளில் குடி புகுந்ததோ! எப்படிப்பட்ட இருப்புப் பெட்டகங்களில் எத்தகைய துப்பாக்கி வீரர் புடை சூழக் காபந்தாய் வாழ்ந்ததோ! அப்படிப்பட்ட நோட்டு இன்று இதோ யாருமற்ற அநாதையாய், என் குழந்தையின் விளையாட்டு மனத்தைக் கவரும் சக்திகூட இல்லாமல் சீந்துவாரற்றுக் கிடக்கிறது!

இந்த 'அக்கிரம, அநியாய ஜன நாயகத்தின் பரம சத்துருவான, அயோக்கிய, ஆக்கிரமிப்பு' ஜப்பானின் பத்து ரூபாய் நோட்டுத்தான் இவ்விதம் இன்று ஒன்றுக்கும் உதவாத குப்பைக் காகிதமாயிற்று. பூலோகத்திலேயே ஜனநாயக ஸ்தாபிதத்துக் காகப் பெரும்பாடு பட்டு மகத்தான சுதந்தர யுத்தத்தை நடத்தி ஜய பேரிகை கொட்டி விஜயக்கொடி நாட்டிய நம்முடைய சர்க்கார் நோட்டுகளாவது அத்தனையும் நிலைத்துவாழ முடிந்ததா? அவைகளிலும், 'ஜெண்டில்மென்' நோட்டுகள் - அதுதான் 500 ரூபாய்க்கு மேற்பட்ட நோட்டுகளைச் சொல்லுகிறேன் - இன்று மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கிக்கொண்டு கிடக்கின்றன. வைத்தியர் கைவிட்டு விட்டார். சில தினங்களில் அவை அடியோடு புதைந்துவிடும். அந்த நோட்டுகள் செலாவணி யிழந்து விட்டன. அவைகளை வைத்துக் கொண் டிருப்பவர்களில் பலர் இன்று திருடர்களைப்போல் தவிக்கிறார்களாம்; அவர்களில் குற்றம் செய்தவர் எத்தனை பேரோ, செய்யாதவர் எத்தனை பேரோ—அதை ஆண்டவனே அறிவார்.

அடடா! இந்த ஆயிர ரூபாய் நோட்டுகளெல்லாம் திடீரென்று ஒரு நாள் வெற்றுக்காகிதம் ஆகி விட்டன என்று கேட்டவுடனே, நம்மில் எத்தனை பேர் என்ன ஆனந்தம் அடைந்தோம்! ஆனால், நம்முடைய ஆனந்தத்தை யெல்லாம் ஒன்றாய்த்திரட்டி ஒரு தராசின் ஒரு தட்டிலே போட்டு, மதிப்பிழந்த நோட்டின் சொந்தக்காரர்கள் அடைந் திருக்கக் கூடிய திரண்ட துயரத்தையெல்லாம் மறுதட்டிலே போட்டுப் பார்த்தால் முள்முனை கோணுதிருக்குமா அல்லது எந்தப் பக்கம் கோணியிருக்கும் என்று நான் அறியேன். என்றாலும், 'அப்படி அடி கள்ள மார்க்கட்டை. அது விழுந்தது; தொலைந்தது' என்று மட்டில் நாம் சந்தோஷப் பட்டோம்.

இந்த ஆயிர, பதினாயிர ரூபாய் நோட்டுகள் மதிப்பிழந்தவுடனே, கள்ள மார்க்கட் பிரபுக்கள் பலர், அந்த நோட்டுகளை எரிப்பதா, புதைப்பதா என்று யோசித்தார்களாம். அப்போது தான் எனக்குக் கழுதை பற்றி ஞாபகம் வந்தது.

கள்ள மார்க்கட்டுக்காரர்கள் என்ன செய்தார்கள்? அவர்களின் நோக்கம் என்னவாயிருந்தது? நொடியிலேயே ஆயிரம், பதினாயிரமாய்ச் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் அவர்க

ளுடைய நோக்கம். ஜனங்களுடைய துயரத்தையும் துன்பத்தையு மெல்லாம் தாங்கள் காசாக்கிக் குபேரர்களாக வேண்டும் என்ற ஒன்றுதான் அவர்களின் ஆசை. ஆனால், அது எதற்காக? 'உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்.' நொடிக்கு ஆயிரம், பதினாயிரமாய்ச் சம்பாதித்தார்களே, அவர்கள் மட்டும் வேளை யொன்றுக்கு நானூறு நாழியா தின்றார்கள்? நாலாயிர முழம் தான் உடுத்தினார்களோ? இருட்டறையில் புகுந்தாவது எதற்காக ஆயிரம், பதினாயிரமாய்க் கொள்ளை யடிக்க வேண்டும்? நானும் நீங்களும் ஒரு வேளைக்கு உயர்ந்தது ஒன்றரை ரூபாய் ஆகாரம் சாப்பிடுவோம். இந்தக் கள்ள மார்க்கட்டுக்காரர், நூறு ரூபாய் ஆகாரம் சாப்பிட முடியுமா? (அதாவது, சாதாரண நிலைமையில், இந்தக் கள்ள மார்க்கட்டுக்காரர்களாலும், பணப் பெருக்கத்தாலும் சிருஷ்டியாகக் கூடிய அசாதாரண அபாய நிலைமையில் அல்ல.) 'ஏதோ பதினாயிரம் பதினாயிரமாய்ச் சாதித்தோம். தின்றொழித்தோம்' என்றாலும் ஒரு திருப்தி உண்டு. அந்தக் காரியம் இவர்களால் முடியாது. ஒரு பிராணியால் முடியும். அதுதான் கழுதை.

கழுதை மகா உயர்ந்த பிராணி. சீதளாதேவியின் வாகனம். கழுதைப் பால், குழந்தைக்கு அபூர்வமான ஆகாரமாம். கழுதைப் பால் என்றால், காதையறுத்து, பிறந்த குழந்தைக்குப் புகட்டக் கொண்டு வருவார்களே, அந்த உபசாரச் சரக்கைச் சொல்லவில்லை, உண்மையான பாலைத்தான் சொல்லுகிறேன். கழுதை பொறுமையைப் பூஷணமாய்க் கொண்டது. இப்பேர்ப்பட்ட உத்தமமான பிராணியை, ஆயிரம், பதினாயிரம் ரூபாய்களை வைத்துக் கொண்டு இன்னமும் கூடத் தவித்துக்கொண்டிருக்கக் கூடிய சகோதரர்களுக்கு, நான் மனப்பூர்வமாய்ச் சிபார்சு செய்கிறேன். 'ஐயோ! ஆயிரம் போகிறதே; பதினாயிரம் போகிறதே!' என்று புலம்பாதீர்கள். அவைகளை நீங்கள் எரிக்கவும் வேண்டாம்; புதைக்கவும் வேண்டாம். உங்கள் பெரிய பெரிய நோட்டுகளில் எத்தனை ஏழைகளை அடித்துச் சுவறிய ரத்தம் ஊறிக் கிடக்கிறதோ! 'கொன்றால் பாவம்; தின்றால் போச்சு' என்பார்கள். அவைகளை நீங்கள் தின்ன முடியுமானால் நலம். உங்களால் முடியாவிட்டால், அந்த உத்தமமான பிராணி ஒன்றைப் பிடித்து, அதற்கு நிவேதனம் செய்து விடுங்கள். ஒரு பிடி நோட்டுகள் - ஆயிரமா யிருந்தாலும் சரிதான்-பதினாயிரமாயிருந்தாலும் சரிதான், அதற்கு ஒரு வாய் உணவாகும். 'நேற்று நம்முடைய மூன்றுவேளை ஆகாரம் முப்பது லட்சரூபாய்' என்று பெருமை பேசக்கூடிய கழுதை ஒன்று இருக்குமானால், அதுவே உங்களைவிட நாட்டுக்கு அதிகப் பெருமை தரக்கூடியதா யிருக்கும்.

✲

அடிமைப் பணம்: பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் வாஸ்தவமான மனிதன். பணத்தை எப்படி உபயோகிக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் மனிதர்கள் என்ற பெயருக்கு அருகரல்லர்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

பஞ்சப் பிணி

கிருஷ்ணன்

நாட்டில் நாளும் உணவு நெருக்கடி தீவிரமாகி வருகிறது. இதுவரை என்றுமே கண்டிராத பஞ்சம் இந்தியாவை எதிர் நோக்குகிறது. வற்கெனவே அமுலிலிருந்து வரும் பங்கீடு முறை அதி தீவிர மாக்கப்பட்டு விட்டது. மக்களிடையே ஆழ்ந்த மனக் கசப்பு. செயலற்ற நிலையில் அவர்கள் துயரத்தைத் தணிக்க ஒரு வழியுங் காணோம். தலைவர்கள் மனம் புழுங்குகிறார்கள். சர்க்காரோ கையைப் பிசைகிறது. நாடெங்கும் கலவரமும் துப்பாக்கிப் பிரயோகமும் அதிகரித்து வருகின்றன.

பருவ மழை பொய்த்து விட்டது, புயலும் சேர்ந்து கொண்டது. பயிர் பாழாகி, விளைவும் வீழ்ந்து விட்டது. இந்த வருஷத்தில் நாடு முழுவதிலும் 30 லட்சம் டன் தானியம் துண்டு விழுவதாகக் கணக்கெடுத்திருக்கின்றனர். இதில் சென்னைக்கு மட்டுமே 10 லட்சம் டன் வேண்டியிருக்கிறது. தற்போதுள்ள பங்கீடு முறை தொடர்ந்து அமுலிலிருக்க வேண்டுமானால், மொத்தத்தில் உணவு நிலைமை படுமோசமாக இருக்கிறது என்பதைச் சர்க்கார் உள்படச் சகலரும் ஒப்புகின்றனர்.

வங்கப் பஞ்சத்துக்குக் காரணம் சர்க்காரின் அசட்டைப் போக்குத்தான். இன்று நம்மை வாட்டி இருக்கும் பஞ்சத்துக்குக் காரணம் சர்க்கார்தான் என்று சொல்வதற்கில்லை. உணவு நெருக்கடிக்குக் காரணம் என்ன? அது எப்படி வந்தது? என்ன நிலையில் இருக்கிறது? பரிகாரத்துக்கு வழி என்ன?

"இன்றைய நெருக்கடிக்கு, பஞ்ச நிலைக்கு, பிரிட்டனே பரிபூரணப் பொறுப்பாளி" என்று ஸ்ரீ ஆஸப் அலி அஸெம்பிளியில் கூறினார். உண்மையில் விவசாயம் சம்பந்தமாக அரசாங்கம் காட்டி வந்துள்ள அலட்சியமே ஓரளவுக்கு நாட்டின் விவசாயச்சீர்கேட்டிற்குப் பொறுப்பாகும். இந்தியா பூரண விவசாய நாடு. தேவைக் கதிகமாக உற்பத்தி செய்துவந்த இந்நாட்டில் துணுக்குறத் தக்க அளவில் துண்டு விழுவதென்றால், அதைச் சாதாரணமாக எண்ணிவிடுவதற்கில்லை. 1880-ல் இந்தியாவில் தேவைக் கதிகமாக 50 லட்சம் டன் தானியம் மீதமிருந்தது. இன்று?

நாட்டின் விவசாயத்தின் சமீப கால சரித்திரத்தைச் சிறிது கவனிப்போம். ஒரு விஷயம் பிரதானமாகத் தெரிகிறது. தானிய விளைச்சல் நாளடைவில் தொடர்ந்து குறைந்து கொண்டே வந்திருக்கிறது. இதற்கு ஜனத்தொகை அதிகரிப்பும், விவசாயத்தில் அளவுக் கதிகமாக மக்கள் ஈடுபட்டதும் முக்கிய காரணமாகும்.

1909 முதல் 1939 வரையுள்ள முப்பது வருஷத்தில், உலக அரிசி உற்பத்தி ஓர் ஏக்கராவுக்கு எந்தெந்த அளவில் ஏறி இறங்கியுள்ளது என்பது பற்றி மிஸ்டர் டபிள்யூ. பர்ன்ஸ் என்பவர், அவர் 1944-ல் எழுதிய "இந்தியாவில் விவசாய அபிவிருத்திக்கான வழிகள்" என்ற ஆராய்ச்சி

நூலில் சில புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார் :

பர்மாவும் இந்தியாவும் சேர்ந்து, ஏக்கராவுக்கு 982 பவுண்டிலிருந்து, வருஷா வருஷம் குறைந்துகொண்டே வந்து, 1939-ல் 728 பவுண்டுதான் உற்பத்தி செய்கிற நிலைக்கு வந்துவிட்டன. 1939-ல் பர்மாவின் உற்பத்தி ஏக்கராவுக்கு 959 பவுண்டு. ஜப்பானுடைய விளைச்சல் 1,000 த்திலிருந்து 1,461 வரை கூடி வந்திருக்கிறது. அமெரிக்கா, 1,827-ல் இருந்து 2,276 வரை கூடியிருக்கிறது.

பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் போன்ற வியாபாரப் பயிர்களுக்கு உலகச் சந்தையில் கிராக்கி ஏற்படவும், விவசாயிகள் நெல் பயிர் செய்வதைக் குறைத்து, மேற்படி வியாபார விளை பொருள்களை அதிக அளவில் சாகுபடி செய்யலானார்கள்.

	1911—12	1940—42
நிலக்கடலை :	5,00,000 டன்.	20,00,000டன்
பருத்தி :	4,00,000	7,00,000
கரும்பு :	24,00,000	45,00,000

1910—1938 இந்தக் காலத்தில்

பஜ்ரா	— 25%
பார்லி	— 57%
ஜோவர்	—110%

அதிகரித்திருக்கையில்—

கோதுமை — 4·5%

அரிசி—3·5% தான் அதிகரித்திருக்கின்றன.



சென்னை சர்க்கார் ஆலோசகர் சர். எஸ். வி. ராமமூர்த்தி

அரிசி விளைச்சல் சமீப காலமாக ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்து வந்துள்ளது. 1934-35-ல் சுமார் 29,54,000 டன் அரிசி இறக்குமதி செய்ய நேர்ந்தது. அடுத்த வருஷங்களில் இத்தொகை அதிகரித்தே வந்திருக்கிறது.

ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது என்று கண்டோம். 1872-ல் இருபது கோடி எண்பது லட்சமாக இருந்த ஜனத்தொகை 1941-ல்

முப்பத்தெட்டுக் கோடி தொண்ணூறு லட்சமாக—ஏறக்குறைய இரண்டு மடங்காக — பெருகி இருக்கிறது. ஜனத்தொகை அதிகரித்ததற்கு ஏற்றாற்போல், உணவுப் பொருள் உற்பத்தியும் பெருகியிருக்க வேண்டும். அது தான் இல்லை.

இன்னும், 1901-ல் உழவு நிலம் தலைக்குச் சராசரி 1·2 ஏக்கராவாக இருந்தது 1941-ல் தலைக்குச் சராசரி 1 ஏக்கராகக் குறைந்து போய் விட்டது.

உணவு உற்பத்தி, ஜனத்தொகை நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதல்:

	1930—31	1940—41
ஜனத்தொகை	100	115
உணவுப் பொருள் உற்பத்தி	100	93

இந்தப் பத்து வருஷங்களில் ஜனத் தொகை 15 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால், உணவுப் பொருள் உற்பத்தியோ 7 சத விகிதம் குறைந்து போயிருக்கிறது.

யுத்தத்தால் விவசாயத்திற்கு அமோக ஆதரவு ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அதன் குண்டோதரத் தேவைகளுக்கு நாட்டின் விளை பொருள் எல்லாம் கொண்டு போகப் படவே, நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமான அளவு கிடைப்பதும் ஆபத்தாகி விட்டது. தானிய வகைகள் "யானை விலை குதிரை விலை" ஏறி விடவும், பதுக்கலும், கள்ள மார்க்கெட்டும், கொள்ளை லாபமும் தலை தூக்கி விட்டன. குறைந்த சம்பளக்காரர், ஏழைகள் பாடு மிகத் திண்டாட்ட மாகிவிட்டது. உயிர் வாழ உணவு வாங்கப் பணமின்றிப் பல்லாயிரவர் நாடெங்கும் பரிதவிக்கலாயினர். விளைவு? வங்கப் பஞ்சம், கேரளத்தில், ஆந்திரத்தில் பஞ்சம். பல லட்சம் மக்கள் செத்து மடிந்தனர். வங்கப் பஞ்சம் உயிர்களை மாய்த்து ஊரைப் பிணக்காடாக்கியது. அதன் கோர நாசத்தினின்றும் நாடு இன்னும் தலை தூக்க வில்லை. இந்நிலையில், நாட்டில் மீண்டும் பஞ்சம் ஏற்பட விடுவது மிகப் பாதகமாகும். அதன் விளைவுகள் எவ்வளவு கொடுமையாக விருக்கும் என்று யாரும் கூறுவதற் கில்லை.

உணவு நிலைமை நெருக்கடி பற்றி மத்திய சட்ட சபையில் நீண்ட விவாதம் நிகழ்ந்தது. வைஸ்ராய் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து மக்களின் துயரத்தை அறிந்து கொண்டார். கவர்னர்கள் மகாநாடு கூட்டிப் பிரச்னையை விவாதித்தனர். உணவுத் தூதுக் கோஷ்டி வேறு யூனோ கவுன்சிலிடம் முறையிடப் போகிறது.

அரிசி ரேஷனை 16 அவுன்சிலிருந்து 12 அவுன்சாகக் குறைத்து விட்டனர். நிலக்கடலை, சர்க்கரை வள்ளி, இவற்றை அதிகம் உபயோகிக்க வேண்டும் என்று கூறி விட்டனர். இந்த உத்தரவும் நம் மாகாணத்தில் பிப்ரவரி 17-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்து விட்டது. நாட்டின் இதர மாகாணங்களிலும் இம் மாதிரியே பங்கீடு குறைக்கப்பட் டிருக்கிறது.

நம் மாகாணத்தில் பங்கீட்டுக் குறைப்பைத் தொடர்ந்து, சர்க்கார் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. உணவுத் தானி

யங்கள் பங்கீட்டுக் குறைப்பு, சுபிட்சப்பிரதேசங்கள் உள்பட, மாகாணம் பூராவும் பங்கீடு விஸ்தரிப்பு, மாகாணம் பூராவிலும் மீதப்படும் தானியங்களைக் கொள்முதல் செய்தல், இவற்றை உடனே செய்ய வேண்டும். ஒழுங்காகவும் செய்யவேண்டும். காந்திஜி கூறுவதுபோல் எந்த வித நடவடிக்கையும் எடுப்பதன் முன் நம் நாட்டினர் மனத்திலும் வெளி நாட்டினர் மனத்திலும் நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்துவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதே சர்க்காரின் முதல்வேலை—முக்கியமான வேலையும்கூட. நிலைமையைச் சமாளிக்கக் காந்திஜி எட்டு அம்சத் திட்ட மொன்றை வெளியிட்டிருக்கிறார். சர்க்காரோடு பொது மக்களும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்று அதில் கூறியுள்ளார். பொது மக்களின் அபிப்பிராயத்தைச் சர்க்கார் மதித்து நடக்கவேண்டும் என்று வற்புறுத்துவதோடு "பொறுமையும் துணிவும் காட்டாவிடில் நாசம் நிச்சயம்'' என்றும் எச்சரித்துள்ளார். சாதாரண ஜனங்களைப் போல், ராணுவத்தினரும் உணவைக் குறைக்கவேண்டும் என்று கூறியுள்ளார். அவர் திட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்து நிலைமையைச் சீர்திருத்துவது சர்க்கார் கடமை.

தானியங்களைக் கொள்முதல் செய்வது, விலை நிர்ணயிப்பது, இவ் விஷயங்களில் விவசாயிகளின் உரிமைகளை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும். கொள் முதல் விலை நிர்ணயிக்கும் போது, விவசாயிகளின் (நிலச்சுவான்தார்களின்) இதர வாழ்க்கைத் தேவைகளின் விலைவாசிகளை அநுசரித்தே விலையை நிர்ணயிக்க வேண்டும். பதுக்குதல், கள்ள மார்க்கெட், கொள்ளை லாபம், அதிகாரிகளிடை ஊழல், லஞ்சம் இவற்றைக் கடுமையாக அடக்கி, சர்க்காருக்கும் மக்களுக்குமிடையே சவுஜன்யமான நிலையை ஏற்படுத்துவது மிக முக்கியமானது.

பங்கீட்டைக் கண்டிப்பாய் அமுல் நடத்துவதால் மட்டும் நிலைமையைச் சமாளித்துவிட முடியாது. துண்டு விழுந்து போன பகுதித் தானியத்தை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாகவேண்டும். "உடனடியாகப் பெருவாரியான அளவில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதன் மூலமே மோசமான உணவு நிலைமையை ஒருவாறு சமாளிக்க முடியும்'' என்று ஸ்ரீ மஸானி கூறியுள்ளார். எங்கிருந்து இறக்குமதி செய்வது? உலகம் முழுவதுமே இன்று பஞ்சத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. தேவைக் கதிகம் படைத்துள்ள நாடுகள் — சுபிட்ச நாடுகள் — அனேகமாக இல்லை என்னலாம். யுத்தத்தால் அழிவுற்ற ஐரோப்பாவின் நிலை மிகவும் பரிதாபகரமாக விருக்கிறது.

தற்போது, சயாமில் தான் அதிகப்படி அரிசி யுள்ளது. ஆனல், அதை இந்தியா போன்ற இதர நாடுகளுக்கும் பங்கிட்டாக வேண்டும். இந்தியாவிற்கு என்ன கிடைக்கும் என்பதை ஐக்கிய உணவு போர்டே தீர்மானிக்கும். அது அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து பிரதிநிதிகளைக் கொண்டது. ஆங்கிலோ அமெரிக்கரின் ஆதரவெல்லாம் ஐரோப்பா மேல் நிற்கிறது.

சந்தனம் —
குளிர்ந்த மணம்
ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்களில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே. ஜுரத்தாலேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய ஔஷதமாகவன்றி சோர்வுற்ற அவயவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. குறைவற்ற தன்மையை முன்னோர்கள் சந்தனத்திற்கு ஒப்பிடுவார்கள். அதே சந்தனம் இன்று மைசூர் சந்தன சோப் என்னும் நாகரீக உருவத்தில் சரீரத்தின் குளிர்ச்சிக்கும், சோர்வையகற்றுவதற்கும் பயன்பட்டு வருகிறது.
மைசூர்
சந்தன சோப்
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைசூர் கவர்ண்மெண்ட் தயாரிப்பு.
B·I·Tm

IODISAL

அயோடிசால்

-:(ரத்த சுத்தி மருந்து):-

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனுல் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்ட சூலைகள், வாதம், வாயு, மேக ரோகங்களையும் தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, திரேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து மலப்ரவிர்த்தியை ஒழுங்காக்கி ரத்தவிருத்தியை உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

THE SOUTH INDIAN Mfg. Co., MADURA

மதராஸ் நகர், நெல்லூர், ஸீடட், விசாகப்பட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :
ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், P. T. மதராஸ்

குண்டூர், கோதாவரி, கிருஷ்ண ஜில்லாக்களுக்கும், நிஜாம் சமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள்: சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்: சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி.

உங்களுடைய சுவாசக்குழாய்களுக்கு
உயர்ந்த குணமளிக்கும் மருந்தே நல்லது!

உலக உணவு நிலையைப் பரிசீலனை செய்யக் கூடிய யூனேவின் பொதுக் கூட்டத்தில் இந்தியத் தூதுக் கோஷ்டியின் தலைவரைத் தவிர, இந்தியாவின் நிர்க்கதியான நிலையைப் பற்றி யாரும் மூச்சு விடவில்லை. "பஞ்சத்தால் அடிபட்ட ஐரோப்பியப் பிரதேசங்களுக்குத் தேவையான உதவி யனைத்தும் தட்டாது செய்வோம்" என்ருர் கானடாப் பிரதிநிதி.

யுத்தத்தின் போது விரோதிகளிடம் சிக்கித் திணறிய நாடுகளின் துயரங்களுக்கு அனுதாபங் காட்டிப் பேசினர் ருஷியப் பிரதிநிதி.

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெவினே, எதிலும் பட்டுக் கொள்ள வில்லை.

"இந்தியாவை எதிர்நோக்கும் அவகேட்டைத் தடுக்கப் பிரிட்டன் இயன்றதைச் செய்யும்" என்றவர், தொடர்ந்து "ஆனல், இன்றைய நிலையில் நாம் செய்யக் கூடியது மிகக் கொஞ்சம்தான்" என்று கையை விரித்து விட்டார்.

யூனே அசெம்பிளியில் திரு. காட்பிரே நிக்கல்சன் என்பவர் சில ருசிகரமான தகவல்களைத் தந்தார். 1946 முதல் மூன்று மாதங்களுக்குக் குயூபாவிற்கென்று 60,000 டன் அரிசி ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆனலும், அந்நாடு அரிசி ரேஷன் கொண்டு வர மறுத்து விட்டது. அதோடு, உள்ள கோட்டாவைப் பின்னும் அதிகரிக்க வேண்டும் என்று வேறு அதன் பிரதிநிதி கூச்சலிட்டாராம்!

நீண்ட நாளாக இந்தியாவில் அரிசிப் பங்கீடு கண்டிப்பான அமுலில் இருந்து வருகிறது. இருந்தும், "வெளி உதவி வரும் வரை இன்னும் சிறிது கஷ்டம் அனுபவியுங்கள்" என்கிறார்கள். உதவி அளிக்கும் விஷயத்திலும் தென்கிழக்காசிய வட்டாரத்திற்கே பிரதான்யம் அளித்துள்ளனர். இந்தியா அறவே புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவைப் பற்றியே அவர்கள் அதிகக் கவலைகொண்டிருப்பது நன்கு தெரிகிறது. ஐரோப்பியப் பஞ்ச நிலை பற்றி பிப்ரவரி 2-ஆம் தேதி ரேடியோ மூலம் பேசிய யு. எஸ். உதவிக் காரியதரிசி, "ஐரோப்பாவில் உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்க நாம் உதவ வேண்டு மென்பது வெறும்ஜீவகாருண்ய மட்டுமல்ல, அது நம் தேசிய நலனைப் பாதிக்கும் விஷயமும் ஆகும்" என்ருர். ஐரோப்பாவில் "ஜனநாயகமும் அமைதியும்" நிலை நாட்டுவதில் இவர்களுக்கேன் இவ்வளவு கவலை? ருஷ்யாவின் செல்வாக்கு அங்கே ஓங்கவிட்டுவிடக் கூடாதென்பதே அவர்கள் நோக்கம் எல்லாம். டொனல்டு கார்டன் என்னும் கனேடிய யுத்த கால—விலைகள் வியாபார போர்டின் தலைவர் — அதிகாரியும் ராஜிய அமைதி நிலைப்பதற்கும், பொருளாதார வியாபாரத் துறையில் பெரும் லாபம் அடைவதற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு உதவுவது அத்தியாவசியமாகும் என்று பேசுகிறார்.

இந்தியாவின் நிலைமையும் மோசமானது, கவலைக் கிடமானது. அதற்கு உடனடியாக உதவுவது மிகவும் இன்றியமையாதது! என்பதையும், "இந்தியாவைப் புறக்கணித்து விட்டு, உலகில் அமைதியோ சமாதானமோ நிலை நாட்டிவிடலாம் என்று நினைப்பது வீண் பிரமையே"

என்னும் உண்மைகளையும் யூனோ நன்கு உணருமாறு செய்ய வேண்டும். நமது தேவையின் அவசியத்தை வற்புறுத்தி, உடனடியாகச் சப்ளைகளைப் பெற்ருக வேண்டும்.

இதற்கெல்லாம் தற்போதுள்ள சர்க்காரோ, அதன் தூதுக் கோஷ்டிகளோ லாயக்கற்றவை. இந்தியாவின் நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறிக் தேவையான உதவிகளை உடனடியாகப் பெற்றுவர மக்களின் பிரதிநிதிகளாலேயே, உண்மையான தேசிய சர்க்காராலேயே முடியும். ஆகவேதான், காந்திஜியும் உணவு நெருக்கடியைச் சமாளிக்க முதலாவதாகத் தேசிய சர்க்கார் ஏற்பட வேண்டும், நிர்வாகம் ஜனப் பிரதிநிதிகளிடம் மாற வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார்.

ஆகவே, அதிகாரத்தைத் தேசியத் தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, யூனோ கவுன்சிலில் இந்தியாவின் தேவைகளுக்கான உதவியைப் பெற்றுத் தந்து, நாட்டின் நிலைமையைச் சீர்திருத்த உதவுவது பிரிட்டனின் பொறுப்பாகும், கடமையாகும். ஆம், உண்மையில் அவ்வாறு செய்வது பிரிட்டனின் தார்மீகப் பொறுப்பாகும். அந்நாடு தன் பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுவதற்கில்லை.

மனிதனுக் கில்லா விடினும், என்ருயினும் கடவுளுக்குக் கட்டாயம் தன் செய்கைகளுக்குப் பிரிட்டன் தக்க பதில் கூறியே ஆக வேண்டும்.

✲

உணவுப் புதிர்

1. மனித தேகத்துக்குத் தேவைப்படுகிற மிக முக்கியமான மூன்று உலோகங்கள் யாவை?

2. மாங்கனியி லிருந்து பெரிய அளவில் கிடைக்கிற இரண்டு உயிர்ச் சத்துக்கள் யாவை?

3. பி — உயிர்ச் சத்து எதில் அதிகமா யிருக்கிறது? பச்சை அரிசியிலா? புழுங்கல் அரிசியிலா?

4. வைட்டமின் (உயிர்ச் சத்து) என்ற பெயரை யார் முதலில் கண்டு பிடித்தார்?

5. ஓர் அவுன்ஸ் அரிசியில் எத்தனை கனலிகள் உண்டு?

6. "பம்பாய் வாத்து" என்பது ஒரு மீனா, பட்சியா, காய்கறியா?

7. பால், ஆரஞ்சுப்பழ ரசம், மிட்டாய், காட்லிவர் எண்ணெய், இவைகளில் கைக் குழந்தைகளுக்கு உகந்தவை யாவை?

8. வெண்ணெய்க் கொழுப்பு எதில் அதிகமா யிருக்கிறது? பசும் பாலிலா, எருமைப் பாலிலா?

— நூட்ரிஷன்

புதிருக்கு விடை

1. கால்சியம், பாஸ்பரஸ், அயம். 2. உயிர்ச் சத்து ஏ-யும் பி-யும். 3. புழுங்கல் அரிசியில். 4. ஃபங்க் என்பவர். 5. சுமார் 100 கனலிகள். 6. இது ஒரு மீன். 7. பால், ஆரஞ்சுப்பழ ரசம், காட்லிவர் எண்ணெய். 8. எருமைப் பால்.

வாழ்வது எப்படி ?

அலெக்ஸிஸ் காரெல்

சும்மா உயிர் வாழ்ந்தால் மட்டும் போதாது. வாழ்வதில் ஒரு தனி மகிழ்ச்சியும் இருக்க வேண்டும். மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு உடல் நலம் இருந்தாக வேண்டும். ஆனால், மெய்யான உடல் நலத்தைத் துய்ப்பவர்களும், அதை அடைகிற வழியை அறிந்தவர்களும் வெகு சிலரே. நோய் நொடியில்லாமல் இருந்துவிடுவது தான் உடல் நலம் என்று நாம் நினைத்து விடுகிறோம்.

ஒரு விஷயத்தை நாம் மறந்து விடுகிறோம். திண்மையோடு செயல் புரிவதும் தன்னம்பிக்கை கொண்டிருப்பதுந் தான் ஆரோக்கியமாயிருக்கிற நிலை. நாம் ஆரோக்கியமா யிருந்தால் தான் நமக்குப் போராடுகிற சக்தியும், காதல் புரியவும் சிருஷ்டி செய்யவும் நம்மைத் தூண்டுகிற சக்தியும் உண்டாகும். வாழ்க்கையானது இதழ் விரித்துப் பொங்கி, நாம் இன்பத்தை நுகர்வதற்கு நமக்கு ஒப்பற்ற தகுதியை அளிக்கிறபோது தான் நாம் ஆரோக்கியமா யிருக்கிறோமென்று கொள்ளலாம்.

உணவால் உடல் வளர்கிறது. பயிற்சியால் உடம்பு கட்டு மஸ்தாகிறது. நல்ல சிந்தை சிந்தையால் மனத்தில் அமைதி நிலவுகிறது. இவை மூன்றாலும் வாழ்வு இன்பகரமாகிறது. இது நம் எல்லாருக்கும் தெரியும். ஆனால், இவற்றை அடையும் சரியான வழிதான் நமக்குத் தெரிவதில்லை. பிரபல விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவரும், டாகட்ருமான ஆசிரியர், கண்காணாத மனிதன் என்ற நூலில் இதற்கு வழி சொல்லுகிறார், அந்த நூலில் ஒரு பகுதி இது.

ஆரோக்கிய மென்றால், அதில் உடல் ஒன்றுமட்டும் அடங்கி விடாது. மனமும் அதில் சேர்ந்ததே. நோய் அணுகாமல் அதை எதிர்த்து நிற்பது மட்டும் போதாது. களைப்படையாமல் உழைக்கிற சக்தியை உடம்பு பெற்றிருந்தால் மட்டும் போதாது. மனம், சமநிலையில், நிதானமாக இருந்து வரவேண்டும். ஆத்ம பலம் இருக்கவேண்டும்.

நல்ல தேக சுகத்தைப் பெற்றிருக்கிறவர்கள் அதிர்ஷ்டசாலிகள் தான். உலகப் போர் நடந்த காலத்தில் எடுத்த புள்ளி விவரங்களிலிருந்து, அமெரிக்காவில் ராணுவ சேவையில் சேர்ந்தவர்களில் நூற்றுக்கு ஐம்பத்து மூன்றுபேர் நல்ல சுகத்துடன் இருந்ததாகத் தெரிய வருகிறது. 1930-ம் வருஷத்தில், நாலரைக் கோடி அமெரிக்கக் குழந்தைகளில், ஒரு கோடிப் பேர் சுமாரான ஆரோக்கிய நிலையில்கூட இருக்கவில்லை. கவனிக்காமல் விட்டு விட்டதால், இவர்களில் பலருக்குப் பல் சொத்தை விழுந்திருந்தது, தொண்டையில் சதை வளர்ந்திருந்தது, உள் நாக்கும் வளர்ந்திருந்தது. மேலே சொன்ன கணக்கில் இவர்கள் தொகை சேரவில்லை. இது உதிரிப் புள்ளி. ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். நாகரிக மடைந்த நாடுகளில் உள்ள வயது வந்த மக்களில், கிட்டத்தட்டப் பேர் பாதிப் பேர் நோயால் வாடுகிறார்கள். நோயினின்றும் இவர்கள்

பூரண விடுதலை பெற்று விட வில்லை.

முன்பு என்றிருந்ததையும்விட, இன்று நவீன மனிதனுக்குப் பூரணமான ஆரோக்கியம் இருந் தாகவேண்டும். ஏன்? முன்பு என்றும் கண்டிராத பரபரப்பு, இரைச்சல், நம்முடைய சமூகச் சூழ்நிலையில் காணுகிற திகைப் பூட்டும் சிக்கல்கள், ஆகியவற்றை நாம் தாக்குப் பிடித்து நின்றாக வேண்டும். தொழில் துறைகளிலும் சரி, நம்முடைய வீடுகளிலும் சரி, நமக்கு அசாத் தியமான தொல்லைகள் இருக்கின் றன. நரம்புத் தளர்ச்சி உண்டா கிற அளவுக்கு நாம் அலுப் படைந்து போகிறோம். ஆகவே, மருத்துவ சாஸ்திரம் அடிக்கடி கற்பிப்பது போல், ஆரோக்கியம் என்பதை அதன் உடற் கூறு சம்பந்தப்பட்ட அளவில் மட்டும் நாம் கவனிக்கக் கூடாது. பூரண வளர்ச்சியடைந்த மனிதனுக்கு மன ஆரோக்கியம், ஆத்ம ஆரோக்கியம் இரண்டும் கட்டா யம் இருந்தாக வேண்டும்.

தனித்தனி உறுப்புக்களைக் கொண்டு அமைந்ததே நம் முடைய உடல்; ஆத்மா வேறு, இது வேறு, இரண்டும் தனிப் பட்டு நிற்பவைகள் என்ற தப் பான நம்பிக்கையை உதறித் தள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. ஒரே அணுப் பிண்டத்தில் அமைந்த ஒரு நுண்ணிய முட்டையிலிருந்து நம்முடைய தேகம் உண்டாகி யிருக்கிறது. இந்த அணுப் பிண்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிகிறது. பிரிந்துபோன ஒவ்வொரு அணு வும், மேலும் மேலும் பிரிந்து கொண்டே செல்கிறது. உடம்பு பூரணமாக வளர்ந்து விடும் வரைக்கும், இப்படிப் பிரிந்து பிரிந்து போகிற செயல் நிகழ்கி றது. இவ்வாறாக, தனித்து ஒரே பிண்டமாயிருந்த முட்டை, பற் பல முட்டைகளாகப் பல்கிப் பெருகுகிறது. வயது வந்து, முதிர்ச்சி யடைந்த தேகத்தில், ஆரம்பத்தில் இருந்த முட்டை யின் ஒருமைப் பாடு கடைசி வரையில் நெடுகிலும் இருந்து வருகிறது. உறுப்புக்களும், உணரும் தன்மையும் இணைத்துச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. எப்படி? உணர்ச்சி நார்களும், உணர்ச்சி நார்கள் சேர்ந்து கூடும் சந்திப்பு இடங்களும், மிகப் பெரிய பின்னல் வேலை மாதிரி, உடல் பூராவும் பரந்து விரிந்து கிடக்கின்றன. ரத்தத் தில் சேர்ந்து, உறுப்புக்களுக்கு இயக்க சக்தி அளிக்கிற பிசிதப் பொருள்கள் நம்முடைய உட லெங்கும் இருக்கின்றன.

ஒவ்வொரு நாளமும் உடம்பின் பற்பல இடங்களுக்குச் செய்தி அனுப்புகிறது. இதைக் கொண்டு செல்லும் வேலை யாட்கள் போன்றவை இந்தப் பிரசித மருந்துப் பொருள்கள். இந்த வகையால் தான் உடலி லுள்ள உறுப்புக்கள் உணர்வு பெற்று இயங்குகின்றன.

இந்த மாதிரி, பல அம்சங்கள் இணைந்து ஒன்று பட்டுச் செய லாற்றி வரும்போது தான் ஆரோக்கியம் உண்டாகிறது. உறுப்புக்களின் தெம்பையும், ஓர் உறுப்புக்கும் இன்னோர் உறுப்புக்கும் உள்ள தொடர்பு நிலையையும் பொறுத்தே உடல் நலம் கூடவோ, குறையவோ செய்யும்.

உதாரணமாக, ரத்தக் குழாய் கள் இறுகிப் போய், அதனால் ரத்த ஓட்டம் குறைந்து விட்

டால், உடல் நலம் கெடுகிறது. இதைப் போலவே, கோபம், பயம், கவலை ஆகியவை, சிறு குடல், ஹிருதயம் இவை சம்பந்தப்பட்ட உணர்ச்சி நார்கள் வழக்கம்போல் சுயமாகச் செயல் புரிய முடியாமல் அவற்றைத் தடை செய்யும் போதும் உடல் நலம் கெடுகிறது.

மனிதனின் செயல்கள் ஏககாலத்தில் உடல் சம்பந்தமானவையாகவும், மனம் சம்பந்தமானவையாகவும் இருக்கின்றன, உடலும் ஆன்மாவும் ஒன்றே. தொண்டையிலுள்ள நாளம் சம்பந்தமான வியாதியோ, அல்லது மூளையில் கிளம்பும் கட்டியோ, அறிவு சம்பந்தமான அல்லது ஒழுக்க சம்பந்தமான மாறுட்டங்களை உண்டு பண்ணிவிடும். இதற்கு மாறாக, மன எழுச்சியின் தொல்லைகளால் குடல், ரத்தக் குழாய்கள் இவற்றிற்கு அடிக்கடி கேடு உண்டாகிறது. நல்ல உடல் அமைதியாய் வாழ்கிறது. அதன் இயக்கத்தை நாம் உணர்வதில்லை. எல்லா உறுப்புக்களுக்கும் உணர்ச்சி நரம்புகள் உண்டு. இந்த நரம்புகள் மூலம், தனித்தியங்கும் நரம்புத் தொகுதிகளுக்கு, முக்கியமாக மூளை உணர்ச்சியின் இருக்கைக்கு, அவை ஓசைப்படாமல் செய்தி அனுப்புகின்றன. உள்மனத்தின் இந்தச் செய்திகள் வாழ்விற்கு ஒளி ஊட்டுகின்றன. நோய் வருவதற்கு முன், அடுத்து வரும் தீங்கின் அறிகுறி உணர்ச்சியை அவை உண்டு பண்ணுகின்றன. ஆரோக்கியமான உறுப்புக்களினின்றும் அவை வந்தால், காரணம் கூற முடியாத சந்தோஷத்தை அவை நம்முள் பாய்ச்சுகின்றன; வாழ்வின்பத்தைத் தருகின்றன.

மனித உடலைப் பற்றிய அறிவு சிறிதும் இல்லாமல், வாழ்வை ஒழுங்குற நடத்துவது முடியாத காரியம். தனித் தனிப் பாடப் புத்தகங்களிலிருந்தோ, மருத்துவ நுண்ணறிவாளரிட மிருந்தோ இந்த அறிவை நாம் பெற்றுவிட முடியாது. அதைப் பெறுவதற்குப் பல புத்தகங்களைப் பரக்கப் படித்திருக்க வேண்டும். அல்லது தைரியமாகப் பொது அறிவைக் கொண்டு வைத்தியம் செய்து வருகிற டாக்டர்களிட மிருந்து அதைக் கற்கலாம்.

ஆனால், நாம் எல்லோரும் சில அடிப்படையான விஷயங்களை அறியவேண்டும். உடல் நலத்தைக் காப்பதற்கோ, அதைப் பெறுவதற்கோ, அறியவும், அறிந்தபடி நடக்கவும் கூடிய மன உறுதி இருந்தாக வேண்டும். உடல் நலம் என்பது பூராவும் உடலைப் பற்றியதே. அது டாக்டரிட மிருந்தோ மருந்து வியாபாரியிட மிருந்தோ விலைக்கு வாங்கும் பொருள் அல்ல. சலியாத கவனம், உழைப்பு இவற்றின் மூலமே அதனைப் பெறமுடியும்.

ஒரு கண்டிப்பான பொது விதியை நாம் ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டும். எல்லா விதமான விஷப் பொருள்களையும் நாம் ஒதுக்கிவிட வேண்டும். விஷங்கள், உள்ளுக்குள்ளேயிருந்தும் வரலாம், வெளியிலிருந்தும் வரலாம். வயிற்றில் கோளாறு வராமல், முக்கியமாக மலச் சிக்கல் வராமல், ஜீரணக் கருவியைக் கவனித்து வர வேண்டும். பல்லில் விஷக் கிருமிகள் சேராமல், பல்லைக் கவனித்து வர வேண்டும். அப்போது, உள்ளுக்குள்ளே யிருந்து விஷம் உண்

டாகாமல் தடுத்துக் கொள்ள லாம்.

வெளியிலிருந்து விஷம் உள்ளே புகாமல் தடுப்பது கடினம். சிக ரெட் பிடிப்பதை விட்டு விட வோ, சற்றுக் குறைக்கவோ செய்வதற்கு மிக்க மன உறுதி வேண்டும். அயர்ந்திருக்கும் போது, விருந்துண்பதற்கு முன் னர் அடிக்கடி மதுக் குடிக்கா மல் இருப்பதற்கு ஆழ்ந்த மன வலி வேண்டும். தற்கால வாழ் வில் வசிய முறைகளைத் தாராள மாக உபயோகிக்கிறார்கள். அனேக இடங்களில், தூக்க மின்மையைப் போக்க உபயோ கிக்கும் அம் முறைகளால் தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

சுற்றுப்புற நிலைமைகளைப் பயன் படுத்திக் கொள்ளவோ, அவற்றினின்றும் நம்மைக் காத் துக் கொள்ளவோ கூடிய நம் திறமைக்கு ஏற்ப உடல் நலமும் மாறுபடுகிறது. சூழ் நிலையில் ஏற்படும் மாறுதல்கள் உடல் சம் பந்தமான ஒரு தனித்த இயக் கத்தை, நிலைமைக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளும் திறமையை, ஆரம்பித்து வைத்து விடுகின் றன. உறுப்புக்களும், உணர்வு நார்களும், ரத்தமும், புதிது புதி தாக ஏற்படுகிற நிலைமைகளைச் சமாளித்துக் கொள்ள இந்த இயக்கம் உதவுகிறது. உதாரண மாக, வெளியில் உள்ள உஷ்ண நிலை அதிகரிக்கும் போது, தாமாக இயங்கும் யந்திர உறுப் புக்கள், நம்முடைய தேகத்தின் உள்ளுக்குள்ளே இருக்கும் உஷ்ண நிலை அதிகரிக்காமல் தடுக்கின்றன. நாம் ஒரு விரோதியை எதிர்க்கும்போது, கோபமானது சுரப்பிகளைத் தூண்டி, ரத்தத்தில் சில பொருள்களைச் சேர்க்கச் செய் கிறது. அவைகள், நாடி, ரத்த அமுக்கம், தாக்குதலுக்கோ தற் காப்பிற்கோ தசை நார்களுக்குத் தேவையான சர்க்கரைப் பொருள், இவற்றை அதிகரிக்கச் செய்கின்றன. இவ்வாறே, கிருமிகள் சதைப் பொருள்களில் சேர்ந்தால், அதனல் ஏற்படும் எதிர் உணர்ச்சி அந்தப் பொருள் களை அழித்து விடும்.

நிலைமைக்குத் தக்கபடி மாறிக் கொள்ளும் திறமை, நோய்களை ஒழிப்பதற்கும், உள் நிதானத் தைக் காப்பதற்கும் உடலுக்குப் பலம் தருகிறது. சூழ் நிலையில் தோன்றும் மாறுதல்களால் ஏற் படும் முட்டுக் கட்டையை அத ஞல் சமாளிக்க முடியும். தொடர்ந்த பயிற்சியால்—அதா வது, சூழ் நிலையை எதிர்த்துப் போராடுவதால், நிலைமைக்குத் தக்கபடி மாறிக் கொள்ளும் உறுப்புக்களின் சகிப்புத் தன்மை யும், தகுதியும் அதிகரிக்கின்றன. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் திறனைப் பொறுத்தே பெரும்பாலும் உடல் நலம் அமை கிறது.

புயல், மழை, பொசுக்கும் வெய் யில் இவை எல்லாம் தோல்மேல் நன்கு உறைக்க வேண்டும். இயற்கையோடு இயைந்து வாழ் வதற்கு, காலையில் வழக்கத்துக்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே எழுந்து, தோட்டத்தில் சுறு சுறுப்பாக உலாவுவதற்குச் சில திட்டமான முயற்சிகளும் வேண்டும்.

உண்பனவற்றில் கவனம் செலுத்துவதன் முக்கியத் துவத்தை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். புதுக் காய் கறிகள், பழவகைகள், தான்யங் கள், பால், மாமிசம் இவை கலந்த

கலப்பு உணவில் நல்ல சதை நார்கள் வளர்வதற்குத் தேவையான ரசாயனப் பொருள்கள் கிடைக்கின்றன. இதற்காக விலையுயர்ந்த மருந்துகளை வாங்கத் தேவையில்லை என்பதை நாம் அறிவோம்.

நமக்கு இவை தேவை என்று அறிந்தும், பச்சைக் கீரை, காய்கறி சேர்ந்த பச்சடியை நம்மில் எத்தனை பேர் உண்ணுமல் தள்ளி விடுகிறோம்? நம்மில் எத்தனை பேர் சர்க்கரை சேர்ந்த மாவுப் பலகாரங்களை வெறும் ருசிக்காக மிதமிஞ்சிப் புசிக்கப் பழகி விடுகிறோம்?

நம்முடைய உடல் நலம், சமூக, மனச் சூழ் நிலையையும் பொறுத்திருக்கிறது. மனக் கிளர்ச்சி, பழக்க வழக்கங்களை ஓயாமல் அடிக்கடி மாற்றுவது, அளவின்றிச் சினிமா ரேடியோ உபயோகித்தல், இரைச்சல், வீண் கவலைகள் இவற்றினின்றும் நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும். உடல், மன ஒழுக்க சம்பந்தமான அன்றாட முயற்சி, உண்மை பேணுதல், தன் ஆணவமில்லாமல் பாடுபடுதல், இவை சம்பந்தமாகக் கண்டிப்பான நியதிகளை நம் உள்மனம் ஏற்குமாறு செய்ய வேண்டும்.

முடிவாக: உடல் நலமும் மன நலமு மட்டுமே எல்லாம் ஆகிவிடா. ஒவ்வொருவருக்கும் தம்முள் மறைந்து கிடக்கும் திறமைகளை நன்கு வளர்த்துக் கொள்ளவும், வாழ்க்கை நாடகத்தில் தன் பாகத்தை—அது சிறிதாயினும் சரி, பெரிதாயினும் சரி,—திறமையாக நடிக்கவும் போதிய சக்தியை ஆரோக்கியம் அளிக்கிறது.

இந்த விஷயங்களை எல்லாம் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நம் உடல் நலத்துக்காகப் பிறர் பாடுபடுவது முடியாத காரியம். நமக்கு நாமே துணை. நம்மைப்பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ளவும், அந்த அறிவை நம் ஒவ்வொருவரின் தேவைகளுக்கும் ஏற்றவாறு, பொருந்திய முறையில், பயன்படுத்தவும் முயலவேண்டும். இதற்குச் சுய முயற்சியும், ஒழுங்கும் அவசியம். இந்த முயற்சிக் கேற்ற பலன் நிச்சயமாய்க் கிடைக்கும். அனேகர் இதனல் நோயினின்றும் விடுதலை பெறுவர். உடலுறுப்புக்களினுடையவும் மனத்தினுடையவும் செய்கைகளில் ஒரு தெளிவு ஏற்படும். நிறைந்த ஆரோக்கியத்தையும், வாழ்வில் ஓர் ஆழ்ந்த இன்பத்தையும் உடல் நலம் நம் எல்லோருக்கும் அளிக்கும்.

✲

மேதையாவது எப்படி?

உனது காம இச்சைகளை நன்றாய் அடக்கியாளப் பிரயத்தனப்படு. அதில் ஜயமடைந்தால் சரீரத்தில் ஒருவித மாறுபாடு உண்டாகும். அதாவது, இந்திரிய சக்திகளை ஆத்ம விஷயத்தில் பிரவர்த்தி செய்யும் "மேதை" என்ற ஒரு நாடி வளருகிறது. இந்த "மேதை" நாடி வளர்ச்சியடைந்த பிறகுதான் ஆத்ம விஷயமான உயர்ந்த ஞானம் உண்டாகும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

செல்லும் செல்வம்: பாலத்தின் கீழே ஜலம் தங்கி நில்லாமல் எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கிறது. அதுபோல, பணமானது பற்றற்றவர்கள் கையினின்றும் செலவாய்கொண்டிருக்குமே யல்லாது, அவர்களால் ஒருபோதும் சேமித்து வைக்கப்படுவதில்லை.

கவியரசி சரோஜினி

'பாகோ'

பொன்னும் மணியும் முத்தும் வைத்திழைத்த பூங்கவிதை ஏந்தி, நவ யுகத்தின் தலைவாயிலில் நிற்கும் கவியரசி சரோஜினி தேவியின் 66-வது ஆண்டு நிறைவு விழாவை 1946, பிப்ரவரி மாதம் 13-ம் தேதி நாடெங்கும் மக்கள் குதூகலத்துடன் கொண்டாடினார்கள்.

சரோஜினி தேவி, விழிப்புற்ற இந்தியாவின் வீராங்கனை. அதன் விடுதலை எழுச்சியின் வீர முரசு. கொந்தளிக்கும் தேசிய உணர்ச்சிக்குக் கவிதா சொரூபம் கொடுத்தவர் அவர். சாரமற்றுச் சப்பென்றிருந்த அரசியலுக்கு உயிரும் சுவையும் ஊட்டியவர். ஆத்திரமும் துவேஷமும் விஷங் கலக்கும் அரசியலில், அன்பையும் அமைதியையும் பரப்ப முயல்பவர். துணிவும், தீவிரமும், தைரியமும் படைத்த அவர் இளைய பாரதத்தின் தலைமை தாங்குவது மிகவும் பொருத்தமே. தேசியமாகட்டும், மாதர் முன்னேற்றம், இளைஞர், தொழிலாளர் இயக்கங்கள், கல்வி, கலை, விளையாட்டு, — எதுவாகட்டும், அவர் பங்குகொள்ளாத, சேர்ந்து பாடுபடாத துறையோ, இயக்கமோ இல்லை என்று சொல்லி விடலாம்.

ரௌத்ர தாண்டவம் ஆடி, உலகை அல்லோல கல்லோலப் படுத்தி விட்ட அணுக்குண்டு யுத்தத்தின் விளைவாக இன்று நம்மை வாட்டி வதைக்கிற தொல்லைகளைப் போக்கி, நாம் உய்வதற்கு வழி செய்யக் கவியரசி சரோஜினி போன்றவர்கள் நம்மிடையே இருப்பது நமது பாக்கியமே. அவரைப் பற்றிய சிறு சிந்தனை இது.

சுகபோகத்தின் மடியில் வளர்ந்தவரானாலும், அவர் அதற்கு என்றும் அடிமையல்ல. வாழ்வின் பல்வேறு இன்பங்களையும் அவர் பாசக் கண்ணோடு பார்ப்பதில்லை; கவிகளுக்கே உரித்தான ரசனை உணர்வோடுதான் அவற்றை அவர் அனுபவிக்கிறார்.

அவர் வெற்றியின் ரகசியம், அவருடைய தளராத தன்னம்பிக்கையும், மகிழ்ச்சி வற்றாத உள்ளமும்தான். அவர் உயர்ந்த நகைச் சுவை உடையவர். புன்னகைதான் அவர் பூண்டுள்ள பொன் அணியாகும். பூரண மலர்ச்சி பெற்ற உள்ளம் மகிழ்ச்சியை ஒலி பரப்பிச் சூழ் நிலையில் உயிர்த் துடிப்பும், உத்வேகமும் ஏற்றுகிறது. உடன் பழகுவோரிடை தன் அசையாத நம்பிக்கையை வேரூன்ற நட்டுவிடும் ஆற்றலுள்ளவர்.

தந்த மாளிகையில், சுந்தரச் சோலைகளில், விழித்திருந்தே விந்தைக் கனவு பல காணும் கவிக்குயில், அழுக்குப் பிடித்த அரசியலில் தலையிடுமாறு நேர்ந்ததற்குத் தாய் நாட்டின் திக்கற்ற நிலையே காரணமாகும். அவரது கவி வீணை அரசியற் புழுதியில் நலங்கெடக் கிடப்பதால் நாட்டிற்கும், கவி உலகிற்கும் மகத்தான நஷ்டமே என்று சொல்ல வேண்டுவதில்லை.

சரோஜினி தேவி ஜீவகளை ததும்பும் ஒரு கவிஞர். நனவிலே கனவின் மெருகேற்றி அற்புதப் பண் பல பாடியுள்ளார். சுட்டும் சுடர்விழி, வெள்ளி வான், நக்ஷத்

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!

கண்ணாம்பா



சருமப் பாதுகாப்பிற்கு லக்ஸ் சோப் முறையையே தான் பின்பற்றுவதாக கண்ணாம்பா கூறுகிறார். மாசு மறுவின்றிச் சருமத்தை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ள இந்தச் சுகந்த அழகைத் தரும் சோப்பின் நுரையில் நம்பிக்கை வைக்கக் கூடுமென்று, மற்ற இந்திய சினிமா நட்சத்திரங்களைப் போலவே இவரும் கண்டறிந்திருக்கிறார். அறிவாளியானபடியால், ஒழுங்காக லக்ஸ் சோப்பை உபயோகிக்க இவர் தவறுவதில்லை.

லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 132-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

A BRIGHT NEW FIX-UP

For the Delightfully Refreshing Soap

KERALA SOAP INSTITUTE, CALICUT

FAS-193

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கள்ளிக்கோட்டை

பொன்விழாவின் முன்னிலை

பண்டிட். டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

பலமிழந்தவர்களுக்கு
மீண்டும் புத்துயிரளிக்கும்
சிறந்த டானிக் என புகழ்
பெற்று ஜீவாம்ருதம் இன்
னும் இரண்டு வருடங்களில்
தங்க விழா
கொண்டாடும்

ஆயுர்வேதாஸ்ரமம், மதராஸ்.

திரங்கள், சோலை மலரொளி, சுந்தரப் புன்னகை, நீலக் கடலலை, நெஞ்சின் குமுறல்கள் - எல்லாம் நிழலும் ஒளியும் போல அவர் கவிகளில் பின்னிப் பிணைந்துள்ளன.

மண்ணும், மதுவும், மலரும், மங்கையும் மகிழ்ச்சியும் அவர் கவிகளில் பளிச் சிடுகின்றன.

கருத்துச் செறிவும், கற்பனை வளமும், வியத்தகு சொல்லாட்சியும், வேகமும் நிறைந்து, வான வில்லின் வண்ணச் சாயைகள் கொண்டு, சௌந்தர்யத்தின் சம்பூரணப் பிரதிமைகளாக—அழகின் அமர சிருஷ்டிகளாக,—அவர் கவிகள் பொலிகின்றன.

அவர் ஓர் அழகுக் கவிஞர். கவிதை அவர் உயிர் மூச்சு. தேச பக்தி அவர் உயிர்ப்பின் லட்சியம். 'சொல்லினைத் தேனிற் குழைத்து' அநாயாசமாய்க் கவி பாடுவது போலவே கடல் மடை திறந்தாற் போல், கேட்பவர் அறிவையும், உணர்வையும் ஒருங்கே ஈர்க்கும் வகையில் பிரசங்கம் செய்வதிலும் அவர் இணையற்றவர்.

அவர் திறமைகளின் சேர்க்கை; சிறப்புக்களின் உறைவிடம். நாகரிகம் பூத்த நளின மென் மலர். பரந்த அறிவும், விரிந்த மனமும், உயர்ந்த குணமும், நிறைந்த புலமையும், நுண்ணிய கலை யுள்ளமும், கருணையும் படைத்து ஒளிரும் அவர் மாதர் குல மாணிக்கமாவார். பாரதியார் கனவு கண்ட "புதுமைப் பெண்" களின் முதல் பதிப்பு அவர்.

✲

அட, பாவமே!

நவீன காலத்துச் சிறுமி ஒருத்தி, அவள் எங்கே இருந்து வந்தாள் என்று தன் தாயைப் பார்த்துக் கேட்டாள். "கடவுள் உன்னை இங்கே அனுப்பினார்" என்ற வழக்கமான பதில் வந்தது.

"நீ எப்படி இங்கே வந்தாய், அம்மா? உன்னையும் கடவுள் தான் அனுப்பினாரோ?"

"ஆமாமடி, கண்ணே."

"பாட்டியை?"

"அவளையுந்தான்."

"பாட்டிக்கு அம்மாவை?"

"ஆமாம், கண்ணே."

"அட, பாவமே! அப்போ, 200 வருஷமாக இந்தக் குடும்பத்திலே ஆண் பெண் சேர்க்கையே இருந்ததில்லையா, என்ன?"

— மேரி வேர் டென்னெட்

நபிகள் நாயகம்

முகம்மது நபியை, முதல் முதலில் அலியும், அதைக் காட்டிலும் ஆச்சர்யந்தோன்றும்படி கதீஜா பீவியும், கடவுளின் முக்கிய பக்தரென்றும், தெய்வ அருள் பெற்றவரென்றும், பூ மண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்த மஹானென்றும் அங்கீகாரம் செய்துகொண்டதைக் கவனிக்குமிடத்தே, அவர் நிகரில்லாத ஞானி யென்பதும், பக்தகுல சிரோமணி என்பதும் மிகத் தெளிவாக விளங்குகிறது.

— சி. சுப்பிரமணிய பாரதியார்

புத்தக உலகம்

கண்ணனும் காந்தாரியும்: ஆசிரியர்: பேராசிரியர் கு. நா. சுந்தரேசன், பி. ஏ. (ஆனர்ஸ்). வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சிறுப்பள்ளி. கிரௌன் 1×8. 82 பக்கம். விலை ரூ. 1-4.0.

"கண்ணனும் காந்தாரியும்" என்ற நாடகம் பாரதத்திலுள்ள ஒரு கதையைப் புதுப் போக்கில் சொல்லுகிறது. "மாற்றுந் தாய்" என்பது தற்காலச் சமூக நிகழ்ச்சியைச் சித்தரிக்கிறது. "கிழியும் கிளியும்" என்பது பிராமணன் ஒருவன் பரிசு பெற நக்கீரர் பாட்டிசைத்து உதவிய நிகழ்ச்சியைப் புதுப் போக்கில் சொல்லுகிறது. நாடகங்கள் இயல்பாயில்லை. தமிழ் நடை கடினமாயிருப்பதோடு, இங்கிலீஷ் மொழி பெயர்ப்புப் போலவு மிருக்கிறது. விநோதமான சொல்லமைப்புக்களும் சொற்றொடர்களும் விஷயத்தை விளங்கிக் கொள்வதில் தடை செய்கின்றன.

பனித்துளி: ஆசிரியர்: ஆர். ஷண்முகசுந்தரம். வெளியிட்டோர்: புது மலர் நிலையம், கோயமுத்தூர். விற்பனை உரிமை: காசிநாத் அண் கோ, பெரிய கடை வீதி, கோயமுத்தூர். கிரௌன் 1×8. 104 பக்கம். விலை ரூ. 1-4-0.

பரம்பரைப் பணக்காரருக்கும் புதுப் பணக்காரருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கை வைத்து எழுந்த நீண்ட சிறு கதை இது. நாவல் அல்ல. கதை அவ்வளவு கவர்ச்சியாயில்லை. பாத்திரங்களின் குண இயல்பு வெகு பொருத்தமாய், நயமாய்ச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சம்பாஷணைகள் இயற்கையாய்க் கச்சிதமாயிருக்கின்றன. ஆனால், பேச்சுப் பாஷையை அளவு கடந்து கையாண்டிருப்பதால், படிப்பதற்கு மகா சிரமமாயிருக்கிறது. "பனித்துளி" என்ற தலைப்பு இதற்கு எப்படிப்பொருந்துகிறது என்பது, ஒரு முறைக்கு இரு முறை சிரமப்பட்டுப் படித்தும் விளங்கவில்லை.

ஜெய காதல் கீதம்: ருஷ்யப் பேராசிரியர் துர்கனேவ் எழுதியது. "காங்கேயன்" தமிழாக்கியது. வெளியிட்டோர்: பவானி பிரசுரம், ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம். கிரௌன் 1×8. 40 பக்கம். விலை அணா எட்டு.

நெருங்கிய நண்பர் இருவர் ஒரே பெண்ணைக் காதலிக்கிறார்கள். ஒருவன் அவளை மணந்துகொள்கிறான். மற்றவன், மனம் ஒடிந்து தூர தேசம் போய்விடுகிறான். பின்னால், மந்திர தந்திரங்களெல்லாம் கற்றுக்கொண்டு, பழைய நண்பனிடம் வருகிறான். நண்பன் மனைவிமேல் அவனுக்குள்ள காதலை அவனால் அடக்க முடியவில்லை. மந்திர சக்தியால் நண்பன் மனைவியை வசப்படுத்த முயலுகிறான். இதை அறிந்த கணவன் அவனைக் கொன்றுவிடுகிறான். ஆனால், இறந்தவன் எப்படியோ பிழைத்துக் கொண்டு வெளிக் கிளம்பிப் போய் விடுகிறான். மொழி பெயர்ப்பு நயமாயிருக்கிறது.

இதுவா சோஷலிஸம்?: ஆசிரியர்: மினு மஸானி. மொழி பெயர்ப்பு: கே. அருணாசலம். வெளியிட்டோர் சக்தி காரியாலம், ராயப்பேட்டை, சென்னை. கிரௌன் 1×8. 88 பக்கம். விலை ரூ. 1.

சோஷலிஸ்டாக இருந்த ஆசிரியர் பின்னால் சோஷலிஸ்ட் கொள்கை பிடிக்காமல் அதைக் கைவிட்டுவிட்டார். 'தற்கால சோஷலிஸத்துக்கு நிலைக்களனாயிருந்து வருகிற ருஷ்யா, அது முந்திப் போட்டிருந்த திட்டப்படி நடக்கத் தவறிவிட்டது. அதற்கு மாறாக, அது ஏகாதிபத்திய ஆசை பிடித்துத் திரிகிறது. ருஷ்யாவை இந்தியர் பின்பற்றக்கூடாது. மகாத்மா காந்தி கூறுகிற தர்மகர்த்தா (ராமராஜ்ய) முறைதான் நல்லது' என்று இதில் ஆசிரியர் மேற்கோள் காட்டி (வக்கீல் மாதிரி?) வாதிடுகிறார். மொழி பெயர்ப்பு நன்றாயிருக்கிறது.

மஸானிக்கு சோஷலிஸ்டின் பதில்: ஆசிரியர்: எம். ஜி. தேசாய், மொழி பெயர்ப்பு: ஆர். ராமநாதன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. கிரௌன் 1×8. 51 பக்கம். விலை அணா எட்டு.

மஸானியின் மேலே கண்ட புத்தகத்துக்கு எழுந்த இந்த மறுப்பில், சோஷலிஸம், ருஷ்யா பற்றிய உண்மைகளை மேற்கோள்களுடன் ஆசிரியர் விளக்குகிறார். வாதம் நன்றாயிருக்கிறது. ருஷ்யாவைப் பற்றிய புகழ்ச்சி, இரண்டோர் இடங்களில் பக்தி மயமாகிவிடுகிறது. மொழி பெயர்ப்பு நன்றாயிருக்கிறது.

விதி என்ன செய்யும்?: ஆசிரியர்: ஸ்ரீமதி கிருஷ்ணா ஹத்தீஸிங். மொழி பெயர்த்தவர்: ஆ. காசிவிஸ்வநாதன். வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. கிரௌன் 1×8. 244 பக்கம். விலை ரூ. 4.

தேச விடுதலைக்காக நேரு குடும்பத்தினர் பட்ட பாடும், செய்துள்ள அரும் பெரும் தொண்டும் நாடறிந்த செய்தி மட்டு மல்ல; ஜவஹருடைய நூல்களின் மூலமும், விஜயலட்சு பண்டிட்டின் சமீப கால அமெரிக்க விஜயத்தின் மூலமும் உலகறிந்த செய்தியாகி விட்டது. இந்த நூலில், நேரு குடும்பத்தார் ஒருவரோடு ஒருவர் எப்படிப் பழகினார்கள், குடும்பம் பூராவுமே தேசப் பணியில் ஈடுபெறக் காரணமா யிருந்த சூழ்நிலை யாது, என்ற சொந்த விஷயங்கள் வெகு இனிமையாகவும், கலையுணர்ச்சியோடும் கூறப் பெற்றுள்ளன. இது நல்ல குடும்ப வரலாறு என்பதோ டல்லாமல், தற்கால அரசியல் போக்குகளுக்குக் காரணமாயிருந்த முற்கால அரசியல் அடிப்படைகளையும் குறிப்பாகத் தொட்டுச் செல்லுகின்றது. மூலத்தின் சுவை அனைத்தையும் ஒருங்கே தமிழில் கொண்டுவர மொழி பெயர்ப்பாளர் முயன்றிருக்கிறார். ஆங்கில வாக்கிய அமைப்பு முறை நெடுகிலும் விரவி நிற்கிறது. சில இடங்களில் தமிழ் நடை இன்னும் சரளமா யிருக்கலாம். பயனுள்ள இனிய நூல்.

திருக்குறள் நீதிக் கதைகள்: ஆசிரியர்: ம. சுந்தர சுப்பிரமணியன். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. கிரௌன் 1×8. 123 பக்கம். விலை ரூ. 1.

திருக்குறளில் இல்லற இயலில் உள்ள இருபத்து நாலு குறள் சூத்திரங்களுக்குப் பரிமேலழகர் உரையும், குறிப்பு உரையும் தந்து, குறளின் பொருளைச் சரியாய் மனத்தில் பதியவைப்பதற்காக வாய் மொழியாய் நெடுங்காலமாக வழங்கி வரும் கதைகளையும் ஆங்காங்கே இந்நூலின் ஆசிரியர் தந்திருக்கிறார். நல்ல புஸ்தகம். சொற்களும், சொல்லமைப்புக்களும் இன்னும் சரளமாயிருந்தால், சிறுவர்களுக்கு இது மிகவும் ஏற்ற புத்தகமாகும்.

எவருடைய வெற்றி? ஆசிரியர்: அவ்ங் தெய்ங். மொழி பெயர்ப்பு: செ. பஞ்சவர்ணன். கிரௌன் 1×16. 29 பக்கம். விலை ரூ. 1. (2) **சிறை:** ஆசிரியர்: பண்டித ஜவஹர்லால் நேரு. மொழிபெயர்ப்பு: சக்தி மோஹன், மு. சுப்பையா. கிரௌன் 1×16. 60 பக்கம். விலை ரூ. 2. (3) **புரட்சி:** நேத்தாஜியின் சொற்பொழிவுகள். மொழிபெயர்ப்பு: கோ. ராமகிருஷ்ணன். கிரௌன் 1×8. 30 பக்கம். விலை ரூ. 1. வெளியிட்டோர்: ஆஸாத் ஹிந்த் நூல் நிலையம், 93, மொகல் வீதி, இரங்கூன்.

கடல் கடந்து வாழும் நம்மவரை நேத்தாஜி சுபாஸ் சந்திர போஸ் எப்படித் தம்முடைய உயிர்த் துடிப்புள்ள சொற்களால் ஒன்று படுத்த முடிந்ததென்பதற்கு, பர்மாவில் வெளியான இந்தப் புத்தகங்கள் சான்று. பர்மியர் ஒருவர் உலகப் போரைப் பற்றிக் கூறுகிற சொற்கள், பர்மியருக்கும் நமக்கும் உள்ள பொது லட்சியத்தை விளக்குகின்றன. சிறை அனுபவங்களைப் பண்டித ஜவஹர் வழக்கம்போல் நயமாக உரைக்கிறார்.

உமர்கய்யாம்: (ருபயாத்): ஆக்கியோன்: சாமி சிதம்பரன். பூல்ஸ்

கேப் 1×8 61 பக்கம். கைக் காகிதம். விலை ரூ. 1.

உமர் கயாம் பாடிய ருபாயத் பாடல்களில் சிலவற்றைத் தழுவியும், சில பாடல்களின் கருத்தைத் தழுவியும், சில பாடல்களைப் புதிதாக இயற்றியும் உள்ள இந்தப் பாடல் தொகுதியின் ஆசிரியருடைய முயற்சி பாராட்டுதற் குரியது. பாடல்களில் கற்பனை இருக்கிறது. சொற்கள் பொருந்த அமைந்துள்ளன. உமர் கயாத்தையும், அவருடைய கவிதையையும் பற்றிய பயனுள்ள முன்னுரை ஒன்றையும் ஆசிரியர் தந்துள்ளார். நல்ல முயற்சி.

மதி: (முதல் புத்தகம்): பதிப்பாசிரியர்: பே. ந. குணச்சந்திரன். கிடைக்குமிடம்: 287, தம்பு செட்டித் தெரு, ஜி. டி. சென்னை. டெம்மி 1×8. 71 பக்கம் கைக் காகிதம். விலை அணா 8.

கிரேக்க தத்துவம், மொழி, இலக்கியம், கவிதை, ஆராய்ச்சி, அரசியல் சம்பந்தமான நல்ல கட்டுரைகளைக் கொண்டிருக்கிற மாதப் புத்தகம்.

ஆங்கிலம்

Numismatic Parallels of Kalidasa: ஆசிரியர்: சி. சிவராமமூர்த்தி, எம். ஏ. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. கிரௌன் 1×8. 40 பக்கம். விலை ரூ. 2.

இந்த அரிய ஒப்பு நோக்கு நூலுக்கு, சி. பி. ராமசாமி ஐயரவர்கள் கொடுத்திருக்கும் முகவுரையிலிருந்து, காளிதாசருடைய கவிதைகளால் உந்தப்பட்டு எழுந்த சிற்பம், நாணயத்தின்மீது பொறிக்கும் சித்திரம், ஆகியவை பற்றி ஆசிரியர் மிக நன்றாய் ஆராய்ந்திருக்கிறார் என்று தெரிகிறது. சிறந்த சித்திரக்காரராகிய ஆசிரியரே வரைந்த விளக்கப் படங்கள் நெடுகிலும் இருக்கின்றன. காளிதாசருடைய நூல்களிலிருந்து நெடுகிலும் சமஸ்கிருதத்தில் மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

Election Manifesto of the Communist Party of India: விலை 2 அணா. (2) Food for All: ஆசிரியர்: ஜி. அதிகாரி. விலை 4 அணா. (3) Jobs for All: ஆசிரியர்: பி. டி. ரானதிவ். விலை 4 அணா. (4) Death Pits In our land: ஆசிரியர்: தோழர் எஸ். ஏ. டாங்கே. விலை ½ அணா. (5) Rural Bengal in ruins: ஆசிரியர்: போவானி சென். விலை 8 அணா. (6) Indonesia's war of Independence: ஆசிரியர்: எஸ். மகமது. விலை 10 அணா. (7) Bhagat Singh and his Comrades: ஆசிரியர்: அஜோய் கோஷ். விலை 6 அணா. (8) Ghadar Heroes: ஆசிரியர்: ரந்திர் சிங். விலை 8 அணா. வெளியிட்டோர்: பீப்பிள்ஸ் பப்ளிஷிங் கம்பெனி, பம்பாய். கிடைக்குமிடம்: ஜனசக்தி பிரசுராலயம், 1-6, டேவிட்சன் தெரு, ஜி. டி., சென்னை.

நாட்டு நிலைமையையும், உலக நிலைமையையும், பாட்டாளி மக்கள் படும் அல்லல்களையும் உருக்கமாக எடுத்துக்காட்டும் அரிய வெளியீடுகள்.

88856

குரங்குத் திறம்

புகழ்பெற்ற உயிர் நூல் வல்லார் ஒருவர் குரங்கு ஒன்றுக்குப் பந்தாடக் கற்பிக்க முயன்றார். முடியவில்லை. கடைசியில் பந்தடி மட்டையுடன் குரங்கைத் தனியே அறையில் விட்டு வைத்தார்.

சில நிமிஷங்கள் கழிந்தன. உள்ளே குரங்கு என்ன செய்து கொண்டிருக்கிறதென்பதை அறிய ஆவல் கொண்டார். மெதுவாகக் குனிந்து, சப்தம் செய்யாமல், அறைக்கதவின் சாவித் துவாரம் வழியாக உள்ளே உற்று நோக்கினார்.

என்ன ஆச்சர்யம்! உள்ளே இருந்து ஒரு கண் தன்னை உற்று நோக்குவதை அவர் கண்டார்!

—போர்டு லாக்

இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பிடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிறதென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக்
காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்

L. 77-50 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED

உச்ச தொகை வரை சாத்தியமானதையெல்

என்று ரிஸர்வ் பாங்க்

“எதிர்காலத் தேவைகளுக்காகக் கொஞ்சம் சேர்த்து வைக்க விரும்பும் ஒரு எளியவரைப் பொறுத்தவரையில், இந்தியா கவர்ன்மெண்டாரால் வெளியிடப்படும் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளைவிடச் சிறந்ததும் பத்திரமானதுமான பணச் சேமிப்புச் சாதனம் வேறொன்றுமில்லை. உண்மையிலேயே, பணத்தை வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு அவை மிகச்சிறந்த சாதனங்களாகும். அதனால்தான், 5,000 ரூபாய் மதிப்புக்குமேல் இந்த ஸெர்டிபிகேட்டுகளை வாங்க யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த எல்லைவரையில் உங்களுக்குச் சாத்தியமானதை யெல்லாம் வாங்குங்கள் என்பதே நான் சொல்லக் கூடிய ஆலோசனையாகும்.”

C. D. Deshmukh

ஸர் சிந்தாமன் தேஷ்முக்
ஸி. ஐ. இ., இந்திய ரிஸர்வ் பாங்க் கவர்னர்.

நாஷனல் ஸேவிங்ஸ்

AC·IA·TM

யில் உங்களுக்குச்
லாம் வாங்குங்கள்

கவர்னர் சொல்லுகிறார்

பார்த்ததும் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000, அல்லது 5,000 ரூபாய்களுக்கு வாங்கலாம்.

2. எந்த ஒரு நபரும் 5000 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இவை மிகச் சிறந்தவைகளான படியால், எல்லாருக்கும் கிடைக்கும் பொருட்டு ஒருவருக்கு அவைகளை இன்ன மதிப்புவரையில்தான் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டுபேர் கூட்டாக 10,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகி விடுகிறது.

4. உரிய காலத்தில் இவைகளினால் கிடைக்கும் லாபம் $4\frac{1}{6}$ சதவீதம் தனிவட்டியாகும்.

5. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

6. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம்; ஆனால், நீர் இவைகளை ஷெ காலம் முழுவதும் வட்டிக்கு விட்டு வைத்திருந்தால், உமக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

7. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். சேர்க்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக்கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக்கொள்ளலாம்.

8. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும், தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உமது பணத்திலிருந்து 50 சதவீதம் லாபம் கிடைக்கும்படிச் செய்துகொள்ளவும்

ஸெர்டிபிகேட்டுகள் வாங்கவும்

Use
KESHA-MITRA
HAIR-OIL
(VEGETABLE)
A-LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு
கேசமித்திரா
ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மகூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் :: சென்னை

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்!

"SCABIOL"
Magic Cure for all Skin Diseases
ஸ்கேபியால்

சொறி சிரங்கு, முகப்பரு, வேனல்கட்டி,
கரப்பான், சேத்துப் புண் முதலியவை
களுக்கு இணையற்ற நிவாரணி

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் : THE MADURA COTTAGE INDUSTRIES
Manufacturers & Representatives
17, Perumal Tank Street, : MADURA

தமிழில்

தபால் மூலம்

ஆங்கிலம்

உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?

தெரியாவிடின்

சேருங்கள் ஸ்தெலா கலாசாலையில்

ஆங்கிலத்தில் பேச, வாசிக்க, எழுத குறைந்த செலவில் தமிழில் தபால் மூலம் ஆறே மாதங்களில் கற்பிக்கிறோம். இலங்கையில் ஆங்கிலம் தபால் மூலம் கற்பிப்பதில் ஸ்தெலா கலாசாலையே முதன்மையானது.
இலவச விபரப் புத்தகங்களுக்கு எழுதுக.

ஸ்தெலா கலாசாலை, ஜா-எல. சிலோன்

அரிய பொக்கிஷம்

★

		ரூ.	அ.
இந்திய சுயராஜ்யம்	காந்திஜி	1	0
என் சரிதம்	,,	3	0
நமது மொழிப் பிரசினை	,,	2	8
அறநூல்கள்	ராஜாஜி	5	0
கட்டுரைகள்	,,	4	8
கதைகள்	,,	4	8
உலக நிலை	,,	1	8
புதிய சீனா	சர்மாஜி	6	8
அரசியல்	,,	6	0
சோவியத் ருஷ்யா	,,	4	8
கதைகள் - 1	டால்ஸ்டாய்	2	4
கதைகள் - 2	,,	2	4
இந்தியா அடிமை யானது ஏன்?	,,	0	4
கடிதங்கள்	நேருஜி	2	0
மகாகவி பாரதியார்	வ. ரா.	3	0
சுந்தரி	,,	5	0
கோதைத் தீவு	,,	2	4
மலரும் மாலையும்	தே. வி.	6	0
நாஞ்சில் நாடு	,,	1	0
ஆசிய ஜோதி	,,	2	0
என் கதை	நாமக்கல் கவிஞர்	6	8
சங்கொலி	,,	3	0
மிருணாலவதி	முன்ஷி	3	0
மின்சாரத்தின் விந்தை	அப்புசாமி	2	8
பிரசங்கங்கள்	ஸ்ரீ விவேகானந்தர்	4	0
சம்பாஷணைகள்	,,	3	12

		ரூ.	
உபதேச மொழிகள்	ஸ்ரீ ராமகிருஷ்ணர்	3	
சதுரங்கம்	டாகுர்	1	
நாலு அத்யாயம்	,,	1	
வீட்டு வைத்தியர்	ராஜன்	7	
தமிழ் நாட்டில் காந்தி	,,	1	
மகுடபதி	கல்கி	4	
காவியமும் ஓவியமும்	கி. வா. ஜ.	2	
புது மெருகு	,,	1	
உடலுறுதி	சுத்தானந்தர்	2	
திருநூல்	,,	2	4
இளிச்சவாயன்	,,	3	0
சிலம்புச் செல்வம்	,,	3	0
காலத் தேர்	,,	1	4
மகாகவி தாந்தே	,,	1	8
புத்தர் கருணை	,,	1	4
காற்றிலே மிதந்த கவிதை	மு. அருணாசலம்	1	0
நிழலருமை வெய்யிலிலே	,,	1	4
திருமலை முருகன் பள்ளு	,,	2	0
திருவானைக்கா உலா	,,	2	8
அம்பிகாபதி கோவை	,,	4	0
விதி என்ன செய்யும்	ஹரீசிங்	4	0
சுதந்திரத்தின் தத்துவங்கள்	மாக்ஸ்வினி	2	0
அரவிந்தர்	கோதண்டராமன்	2	0
மஞ்சி விரட்டு	கோ. சுப்பு	3	8

[தபால் செலவு தனி]

★ சக்தி காரியாலயம் ★

ராயப்பேட்டை :: சென்னை

அழகிய விரலுக்கு அன்புடன்

பி. ஏ. ராஜூ செட்டியார் & பிரதர்

வைரம், தங்க நகை வியாபாரிகள்

பெரிய கடைத் தெரு. கோயமுத்தூர்

போன் : 218-A   தந்தி : ராஜா

Regd. No. M. 4162 SHAKTI March 1946

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி - கோயமுத்தூர்

நிர்வாக ஆசிரியர்: வை. கோவிந்தன் ஆசிரியர்: சுப. நாராயணன்

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras